உ

கணபதி துணை.

பத்துப்பாட்டு மூலம்.

4751.

இஃது

உத்தமதானபுரம்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

வே. சாமிநாதையரால்

பலபிரதிகளைக்கொண்டு பரிசோதித்து

நூதனமாகத் தாம் எழுதிய வரலாறு, பொருட்சுருக்கம்,

அரும்பத வகராதி என்பவற்றோடு

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

சென்னை:

கேசரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

[முதற் பதிப்பு]

பிரஜோத்பத்தி ௵ ஆவணிமீ

1931

Copyright Registered]

[விலை ரூபா ஒன்று.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRA
TIRUVANMIYUR, MADRAS-41

GF
0-,1B9
G1

இப்புத்தகத்திலடங்கியவை.

		பக்கம்.
1.	முகவுரை	v-viii
2.	பத்துப்பாட்டுக்களின் வரலாறும் பொருட் சுருக்கமும்	1-44
3.	பத்துப்பாட்டு மூலம்	க-ககஉ
க.	திருமுருகாற்றுப்படை	க
உ.	பொருநராற்றுப்படை	கரு
௩.	சிறுபாணாற்றுப்படை	உக
௪.	பெரும்பாணாற்றுப்படை	௩0
௫.	முல்லைப்பாட்டு	௪௫
௬.	மதுரைக்காஞ்சி	௪௬
௭.	நெடுநல்வாடை	௭உ
௮.	குறிஞ்சிப்பாட்டு	௭௮
௯.	பட்டினப்பாலை	௮௬
க0.	மலைபடுகடாம்	௯௫
4.	பத்துப்பாட்டு மூல அரும்பத அகராதி	கக௩-க௪0

உ

கணபதி துணை.

முகவுரை.

தேவாரம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பந்தணவு மெல்விரலாள் பாகன் றன்னைப்
பாடலோ டாடல் பயின்றான் றன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் றன்னைச்
செந்தமிழோ டாரியனைச் சீரி யானைத்
திருமார்பிற் புரிவெண்ணூ றிகழப் பூண்ட
அந்தணனை யாவடுதண் டுறையுண் மேய
அரனடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே.

திருச்சிற்றம்பலம்.

சங்கமருவிய நூற்றொகுதிகள் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பனவாம்; அவற்றுள் பத்துப்பாட்டாவன (1) திருமுருகாற்றுப்படை, (2) பொருந ராற்றுப்படை, (3) சிறுபாணாற்றுப்படை, (4) பெரும்பாணாற்றுப் படை, (5) முல்லைப்பாட்டு, (6) மதுரைக்காஞ்சி, (7) நெடுநல் வாடை, (8) குறிஞ்சிப்பாட்டு, (9) பட்டினப்பாலை, (10) மலைபடு கடாம் என்பன. இது, "முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை, பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய, கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப், பாலை கடாத்தொடும் பத்து" என்பதனால் விளங்கும். இவற்றையியற்றியவர்கள் நக்கீரனார் முதலிய நல்லிசைப்புலவர் எண்மர். அவர்களுடைய பெயர் களும் பாட்டுடைத்தலைவர்களுடைய பெயர்களும் அவ்வப்பாட் டின் இறுதியிலுள்ள வாக்கியத்தால் அறியலாகும். திருமுருகாற் றுப்படை நெடுநல்வாடையென்னும் இரண்டையும் இயற்றிய ஆசிரி

யர் நக்கீரர். பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலையென்னும் இரண்டையும் இயற்றியவர் உருத்திரங்கண்ணனார். பொருநராற்றுப் படை பட்டினப்பாலையென்னும் இரண்டும் கரிகால்வளவனையும், மதுரைக்காஞ்சி நெடுநல்வாடையென்னும் இரண்டும் பாண்டியன் நெடுஞ்செழியனையும் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டவை. இவற்றைத் தொகுத்தோர் சங்கப்புலவர்களே. இவை பாட்டெனவும் பாவெனவும் வழங்கும். இவற்றுள் அகத்திணைக்குரியன முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை யென்பன; ஏனைய ஏழும் புறத்திணைக்குரியன. இவ்வேழனுள் ஆற்றுப்படைகளாக உள்ளவை ஐந்து. இப்பாட்டுக்கள் பத்தும், மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியரது உரையைப்பெற்றுள்ளன. அவ்வுரையால் அதற்கு முன்பும் இவற்றிற்கு வேறுரை இருந்ததென்று தெரிகிறது. திருமுருகாற்றுப்படைக்குமட்டும் இவற்றையல்லாமல் வேறு உரையொன்று இக்காலத்து வழங்குகின்றது.

இவற்றின் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் பல ஏட்டுச் சுவடிகளின் உதவியால் ஆராயப்பெற்று முதன்முறையாக 1889 - ஆம் வருஷம் என்னால் வெளியிடப்பெற்றன. அப்பொழுது முதலிற்கிடைத்த சுவடிகளில் * மூலம் இல்லாமையால் உரையில் உள்ள மூலங்களாகிய ஒருமொழி தொடர்மொழிகளை இணைத்து மூலத்தை எழுதிக்கொண்டேன். ஏட்டுச்சுவடியிலுள்ள ஒரு நூலை ஆராய்ந்து வெளியிடுவதில் உண்டாகும் துன்பம் மிக அதிகம். அச்சுப்பிரதியிலுள்ளவாறு ஏட்டுச்சுவடி அமைந்திராது; சுவடியில் எழுதுவோரால் நேரும் பிழைகள் பல; குறியீடுகள், கொம்பு, கால், புள்ளி முதலியவை இரா; நெடிலுக்கும் குறிலுக்கும் வேறுபாடு தெரியாது; அடிகளின் வரையறைகளும் இரா; இதுமூலம், இஃது உரை, இது மேற்கோளென்று அறியவும் இயலாது; எல்லாம் ஒன்றாக எழுதப்பட்டிருக்கும். இவ்வளவு கஷ்டங்களோடு மூலமும் இல்லையெனின் அந்நூலைச்செவ்வியுற அமைப்பது இத்துணை மனக்கலக்கத்தையும் தளர்ச்சியையும் உண்டாக்குமென்பதை அறிஞர்கள் நன்கு அறிவார்கள். எனவே, அவ்வாறு ஆராய்ந்து மூலத்தைத் தொகுப்பதில் எனக்குண்டான துன்பம் அளவிடற்கரியது. சில வாரங்களுக்கு முன்பு இறைவன்

* பலராற் பாராயணம் செய்யப்படும் திருமுருகாற்றுப்படையின் மூலம் தமிழ்நாட்டில் முன்புதனியாகவே வழங்கிவந்தது.

திருவருளால் இப்பத்துப்பாட்டின் மூலமும் உரையும் மூன்ருவது முறையாக வெளிவந்துள்ளன.

சில நண்பர்கள் மூலத்தைமட்டும் தனியே பதிப்பித்தல் நல மென்று சொன்னூர்கள். எனக்கும் அங்ஙனம் செய்யவேண்டு மென்ற எண்ணம் நெடுநாளாக இருந்தது. அதனல் இப்போது வெளியிடலானேன்.

இப்பதிப்பில் பத்துப்பாட்டுக்களுள் ஒவ்வொன்றைப்பற்றிய வரலாறும், பொருட்சுருக்கமும், அரும்பத அகராதியும் தனித் தனியே எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளன; பொருட்சுருக்கம் பெரும்பாலும் நச்சினர்க்கினியரது உரையைத் தழுவியும், சில பயன் கருதிச் சிறுபான்மை வேறுபடுத்தியும், பாட்டின் கருத்து விளங்கவேண்டுமென்று கருதி எச்சங்களை முற்றுக்கிச் சிறிய வாக்கியங்களாக அமைத்தும், இன்னும் சில வேறுபாடுகள் செய்தும் ஒருவாறு எழுதப்பட்டது.

இந்த 42 - வருஷங்களாகப் பத்துப்பாட்டு உரையுடன் தமிழ் நாட்டில் உலவி வருகின்றமையின் இவற்றின் பெருமையைப் பெரும்பான்மையோர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள். இவற்றி லுள்ள சுவைநிரம்பிய அடிகளை மனனம் செய்யவும் மூலத்தை மட்டும் படித்து இன்புறவும் பலர் விரும்புதல்கூடும்.

மூலபாடத்தைப் பயிலுதல் தமிழ்நாட்டில் தொன்று தொட்டுவந்த பழக்கமாகும். வித்துவான்கள் இலக்கணங்களை யும் நிகண்டுகளையும் இலக்கியங்களில் மிக்க சுவையுள்ள பகுதிகளை யும் மனனம்செய்து வேண்டியபொழுது அவற்றைப் பிறர்க்குச் சொல்லியும் தாமே நினைந்தும் இன்புற்றுவந்தார்கள்; "நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல், பாடம் போற்றல்" (நன்னூல், பாயி ரம்) என்பதும், "படியில் கல்வி விரும்பினேன் பாடம் போற்று மதுபோல" (பிரபுலிங்கலீலை) என்பதும், "சொன்மூலமறந்தவர்க் கென் உரையேறுமோ" (கோடீச்சுரக்கோவை) என்பதும் இங்கே அறிதற்குரியன. இவற்ருல் மூலபாடத்தின் சிறப்பும் அவற்றை மனனம் செய்யும் பழைய வழக்கமும் புலப்படுகின்றன.

பத்துப்பாட்டைப்பற்றிய பிறவரலாறுகளையும், ஆராய்ச்சி யையும், பாடினோர், பாடப்பட்டோர்களின் வரலாறு முதலியவற் றையும் உரையோடுகூடிய பதிப்பிற் காணலாம்.

இதனைப் பதிப்பித்துவருங்காலத்தில் உடனிருந்து ஒப்பு நோக்குதல் முதலிய உதவிகளைச்செய்து வந்தவர்கள் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி, வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், மோகனூர்த் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி, கி. வா. ஜகந்நாதையரும் ஆவார்கள்.

இன்னும் நன்றாக ஆராய்ச்சி செய்யவேண்டுமென்னும் விருப்பம் மிகுதியாக இருந்தும் என்னுடைய முதுமைப் பருவமும் அதற்குத் துணை செய்துவரும் பிணி முதலியனவும் அவ்வாறு செய்ய இடங்கொடாமையால் அன்பர்கள் இதிற் காணப்படும் குற்றங்களைப் பொறுத்துக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

திருச்சிற்றம்பலம்.

“குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே!”

திருச்சிற்றம்பலம்.

‘தியாகராஜ விலாஸம்’
திருவேட்டீசுவரன்பேட்டை.
5—9—31.

இங்ஙனம்
வே. சாமிநாதையர்

4751.
III. 1 (உளி).

பத்துப்பாட்டுக்களின் வரலாறும் பொருட்சுருக்கமும்.

க. திருமுருகாற்றுப்படை: இது புலவராற்றுப்படை யெனவும் வழங்கும். முருகக்கடவுளுடைய திருவருள் பெற்ருெரு புலவன் எதிரேவந்த மற்ருெரு புலவனுடைய இயல்பைக் கண்டு இரங்கி அவனை நோக்கி அக்கடவுள் இன்ன இன்ன இடங்களி லெழுந்தருளி யிருப்பார், இன்ன இன்ன இயல்பை யுடையவர், இன்னவாறு சென்று இன்னவாறு வழிபடின் அவருடைய திருவருளைப் பெறலாமென்று கூறி அவனை அவர்பாற் செலுத்தியதாக மதுரைக்கணக்காயனர் மகனர் நக்கீரனாராற் பாடப்பெற்றது. இந்நூல் பதினேராந்திருமுறையில் தொகுக்கப்பட்ட பிரபந்தங்களிள் வரிசையிற் சேர்க்கப்பெற்றுள்ளது. முருகக்கடவுளுடைய திருவருளைப்பெற விரும்புவோர் இதனை நியமமாக அன்புடன் பாராயணம் பண்ணினல் எண்ணியவை சித்திக்குமென்றும் இது கண்கூடென்றும் பெரியோர் கூறுவர். இதற்கும் பிற ஆற்றுப்படைகளுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. இதன் பொருட் சுருக்கம் வருமாறு:—

புலவ! சூரியனைப்போன்ற ஒளியையுடைய திருமேனி, சார்ந்தாரைக் காத்தருளும் திருவடிகள், பகைவரை யடக்கும் திருக்கரங்கள் என்பவற்றை உடையவரும், தெய்வயானையாருடைய மணளரும், செங்கடப்ப மாலையை யணிந்த மார்பினையும் காந்தட்கண்ணியைச் சூடின திருமுடிகளையும் உடையவரும், வேற்படையினல் சூரன் முதலிய அசுரர்களை அழித்தவருமாகிய முருகக்கடவுளுடைய திருவடியை அடையும் நினைவோடு அவர்பாற் செல்லுதலை நீ விரும்பினையாயின், இப்பொழுதே நீ நினைத்ததனைப் பெறுவாய்; அவர் உறையும் இடங்களைக் கூறுவேன்; கேட்பாயாக: அவர் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளி இருக்கின்றார். அது, வெற்றிக்கொடியையுடைய பகைவரை மகளிராக எண்ணிக் கட்டிய பந்துகளும் பாவைகளும் தூங்கப்பெற்ற மதில் வாயிலையும் மாடங்கள் மலிந்த வீதிகளையும் உடைய மதுரைக்கு மேற்கேயுள்ளது. அங்கே சுனையில் மலர்ந்த மலர்களில் வண்டினங்கள் ஒலியாநிற்கும்.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

அதுவன்றிப் பிணிமுகமென்னும்யானையை ஊர்ந்து உலகத்திலுள்ள குற்றங்களைப் போக்குதற்கு ஒளி வீசுதல் முதலிய ஆறுவகையான செயல்களை இயற்றும் ஆறு திருமுகங்களும் அவற்றிற்கேற்ற செயல்களைச் செய்யும் பன்னிரண்டு திருக்கரங்களும் விளங்க, பல வாத்தியங்கள் ஒலிப்ப, துவசத்திலுள்ள மயில் அகவ, ஆகாயத்தின்வழியே சென்று திருச்சீரலைவாயென்னும் படைவீட்டில் தங்குதலும் அவருக்கு இயல்பு.

தெய்வயானையாருடன் திருவாவினன்குடியிலும் அவர் வீற்றிருப்பார். அவரைத் தரிசித்தற்காக முனிவர்கள் முன்னே செல்வார்கள்; அம்முனிவர்கள் சீரையாகிய உடையையும் நரைமுடியையும் தூய உருவத்தையும் என்பு புலப்படும் உடம்பினையும் செற்றம் நீக்கிய மனத்தினையும் காம முதலியவற்றைப்போக்கிய விரதத்தையும் துன்பத்தையறியாத இயல்பினையும் உடையவர்கள்; அவர்களுக்குப்பின் தெய்வமங்கையர்களும், திருமாலும், உருத்திரனும், இந்திரனும், தேவர்கள் முப்பத்துமூவரும், பதினெண்கணங்களும் தத்தம் குறைகளை நீக்கிக்கொள்ளுதற்காக ஆகாயவழியேவந்து தரிசிப்பார்கள்.

அத்தலத்தையன்றித் திருவேரகமென்னும் திருப்பதியிலும் அவர் எழுந்தருளியிருப்பார்; அங்கே, ஓதல் முதலிய ஆறுவகைச் செயல்களையும் சிறந்த குடிப்பிறப்பையும் நாற்பத்தெட்டுப்பிராயம் வரையிற் பிரமசரியவிரதங் காத்த கொள்கையையும் முத்தீச் செல்வத்தையும் உடைய அந்தணர்கள் நீராடி ஈரமாகிய உடையினைக் கிடந்தவாறே புலர உடுத்து மலரேந்தி அவரை வழிபடுவார்கள்.

அன்றி மலைகள்தோறும் விளையாடுதலும் அவருக்கு உரிய இயல்பு; அம்மலைகளில் வேடர்கள் அவருடைய திருவுளமுவப்பக் குரவைக்கூத்தாடுவார்கள். அவர், அங்கே வெறியாடும்படிமத்தான் தொடுத்த கண்ணியை அணிந்து, சிவந்த ஆடையை உடுத்துக் காதில் அசோகந்தளிரைச் செருகிக்கொண்டு, கச்சு கழல் வெட்சிமாலை யென்பவற்றைப் புனைந்து வேய்ங்குழல் முதலியவற்றை உடையவராகி வீற்றிருப்பார்; பின்னும் ஆடு, மயில் முதலிய வாகனங்களை ஊர்ந்துவருவார்; சேவற்கொடியைத் தாங்கித் தொடியையணிந்து நாலவிட்ட துகில் விளங்க உரிய மகளிரைத் தம் திருக்கரங்களால் தழுவி அம்மகளிர்க்குத் தலைக்கை தந்து விளையாடுவார்.

அம்மலைகளையன்றியும், தினையரிசியையும் மலரையும் சிதறிப் பலிகொடுத்துக் கோழிக்கொடியை எடுத்துத் தம்மை வழிபடும் அன்பர்களால் ஊர்கள்தோறும் நடத்தப்படும் விழாக்களிலும், அடியவர் துதிக்கின்ற இடங்களிலும், வேலன் வெறியாடுங் களத்திலும், காடு சோலை ஆற்றிடைக்குறை ஆறு குளம் சதுக்கம் சந்தி கடப்பமரம் மன்றம் பொதியில் கந்துடைநிலை முதலிய இடங்களிலும் அவர் எழுந்தருளியிருப்பார். சில இடங்களில், கொடியை எடுத்து நெய்யையும் வெண்சிறுகடுகையும் பூசிக் கும்பிட்டு மலர்களைத் தூவி இரண்டு உடைகளை உடுத்து நூலைக் கட்டிப் பொரியைச் சிதறிப் பலிகொடுத்துச் சிறுபசுமஞ்சளொடு மணம் பொருந்திய பொருள்களைத் தெளித்து அலரிமாலையை நாலவிட்டு மலையைச்சார்ந்த ஊர்களை வாழ்த்தித் தூபங் கொடுத்துக் குறிஞ்சிப் பண்ணைப்பாடி இனிய வாத்தியங்கள் ஒலிப்ப வெறியாடும் குறமகள் அவரை வழிப்படுத்துவாள்; பலர் பல கொம்புகளை ஊதி மணியை ஒலித்துப் பிணிமுகத்தை வாழ்த்துவார்கள்; அவ்வாறு வேண்டுவார் வேண்டியவாறு வழிபட அங்கங்கே எழுந்தருளியிருப்பார்.

மேற்கூறிய இடங்களுள்ளே நீ எங்கே சென்று அவரைத் தரிசித்தாலும் முகமலர்ந்து துதித்துக் கைதொழுது அடிவணங்கி, "கார்த்திகேய! சிவகுமார! மலைமகள் மகனே! பகைவர்க்குக் கூற்றுவன்போல்வாய்! கொற்றவை சிறுவ! தேவர்கள் படைக்குத் தலைவ! நூலறி புலவ! அந்தணர் செல்வமே! சான்றோரால் புகழப்படுபவ! வள்ளிநாயகிக்கும் தெய்வயானைக்கும் கணவ! வேற்படையை யேந்திய கரத்தை யுடையாய்! கிரௌஞ்சகிரியை யழித்தோய்! குறிஞ்சிக்கிழவ! முருக! அன்பர்களுக்கு அருள் செய்வோய்! அஞ்சினோரைப் பாதுகாக்கும் சேயே! பெரியோர் போற்றுகின்ற கடவுளே! சூரன் குலத்தை அழித்த வலியை யுடையோய்! ஒப்பற்றவனே!" எனத் துதிப்பாயாக; துதித்துப் பின்பு, "நின்னை அளவிட்டறிதல் உயிர்களுக்கு அரியதாதலால் நின்னுடைய திருவடிகளை நினைத்து வந்தேன்" என்று நின் கருத்தைக் கூறுவாயாக; அவ்வாறு கூறுமளவிலே அவருடைய ஏவலாளர்கள் அவர்பாற்சென்று, "நின்னாற்பாதுகாக்கத் தக்கவனும் அறிவுவாய்ந்தவனுமாகிய ஓர்இரவலன் நின் புகழை விரும்பி ஏத்தி இங்கே வந்திருக்கின்றான்" என்று விண்ணப்பம் செய்வார்கள்.

செய்யவே துகில்போல நுடங்கும் அருவியையுடைய பழமுதிர்சோலைக்கு உரியவரான முருகவேள் அஞ்சத்தக்க தம்முடைய நெடிய உருவைக் காட்டாமல் உன்கண்கள் பொறுக்குமளவினதாகிய இளமையையுடைய திருவுருவோடு எழுந்தருளி வந்து உன்னைநோக்கி, "நீ அஞ்சாதே ; உன்வரவை முன்னமே நானறிவேன்" என்று அன்பு நிரம்பிய மொழிகளைக் கூறி உலகத்தில் நீ ஒப்பில்லாத வனாக விளங்கும் வண்ணம் நீ விரும்பியதும் பிறரால் பெறுதற்கரியதுமான வீடுபேறாகிய பரிசிலை உனக்குத்தந்தருளுவார்.

உ. பொருநராற்றுப்படை: இது கரிகாற் பெருவளத்தானிடம் பெரும்பரிசில்களைப் பெற்றுவரும் பொருநனொருவன், வறிய நிலையுள்ளவனும் உபகாரிகளைத் தேடித் திரிபவனுமாகிய மற்றொரு பொருநனுக்குக் கரிகாற்பெருவளத்தானது நாட்டுவளம், வீரம், கொடை முதலியவற்றையும் அவன்பால் தான் சென்று பரிசில் பெற்ற விதத்தையும் கூறி அவனையடைந்து வறுமையை நீக்கிக்கொள்ளுமாறு சொல்லி அந்தப் பொருநனை விடுப்பதாக முடத்தாமக்கண்ணியார் பாடியது. இதன் பொருட்சுருக்கம் வருமாறு:—

ஒரு பெரிய ஊரில் நடந்த திருவிழாவிற்குச் சென்றுவிட்டு அதுமுடிந்த மறுநாட்கண்ணே வேறு ஊருக்குச் செல்லநினைந்த பொருநனே! விறலி பாலையாழை வாசித்துப் பாட அதற்கேற்பத் தடாரிப் பறையை நீ கொட்டிக் காடுறை கடவுளை வழிபட்டுப் பராய்க் கடனை முடித்தபின்பு அயலூருக்கு வேற்று வழியே சென்று விடாமல் என்னை எதிர்ப்பட்டது உன்னுடைய தவப் பயனே ஆகும். கூத்தர் தலைவ! ஏழிசைக்கிழவ! நான் சொல்வதை விரும்பிக் கேட்பாயாக: வறுமையால் வருந்திக் கரிந்த உன்னுடைய சுற்றத்தார்பசியும் உன்பசியும் நீங்கவேண்டின் தாமதியாமல் இப்பொழுதே நான் சொல்லுமிடத்தைக் குறித்து எழுவாயாக. யானும் முன்பு உன்னைப்போன்ற மிக்க வறிய நிலையிலிருந்தேன்; அதனாற் பழுத்த மரத்தைத் தேடிச்செல்லும் வௌவாலைப்போன்று கரிகாற் பெருவளத்தானை அடைய எண்ணினேன்; எண்ணி அவன் நகரத்திற்குச்சென்று இரவலரைத் தடைசெய்யாத அவன் அரண்மனைவாயிலிற் கவலையின்றிப் புகுந்தேன்; புகுந்து உள்ளே சென்றுநின்று தடாரிப்பறையை விடியற்காலத்தே

கொட்டினேன். அவ்வோசையைக்கேட்ட அவன் விரைந்து என்பால் வந்து என்னை நோக்கி இனிய உரைகளைக்கூறித் தனக்கு முன்னே இருக்கச்செய்து அன்போடு என் என்பும் உருகுமாறு மனங்கனிந்து பார்த்தான். பின்பு, ஈரும்பேனும் தங்கப்பெற்று வேர்வையால் நனைந்து பல தையல்களோடு இருந்த என் கந்தையை நீக்குவித்துக் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய இழையையுடையனவும் பூத்தொழில் மிக்கனவும் பாம்பின் உரிகளைப் போன்றனவுமாகிய மெல்லிய ஆடைகளை வழங்கி உடுத்திக் கொள்ளச்செய்தான். அப்பால் அழகிய மகளிர்கள் பொற்கலம் நிறைய இனியமதுவைப் பன்முறை வார்த்து வழங்க வழங்க நான் உண்டு உண்டு வழிவந்த களைப்பு நீங்கி மனச்செருக்கோடு அவன் அரண்மனையில் ஒருசார் இருந்தேன். அப்பொழுது மதுவுண்டதனால் உண்டான களி மயக்கம் இருந்ததேயன்றி வேறு துன்பம் என்பால் இலதாயிற்று. முதனாளிருந்த வறிய நிலையையும், என்னைக் கண்டோர் அடையாளம் கண்டுகொள்ள முடியாத தோற்றத்தோடு அன்றிருந்த நிலையையும் நினைந்து இது கனவோவென மருட்சியுற்றேன். அப்பொழுது கரிகால்வளவனுடைய ஏவலிளைஞர்கள் அவன் கட்டளைப்படி என்னையும் உடன் வந்தவர்களையும் அவன்பால் அழைத்து ஏகினார்கள்; சென்றநாங்கள் அவனுக்கு முன் செய்யவேண்டிய வழிபாடுகளைச் செய்திருந்தேம். பின்னர், அவன் இனிய ஊனுணவுகளை யாங்கள் உண்ணும்படி செய்வித்தான். அங்ஙனம் பலநாளுண்டிருந்தேம். அவ்வுணவில் எங்களுக்கு வெறுப்புண்டாயிற்று. அதனை யறிந்த அவன் வேறு பலவகையான உணவுகளை உண்ணச்செய்தான். இவ்வாறு பலநாள் உண்ணச்செய்து உபசரித்தபின் ஒருநாள் நெற்சோற்றை உண்பீர்களாக என்று இரந்துகொடுப்ப, முனைமுரியாத அரிசியாலாக்கிய சோற்றையும் வறையல் முதலியவற்றையும் மிகவுண்டோம். இவ்வாறு ஊனுணவையும் பிறவற்றையும் தின்றுதின்று எம்முடைய பற்கள் முனை மழுங்கின ; உணவின் மிகுதியால் மூச்சு விடவும் இயலவில்லை ; எந்த இழிந்த உணவேனும் கிடைக்குமோ வென எண்ணி முன்னம் அலைந்து திரிந்து ஏமாந்திருந்த எங்களுக்கு அத்தகைய உயர்ந்த உணவுகளில் வெறுப்பு உண்டாயிற்று. மிக்க வறிய நிலையில் ஊரிலிருந்த எம்மவர்களைக் காப்பாற்ற நினைந்து அவனை நோக்கி, "ஊருக்குச்செல்ல விடைதருக" என்று அச்சத்

தோடு மெல்லத் தெரிவித்தேம். அதைக்கேட்ட அவன் யாம் பிரிவதில் தனக்கு உடம்பாடில்லாமையால் சினந்தவன்போல் முதலிற் பார்த்து, "எங்களை விட்டுப்பிரிய உங்கள் மனம் துணிந்ததோ" எனக் கூறி யானைகள் பலவற்றையும் ஆடையணிகள் பலவற்றையும் கொடுத்தான். யான் அவற்றுள் வேண்டியவற்றை முகந்துகொண்டு வறுமை அடியோடு நீங்கப்பெற்று இப்பொழுது தான் வருகின்றேன்.

ஆதலால் நீங்களும், இளஞ்சேட்சென்னி புதல்வனாகிய அக் கரிகால் வளவனிடம் செல்லுமின்; அவன் முருகக்கடவுளைப் போன்றவன்; கருவிலே திருவுடையவன்; பிறந்ததுமுதல் நாடாட்சியை மேற்கொண்டவன் ; பிறந்தபொழுதே களிற்றைச் சிங்கக் குருளை அட்டாற்போல இளம்பருவத்திலேயே சேரனையும் பாண்டியனையும் ஒருங்கே வெண்ணிப்பறந்தலையிற் பொருது வென்றவன்; அத்தகைய கரிகால் வளவனை நீங்கள் அடைந்துதொழுது முன்நிற்பீர்களாக. அப்படி நிற்றலே அமையும்; உடனே, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தலென்னும் நால்வகை நிலங்கள் பொருந்தியதும், பஞ்ச காலத்திலும் பொய்யாது பெருகி வயல்களெல்லாம் வேலி ஒன்று ஆயிரம் விளையும்படி காவிரி பாதுகாக்கின்றதுமாகிய சோழநாட்டையுடைய அவன் உங்கள் கந்தைகளை நீக்கிப் பட்டுடைகளை நல்குவான். பூவிலுண்டாகிய இனியதேனைத் தினந்தோறும் பருகத் தருவான்; பொற்றாமரைப்பூவை உனக்குச் சூட்டுவான்; பொன்னரி மாலைகளையும் முத்து மாலைகளையும் விறலி அணியக் கொடுப்பான்; பின்பு, நான்கு வெண்குதிரைகள் பூட்டிய தந்தத்தாற் செய்த தேரில் உன்னை ஏற்றி யாழ்வாசிக்கும் பாணர்களுக்குச் செய்தற்குரிய முகமன்களை நினக்குச் செய்து பல வயல்களையுடைய நாட்டையும் யானைகளையும் தருவான். பெற்ற அவற்றை உடன்வந்தவர்களுக்குப் பகுத்துக் கொடுத்துவிட்டுப் புறப்படத் தொடங்குவீர்களாயின் விரைவில் உங்களை விடுக்க மனம்பொருந்தான். அவ்வாறு பரிசில்தரும் கரிகால்வளவனை அடைந்து வறுமை நீங்கிப் பெருஞ்செல்வத்தை அடைந்து வாழ்வாயாக.

௩. *சிறுபாணாற்றுப்படை: இஃது ஒய்மானாட்டு நல்லியக்

* பாணர்களில் சிறுபாணரென்றும் பெரும்பாணரென்றும் இரண்டு வகையினர் உண்டு.

கோடன்பாற் பரிசுபெற்ற பாணனொருவன் தன்னை எதிர்ப்பட்ட மற்றொரு பாணனுக்கு நல்லியக்கோடன்பால் தான் சென்று பரிசில் பெற்றதையும் போகும்வழியில் அவன் நாட்டுக் குடிமக்களால் உபசரிக்கப்பெறும் இயல்பையும் கூறி அவன்பாற் சென்று பரிசில் பெற்று வருமாறு அப்பாணனை ஆற்றுப்படுத்தியதாக இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. இதனை, "சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை" என்பர் தக்கயாகப் பரணி உரையாசிரியர். இதன் பொருட் சுருக்கம் வருமாறு:—

பாலைநிலத்தில் விறலியோடும் பாணர்களோடும் சிறியயாழை இடப்பக்கத்தே ஏந்தி வறுமை தூண்ட உலகத்துப் பரிசில் தருவாரை விரும்பிவரும் பாணனே! குடபுலவரசனும் இமயத்தில் விற்பொறிபொறித்தவனுமாகிய சேரனுக்குரிய வஞ்சிமாநகரும் பரிசில் தருவதிற் குறைந்தது; உமணர்களுடைய உப்புவண்டிகளோடு வந்து அவர்கள் வீட்டில் வளர்ந்த மந்திகள் கிளிஞ்சிற்குள் முத்தைவைத்து மூடி அவர்களுடைய குழந்தைகளோடு கிலுகிலுப்பையாடுகின்ற கொற்கைக்கோமானாகிய பாண்டியனுக்கு உரியதும் தமிழ்நிலைபெற்றதும் ஆகிய மதுரையும் பரிசிற்றிறத்திற் சிறிதாயிருக்கும்; அன்றி, வண்டுகள் இசைபாடும் தாமரை மலர்களையுடைய மருதநிலங்கள் நிறைந்த கிழக்கேயுள்ள நாட்டைக் காப்பவனாகிய சோழனுக்குரிய உறையூரும் பரிசில் தருவதிற் சிறிதாயிருக்கும்; ஆதலால் நீ அந்நகர்களை நோக்கிப் போதலை ஒழிவாயாக. நல்லியக்கோடன் என்னும் ஓர் உபகாரி இருக்கின்றான். அவன், (1) காட்டிலுள்ள மயிலுக்குக் கலிங்கத்தை அளித்தவனும் ஆவியர்குலத்திற் பிறந்தவனுமாகிய பேகன், (2) முல்லைக் கொடிக்குத் தனது பெரியதேரை அளித்தவனும் பறம்பு மலைக்குரியவனுமாகிய பாரி, (3) குதிரைகளோடு பல பரிசில்களை இரவலர்க்கீந்த காரி, (4) நாகமளித்த ஆடையைச் சிவபெருமானுக்கு அளித்த ஆய், (5) அமிர்தத்தின் தன்மையையுடைய இனிய நெல்லிக்கனியை ஒளவையாருக்கு அளித்த அதிகன், (6) தன்னைச்சார்ந்தோருக்கு வேண்டிய பண்டங்களைக் குறைவறக்கொடுத்த நள்ளி, (7) நல்ல நாடுகளைக் கூத்தர்களுக்குப் பரிசிலாக வழங்கியவனும் காரியொடு பொருதவனுமாகிய ஓரி என்கின்ற எழுவள்ளல்களும் மேற்கொண்டிருந்த கொடைப் பாரத்தைத் தானொருவனாகத் தாங்கியவன்; மாவிலங்கை யென்

னும் நகருக்குரிய அரசர் பலருள் ஓவியர் குலத்திற் பிறந்த வன்; பிடிக்கணங்களைப் பரிசிலர்க்குக் கொடுப்பவன்; பலவாத்தி யங்களையுடைய கூத்தர்களைப் புரப்பவன். அவனை அடைந்து பரிசில்பெறும் விருப்பத்தோடே அவனையும் அவன் மலைவளத் தையும் பாடிக்கொண்டு முன்பு ஒருநாள் யாம் சென்றேம். அதற்கு முன்பு எங்கள் வீட்டு அடுக்களையில் குட்டிகள் பால்குடித்தலைப் பொறாமல் வருந்தி நாய் குரைத்துக்கொண்டிருந்தது; காளான் பூத்த அடுப்பில் விறலி தன்னுடைய நகத்தால் கிள்ளிய குப்பைக் கீரையை உப்பின்றிச்சமைக்க, பிறர்காணுதபடி வாயிற் கதவைச் சார்த்திவிட்டுப் பெரிய சுற்றத்தோடு அதனை உண்டுவருந்தியிருந் தோம். அங்ஙனம் இருந்தயாம் அவன்பாற் சென்றமையால் தொன்றுதொட்ட பசியால் உண்டான வருத்தம் எங்களை விட்டு இப்பொழுது அடியோடு நீங்கிவிட்டது; யானைகளையும் தேர்களை யும் பரிசில்களாகப்பெற்று அவனிடத்திலிருந்துதான் இப்பொழுது வருகின்றேம்; நீயும் உன்சுற்றத்தாரும் அவனிடம் செல்வீர்களாக.

செல்லுங்கால் நெய்தல் நிலத்திலுள்ள அவனுடைய எயிற்பட்டினத்திலே தங்குவீர்களாயின் நுளைமகள் செய்த கள்ளைப் பரதவர் கொடுப்பார்கள்; அதனை உண்டபின் குழன்மீனைச் சுட்ட இறைச்சியையும் பெறுவீர்கள். அப் பட்டினத்தைவிட்டுவிட்டு முல்லை நிலத்திலுள்ள அவனது வேலூரை அடைந்தால் அங்கேயுள்ள எயிற்றியர் சமைத்த புளிங்கறியோடு கூடிய சோற்றையும் மானின் இறைச்சி யுணவையும் பெறுவீர்கள். அதன் பின்பு மருதநிலத்திலமைந்துள்ள தும் அந்தணர்கள் நிறைந்திருப்பதுமாகிய அவனது ஆமூரை அடையின் அங்கே உழத்தியர் சமைத்த நெல்லரிசிச் சோற்றையும் அலவன் கலவையையும் பெறுவீர்கள். அவனுடைய இராசதானி தூரத்திலுள்ளதன்று; அருகிலேயேயுள்ளது. அங்கேசென்று பொருநர்களும் புலவர்களும் அந்தணர்களும் எப்பொழுதும் தடையின்றிப் புகும் அவன் அரண்மனை வாசலை யடைந்து உட் புகுவீர்களாக. தன்பால் உள்ள செய்ந்நன்றி யறிதல், சிற்றின மின்மை, இன்முகமுடைமை, இனியனுதலென்னும் குணங்களை அறிஞர் புகழவும் அஞ்சினோர்க்கு அருள்செய்தல், சினமின்மை, பகைவீரரைக் குலைத்தல், அழிபடை தாங்கலென்னும் குணங்களை வீரர் புகழவும் பின்னுஞ் சில குணங்களை மகளிர் புகழவும்

அறிவுமடம்படுதல், அறிவுடைமை, வரிசையறிதல், வரையாது கொடுத்தலென்னும் குணங்களைப் பரிசிலர் புகழவும் நல்லியக் கோடன் வீற்றிருப்பான்; அவனை அடைந்து உன்னுடைய யாழை வாசித்து நீ சில வார்த்தைகளை அவன் மனம் மகிழும்படி சொல்வதற்கு முன்னே மூங்கிலின் உரிபோன்ற மெல்லிய ஆடைகளை உங்களுக்கு வழங்கி உடுக்கச்செய்து தேறலையும் பருகச்செய்வான்; வீமபாகமென்னும் மடைநூல் விதிப்படியே அமைக்கப்பெற்ற பலவகை உணவுகளைப் பொற்கலங்களில் இட்டுத் தான் நின்று உங்களை உண்ணும்படி செய்வான். பின்பு, பகைவர்களைவென்று அவர்களிடம் பெற்ற நிதிகளோடே உயர்ந்த தேர்களையும் காளைகளையும் பாகனோடு வழங்கி அன்றே உங்களை விடுவான். நீங்கள் அவற்றைப் பெற்றுக் குறைவற்று மகிழ்ந்திருப்பீர்களாக.

ச. பெரும்பாணாற்றுப்படை: இது பரிசில் பெறுதற்குரிய பெரும்பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றானொருவன் காஞ்சி நகரத்திற் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்த தொண்டைமான் இளந்திரையனிடத்தே ஆற்றுப்படுத்தியதாகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. இது பாணாறெனவும் வழங்கும். இதன் பொருட்சுருக்கம் வருமாறு:—

ஆதரிப்பாரைப் பெறாமல் யாழை இடம்பக்கத்தே தழுவிக்கொண்டு சுற்றத்தாருடன் திரியும் பெரும்பாணனே! யாம் பல நாளாகப் பசிமிகுதியினால் வருந்திய சுற்றத்தோடே சென்று குறைவில்லாத செல்வத்தையும் பல குதிரைகளையும் யானைகளையும் பெற்றுக்கொண்டு வருகின்றேம். அவற்றை யாங்கள் பெற வழங்கியவனும் திருமால் மரபிலுதித்த சோழர்களின் வழிவந்தவனும் அறநெறியிற் செங்கோல் செலுத்துபவனுமாகிய இளந்திரையன் பால் நீங்களும் செல்வீர்களாயின் உங்கள் வறுமை அடியோடே நீங்கிவிடும். அவனுடைய இடங்கள் இயல்புகள் முதலியவற்றைக் கூறுவேன்; கேட்பாயாக; அங்ஙனம் செல்லுங்கால் வழியில் யாதோர் அச்சமு மில்லை. அவனுடைய நாட்டில் திருடர்கள் இலர்; இடி, பாம்பு, காட்டு மிருகங்கள் முதலியவற்றால் எவ்வகைத் துன்பமும் உண்டாகாது. நீயும் உன் சுற்றத்தாரும் இளைப்பாறவேண்டிய இடங்களில் இளைப்பாறி விரும்பிய இடங்களில் தங்கிச் செல்வீர்களாக. செல்

லுங்கால் உமணச்சாதி மகளிர் எருதுகளை ஓட்ட உமணர்கள் காத்துச் செல்கின்ற உப்புவண்டிகள் போகின்ற நீண்ட வழிகளைக் காண்பீர்கள்; அவ்வழிகளில் கழுதையின்மீது மிளகுபொதிகளை ஏற்றிக்கொண்டு வியாபாரக் கூட்டத்தினர் செல்வார்கள்; அங்கே சுங்கச்சாலைகள் இருக்கும்; கவர்த்த வழிகளிற் காவலாளர் காவல் செய்துகொண்டிருப்பார்கள்; அத்தகைய இடங்களுள்ள காட்டு வழியில், எயிற்றியர்கள் நில உரலிற்பெய்து உலக்கையாற் குற்றிய புல்லரிசியோடு ஊனையும் சேர்த்து அட்டசோற்றை அவர்கள் அளிப்பப் பசிவருத்தமிக்க சுற்றத்தினரோடு உண்பீர்கள். உண்டபின்பு வேடர் வேட்டையாடும் அருஞ்சுரங்களை நீங்கியபின் எயினர் குடியிருப்பில் தங்குவீர்களாயின், மேட்டுநிலத்தில் விளைந்த நெல்லரிசிச் சோற்றோடே உடும்பின் பொரியல் முதலியவற்றையும் பெறுவீர்கள். யானை எதிர்த்தாலும் பாம்பு குறுக்கிட்டாலும் இடி இடித்தாலும் அஞ்சாத சூன்மகளிரையுடைய மறக்குடியிற் பிறந்த வீரர்கள் தம் சுற்றத்தோடு பகைப்புலத்துச்சென்று பசுக்களை ஓட்டிவந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாகப் போக்கிவிட்டுத் தோப்பிக்கள்ளைப் பருகிக் கூத்தாடும் இடங்கள் அங்கே உள. அவற்றைக் கடந்தபின்பு இடையர் குடியிருப்பைக் காண்பீர்கள். அங்கே, ஆடுகள் நின்று உண்ணும்பொருட்டுத் தழைகளைக் கட்டிய கால்களையும் கழியால் அமைத்த கதவுகளையும் உடைய குடில்கள் உள; தோலாலாகிய படுக்கையில் இடையன் தூங்கும் முன்றிலுண்டு; செம்மறியாடும் வெள்ளாடும் அங்கே தங்கியிருக்கும்; இடைச்சாதிமகளிர் விடியற்காலையில் எழுந்து தயிரைக்கடைந்து மோரை விற்றுவிட்டு அதன்விலையால்வந்த பொருளைக்கொண்டு சுற்றத்தாரைஉண்பிப்பார்கள்; நெய்யின்விலைக்குப்பொற்கட்டியைக்கொள்ளாமல் எருமைக்கன்றுகளை வாங்கிவருவார்கள்; அவ்விடத்தில் தங்குவீர்களாயின் தினையரிசிச்சோற்றையும் பாலையும் பெறுவீர்கள். அவ்விடங்களுக்கு அப்பால் பல மேய்புலங்கள் உள. அங்கே, செருப்பையணிந்த அடியையும் கோலையுடைய கையையும் பாலைத்தடவிய பிடரிமயிரையும் உடைய இடையன் பசுநிரையோடு காட்டில்தங்கி வேய்ங்குழலிற் பாலைப்பண்ணை வாசிப்பான்; பின்பு, அதனை வெறுப்பானுயின் மரலின் நாராலாகிய நரம்பைக் கட்டிய வில்லாகிய யாழில் குறிஞ்சிப்பண்ணை வாசிப்பான்; அப்பண்ணை, வண்டினங்கள் தங்கள் இனத்தின் ஒலியென்று நினைத்துவரும். அத்

தகைய புலங்களைக் கடந்துசென்றபின்பு முல்லைநிலத்து உழுதுண் பார்களுடைய சீறூர்களில் தங்குவீர்களாயின், வரகின்சோற்றை அவரைப்பருப்பாலாகிய உணவோடே பெறுவீர்கள். அவர் களுடைய இருப்பிடங்களைக் கடந்து சென்றபின்னர் மருதநிலங்கள் சூழ்ந்த இருக்கையைக் காண்பீர்கள்; அங்கே பலபேரூர்கள் உண்டு. அவற்றிற் பல நல்ல வீடுகள் உள ; பசுவின்கன்று கட்டிய பக்கத் திணையும் ஏணியால் எய்தப்படாத நெடிய வடிவினையுமுடைய நெல்லின் கூடுகள் அங்கே இருக்கும்; சிறுதேருருட்டிய தம் புதல் வர்களுடைய வருத்தத்தை நீக்கும்பொருட்டுச் செவிலியர்கள் பாலூட்டி அவர்களை அணைத்துக்கொண்டு துயில்வார்கள். அத் தகைய ஊர்களில் தங்குவீர்களாயின் வெண்ணெல் அரிசிச்சோற் றைக் கோழிப்பொரியலோடு பெறுவீர்கள் ; அந்நிலத்திலுள்ள கருப்பாலைகடோறும் கருப்பஞ்சாற்றையும் வெல்லத்தையும் உண் பீர்கள். பறியைக்கட்டிய முற்றத்திணையுடைய வலைஞர்களது குடி யிருப்பில் தங்குவீர்களாயின் நென்முளையாலாக்கிய கள்ளோடு மீன்சூட்டையும் பெறுவீர்கள். அங்கே உள்ள குளங்களில் மலர்ந்த தாமரைமலர்களைப் பறியன்மின் ; அவை கடவுளுக்குரி யன ; வேறுள்ள மலர்களை மாலையாகக் கட்டி அணிந்துசெல்லுவீர் களாக. அந்நிலத்தில் அந்தணர் இருப்பிடங்கள் உள ; அங்கே ஆன்கன்றுகளைக் கட்டிய கால்களையுடைய பந்தர்கள் உண்டு; தெய்வங்கள் இருத்தற்குரிய இடங்களும் உள ; அவை பசுவின் சாணத்தால் மெழுகப்பெற்றிருக்கும் ; கோழி நாய் முதலியன அங்கே அணுகா ; அத்தகைய இடத்தில் தங்குவீர்களாயின், அருந்ததியை ஒத்த கற்பையுடைய அந்தணமகள் சமைத்த இராசான்னம் என்னும் நெல்லரிசிச் சோற்றோடே ஊறுகறி யையும் பெறுவீர்கள் ; அவ்வூறுகறி கொம்மட்டி மாதுளங் காயோடு மிளகையும் கருவேப்பிலையையும் கலந்து மாவடுவின் துண்டங்களையும் சேர்த்து அமைக்கப்பெற்றிருக்கும். அத்தகைய இடங்களுக்கு அப்பால் அந்தணர்கள் வசிக்கும் நீர்ப்பெயறென் னும் ஊரிருக்கிறது. அதனையும் கடந்து செல்வீர்களாக. சென் றால் *பட்டின மொன்றைக் காண்பீர்கள்; அங்குள்ள கடற்கரை யில் வடநாட்டிலிருந்து குதிரைகளைக்கொண்டு வருகின்ற நாவாய் கள் சூழ்ந்திருக்கும்; பரதர்கள் மலிந்த தெருக்களும் காவலர் காக்

* பட்டினமென்றது மஹாபலிபுரமெனத் தோற்றுகின்றது.

கின்ற பண்டசாலைகளும் உள; அங்கே உள்ள மாடங்களில் பெண்கள் பந்தையடித்து விளையாடி மணற்பரப்பிற் பொற்கழங்கை ஆடுவார்கள். அப்பட்டினத்தில் தங்குவீர்களாயின் பன்றித்தசையுடன் கள்ளைப் பெறுவீர்கள். கடற்கரையில் ஆகாயத்தளவும் உயர்ந்துள்ள மாடங்களில் வைத்த விளக்குகள் கடலிற் போகும் நாவாயிலுள்ளவர்களுக்குத் துறையை அறிவிக்கும். அவ்விடத்தைக் கடந்துசென்று தோப்புக்குடிகளுடைய வீட்டில் தங்குவீர்களாயின், பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், பனைநுங்கு முதலியவற்றைப் பெறுவீர்கள்; அவற்றை மிகுதியாக உண்டு வெறுப்புத் தோன்றின் கிழங்குகளைப் பெறுவீர்கள். பின்பு தென்னையடர்ந்த தோப்புக்களிடையே செல்லுங்கள். அங்கே உள்ள ஊர்களிலுள்ளார் வள்ளிக்கூத்தை ஆடுவார்கள். அத்தன்மையுள்ள பல ஊர்களையுடைய நாட்டைக் கடந்துசென்றபின்பு திருவெஃகாவென்னுந் தலத்தை யடைவீர்கள்; அங்கே திருமால் பாம்பணையிற் பள்ளிகொண்ட திருக்கோலத்தோடு எழுந்தருளி யிருக்கின்றார்; அங்கே தங்கி இளைப்பாறி அக்கடவுளை வாழ்த்திக்கொண்டு உங்கள் வாத்தியத்தை வாசித்துவிட்டுச் செல்லுங்கள். அப்பால் காஞ்சிபுரத்தை அடைவீர்கள்; அந்நகரில் தேரோடும் வீதிகளும் பல பழங்குடிகளும் மதிலும் உண்டு; பிரமதேவனைப் பெற்ற திருமாலினது திருவுந்திக் கமலத்தைப் போன்று அந்நகர் பழமையும் சிறப்பும் உற்று விளங்குகின்றது; உலகத்து நகரங்களுக்குள்ளே சிறந்தது அந்நகரம். அங்கே நான் சொல்லும் உபகாரியாகிய இளந்திரையன் உள்ளான்; அவன் பாண்டவரைப் போன்று பகைவர்களை வென்றவன்; அவனுடைய அரண்மனைமுற்றத்தில், அவனது நட்பையும் துணையையும் விரும்பியவர்கள் கையுறைகளையேந்திக்கொண்டு செவ்விபார்த்துக் காத்திருப்பார்கள்; அவன் வேண்டியவர்களுக்குவேண்டியவற்றை வழங்கிச் சுற்றத்தாரோடே வீற்றிருப்பான்; நீங்கள் அவனை யடைந்து அவன் முன்னின்று அவனை நோக்கி, "பகைவர்கள் அரண்களை அழித்து அங்கேஉள்ள பொருள்களைப் புலவர்களுக்கு ஈந்து வெற்றிபெற்றோய்! தொண்டையோர் குடியிற் பிறந்தோய்! வீரருள் வீர! மறவர் மறவ! செல்வர் செல்வ! போரில் மேம்பட்டு விளங்குவோய்! தூர்க்கைக்குப் பேய்கள் பசித்துன்பத்தைச் சொல்லுவதுபோல யாங்களும் எங்கள் பசித்துன்பத்தைப்பற்றி முறையிடும்பொருட்டு

நின்னை வாழ்த்தி வந்தேம்'' என்று கூறிப் பேர்யாழை வாசித்துக் கலைத்திறனைக் காட்டுமின். அப்பொழுதே, கின்னரங்கள் பாடும் சாரலையும் மயில்கள் ஆடும் இளமரக்காடுகளையும் ஆண்குரங்கு கள் மரங்களிலிருந்து பூவை உதிர்க்கும் காடுகளையும் செந்தீக் கடன் ஆற்றும் முனிவர்கள் யானைகள் கொணர்ந்துதரும் விறகால் வேள்விசெய்யும் இடங்களையும் உடைய மலைகளுக்கு உரியவனாகிய அவன், உலகத்திலே நிலைபேறுடைய புகழைப்பெற நினைந்து உங் கள் இடையிலுள்ள பாசிபோன்ற கந்தைத்துணிகளைப் போக்கி விட்டுப் பாலாவியை ஒத்த உடைகளை உடுக்கும்வண்ணம் செய் வான்; பின்பு உயர்ந்த உண்கலங்களைப் பரப்பி ஊனுணவு செந்நெலரிசிச்சோறு முதலிய பலவகை உணவுகளை அவற்றி லிட்டு இனிய முகமுடையவனாகி உண்பிக்கவும் செய்வான்; நீங்கள் உண்டபின்பு அவன் பொற்றாமரைப் பூவை உங்கள் தலையி லே அணிந்து பொன்னரிமாலைகளை விறலியர் அணியச்செய்வான்; அப்பால் நான்கு வெள்ளிய குதிரைகளைப் பூட்டிய தேரை யீந்தும் ஆராமையுள்ளவனாகித் தான் பொருதுவென்ற பகைவர்கள்பாற் கவர்ந்த குதிரைகள் முதலியவற்றையும் கொடுத்து அன்றே விடை கொடுப்பான்.

ஆதலின் நீங்கள் அவன்பாற் சென்று பயனடைந்து வாழ் வீர்களாக.

ரு. முல்லைப்பாட்டு: இது, பகைமேற் சென்ற தலைவன் வரு மளவும் தலைவி ஆற்றி யிருந்தவிடத்து அவன் வந்ததனைக் கண்டு தோழி முதலியோர் தம்முள் மகிழ்ந்து கூறியதாகக் காவிரிப் பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. இதன்பொருட் சுருக்கம் வருமாறு:—

திருமாலைப்போல எழுந்த மேகமானது மழை பொழிந்த மாலைக்காலத்தே நிமித்தம் பார்ப்போர் ஊரின் பக்கத்துப்போய் நெல்லோடு முல்லைமலரைத் தூவி நற்சகுனம் பார்த்துக்கொண்டு நிற்க, அங்கே சிறிய பசுக்கன்று தன் தாய் வருதலை எதிர்நோக்கி வருந்தி நிற்றலைக் கண்டு, "இப்பொழுதே நின்தாய் வருவாள்'' என்று ஓர் இடைச்சி கூறுகின்ற நன்மொழியைக் கேட்டோம்; அந்நிமித்தம் நன்மையையளிக்கும்; நின் தலைவன்போரில் வெற்றி பெற்றுப் பகைவர் தந்த திறைகளுடன் வருவது ஒருதலை; ஆத

லின் நின் துயரத்தை ஒழிவாயாக வென்று பெருமுதுபெண்டிர் கூறவும் அவற்றைத் தலைவி கருதாளாயினள்.

இவளுடைய தலைவனாகிய அரசன் பகைமேற் சென்று பாசறையில் இருந்தான். அப்பாசறை, ஆறு சூழ்ந்த காட்டிடத்தே புதல்களையடித்து அழித்து அவற்றிலுள்ள விலங்கினங்களை ஓட்டி அங்கேயிருந்த மிக்கபகைமையையுடைய வேட்டுவச்சாதியின் அரண்களை அழித்து முள்வேலியைக் காவலாக வளைத்து அமைக்கப் பெற்றிருந்தது; பின்னும் அது கடலைப் போன்று பரந்திருந்தது; அங்கே தழைவேய்ந்த கூரைகளுள்ள தெருக்கள் இருந்தன; நாற்சந்தியான முற்றத்தில் நின்ற யானை அதிமதுரத் தழைமுதலிய உணவைத் தின்னாமல் அவற்றைக் கொம்பிடையே வைத்துநிற்க, அதனைக்கண்ட பாகர் யானைப்பேச்சான வடமொழிகளைப்பேசிக் கோலாற்குத்திக் கவளத்தை உண்ணும்படி செய்தார்கள்; கூடாரம் அடித்த இருப்பின்கண் வில்லையும் எறிகோல்களையும் கேடகங்களையும் ஊன்றியிட்ட அரணங்கள் அங்கே இருந்தன; அதற்குள்ளே மொழிவேறுபாட்டையுடைய தேயங்களிலிருந்து வந்த பெரியபடை சூழ்ந்திருந்தது; அதற்குநடுவே தனியாக அமைக்கப்பட்ட இடம் ஒன்றுண்டு; அதில் வாளைச்செருகிய கச்சையுடைய மங்கையர் அங்குள்ள விளக்குகள் அவியுங்காலங்களிற் பந்தத்தைக் கொளுத்திக்கொண்டு நின்றார்கள்; மெய்காப்பாளர் காவலாகச்சூழ்ந்து திரிந்தார்கள்; நாழிகைக்கணக்கர் நாழிகை இசைத்தார்கள். அங்கே யவனர் புலிச்சங்கிலி விட்டுச்செய்த இருக்கையில் மாணிக்கவிளக்கை வைத்துத் திரையைவளைத்தமைத்த புறவறைக் குள்ளேயுள்ள படுக்கையறையுள் அரசன் படுத்திருந்தான்; ஊமைகளாகிய காவலாளர் சுற்றித்திரிந்தார்கள். அவன் உறக்கம் பெறாமல் பகைவராற் புண்பட்ட வேழங்களையும் பட்டவீரர்களையும் புண்பட்டு வருந்தும் குதிரைகளையும் நினைத்து ஒருகையைப் படுக்கையில் வைத்து ஒருகையை முடியோடே சேர்த்திக் கண்ணியைத் தடவிக்கொண்டு இருந்தான்.

அப்படி இருந்த தலைவன் மீண்டு வருதலைக் காணாளாகிய தலைவி இங்கே வருத்தத்தோடு அம்பு தைக்கப்பட்ட மயில்போல நடுங்கிப் பின்வரும் வாழ்வின்பயனை எண்ணி ஒருவாறு ஆறுதலுற்று எழுநிலைமாடத்தில் கூடுவாய்மூலையிற் சொரிகின்ற நீர் வீழ்ச்சியின் ஒலியைக் கேட்டுக்கொண்டே படுத்திருந்தாள். இவள் இப்

படியிருக்கையில், தலைவன் பகையரசர்களை வென்று அவர்களுடைய் நிலங்களைக் கவர்ந்துகொண்டு வெற்றிக்கொடியை உயர்த்தி, தன்முன் ஊதுகொம்பும் சங்கும் முழங்கக் குதிரைகளைச் செலுத்தி விரைந்துவருவானாயினன். அங்ஙனம் வரும் தலைவனுடைய தேரிற் பூட்டிய குதிரைகள் இவளுடைய செவிகள் குளிரும்படி ஆரவாரித்தன. ஆதலால் இனி இவள் துன்பம் நீங்கும்.

சூ. மதுரைக்காஞ்சி: இது தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்தம் பலவகை நிலையாமையைச் செவியறிவுறுத்தற்கு மாங்குடி மருதனார் பாடியது. மதுரைக்காஞ்சி யென்ற தொடர் மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சியென விரியும். காஞ்சித்திணையென்பது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் கூறும் குறிப்பினது. இப்பாட்டின் பொருட்சுருக்கம் வருமாறு :—

உலகத்தில், காற்று வலமாகச் சுழலவும் நாண்மீன்கள் தமக்குரிய நிலையிலே நின்று ஒழுகவும் சூரியனும் சந்திரனும் நன்கு விளங்கவும் மழை உரியகாலங்களிற் பெய்யவும் திசைகளெல்லாம் தழைப்பவும் வித்தியதற்கு ஆயிரம் பங்காக நிலம் விளையவும் மரங்கள் பயன்கொடுப்பவும் மக்கட்கு நோய்கள்நீங்கி அழகு விளங்கவும் திசையானைகள் வருத்தம் நீங்கவும் பொய்யறியாத அமைச்சருடனே இருந்து உலகத்தையாண்ட உயர்ந்தோர் குலத்தில் உதித்தோய்! பகைவர்களை வெல்லும் சேனையை யுடையோய்! தென்னாட்டை ஆளாதவாறு இராவணனை ஒட்டிய அகத்திய முனிவர்க்குப் பின்னர்ச் சான்றோனாக இருக்கத்தக்கோய்! பொதியின்மலைக்கு உரிய வீர! நால்வகைப்படைகளோடும் சென்று சேரசோழர்களையும் ஐந்து குறுநில மன்னர்களையும் வென்றும் அமையாமல் மலைகளிலிருந்த சிற்றரசர்களையும் வென்று அவர்கள் காட்டரண்களை அழித்து நிலங்களைக் கொண்டோய்! வடிம்பலம்பநின்ற பாண்டியனது வழியில் வந்தோய்! பகைவர்க்கு இடியேற்றை ஒப்பாய்! குமரிமுதல் இமயம்வரையிலும் கீழ்கடல் முதல் மேல்கடல் வரையிலும் உள்ள மன்னர்கள் ஏவல்செய்து நடப்ப, அவர்களுக்குத் தலைவனாக வீற்றிருப்போய்! பல பண்டங்களை இறக்குமதிசெய்கின்ற நாவாய்கள் தங்கிய துறைகளையுடைய

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS

சாலியூரைக் கைக்கொண்டோய்! விழாக்கள் நடைபெறும் ஊர்களில் இருந்து பொருநர்களுக்கு யானைகளைக்கொடுத்துப் பொற்றாமரைப்பூவைச் சூட்டிப் பல அணிகலங்களை வழங்குகின்ற அரச! பலகுட்டுவர்களை வென்ற கோவே! முதுவெள்ளிலையென்னும் ஊரிலுள்ளார் நின் ஏவல்கேட்பத் தலையாலங்கானத்திற் சென்று பகையரசர்களைவென்று களவேள்வி வேட்டவேந்தே! நீ அடுத்தாருடைய குடிகளைச் சிறக்கச்செய்வாய்; பகைத்தாரது அரசுரிமையை நீக்குவாய். கொற்கைக்குத்தலைவ! அரியபொருள்களையெல்லாம் எளிதிற்கொண்டு அவற்றைத் தனக்கென்று பாதுகாவாமற் கொடுத்துவிட்டு, ஊரில் உறைவேமென்று எண்ணாமல் காடுகளைக்கடந்து பகைவருடைய நாடுகளிற் புகுந்து அவர்களுடைய அரணங்களைக் கைக்கொண்டு அவ்வர்நிலத்திற் பல வருடங்கள் தங்கி மேம்படுமாறு செய்த குரிசிலே! நீ பகைவர்களுடைய நாடுகளிற் சென்று அவர்களுடைய காவல்மரங்களை வெட்டி மருத நிலங்களில் தீயை மூட்டி நாடுகளைக் காடாக்கினமையால் அந்நாடுகள் பாழாய்விட்டன. பின்னும், பல்வகைப் படைகளுடன் பகைவரிடத்தே சென்று வென்று மதில்களைக்கைக்கொண்டு அவர்களை அழித்தலினால், நின்னால் எதிர்க்கப்பட்ட பகைவர் அஞ்சி நின் ஏவல் கேட்டு நடக்கப் பல மண்டலங்களையும் வளைத்துக்கொண்டு, அரசியலிற்பிறழாமல் நின்குலத்திற் பெரியோர் நடந்த அடிப்பாட்டின் வழியைத் தப்பாமல் நீ அறநெறியை நிலைபெறச் செய்து விளங்குவாயாக! மேற்றிசையிற்றோன்றிய பிறை நாடோறும் சிறத்தலைப்போல நின் வெற்றியாலுண்டான கொற்றம் வழிவழிச் சிறந்திடுக! கீழ்த்திசையிற்றோன்றிய மதி நாடோறும் தேய்தலைப்போல் நின் பகைவருடைய ஆக்கம் தேய்ந்து கெடுவதாக! தேவருலகத்தை அமிழ்தத்தோடே பெறுவையாயினும் நீ பொய்யை வெறுப்பாய்; மெய்யையே விரும்புதலையுடையை. இவ்வுலகத்திலுள்ளாரும் தேவருலகத்தாரும் பகைவராக வந்தாலும் அவர்களுக்கு அஞ்சிப் பணிந்து நடவாய். தென்றிசை மலைகளில் வாணன் வைத்த பொருட்குவியல்களைப் பெறுவாயாயினும் பழிச்சொல் வர உடம்படாய்; பொருளைக் கொடுத்துப் புகழை விரும்புவாய்.

அத்தகைய நின்னோடும் முன்னிலைப் பொருள்களாகிய நுகர்பொருள்களுக்கு என்ன உறவு உண்டு? பெரிதாயிருக்கின்ற ஒரு

பொருளைக்கேட்டுத் தெளிவாயாக. நின் அவலம் கெடுக; நின் புகழ் கெடாது நிலைபெறுக!

நிறைந்த செல்வத்தையுடைய நகரிலே இருந்து விறலியருக்குத் தொடிகளையும் பாணருக்குக் களிறுகளையும் பாடுபவருக்குத் தேரோடு குதிரைகளையும் வழங்கி, படைத்தலைவர்களுடன் வீர பானம்செய்து, தம்மைப்பணிந்தோர் தம் ஏவல்கேட்டு நடப்பப் பணியாதவர்களைப் பணித்துத் திறைகொள்ளுதற்காக அவர்கள் நாட்டிற்சென்று வென்று உலகை ஆண்டு வீணே இறந்து கழிந்த மன்னர்கள் கடலில் அலைகளாற் குவிக்கப்படும் மணலினும் பலராவர்.

நின் நாட்டின் வளங்களையும் நகரத்தின் சிறப்புக்களையும் என்னவென்று சொல்வேன்! நின் நாட்டில் ஒருசார் மருத நிலம் உள்ளது. அங்கே வலைஞர்கள் மீன்களைக் கொன்று குவிக்கும் ஓசையும், கரும்பாலைகளின் ஓசையும், களைபறிப்பார்களுடைய ஓசையும், சேற்றில் தங்கிய எருதுகளின் துன்பத்தை நீக்குவோர் ஓசையும், கழனியில் நெல்லரிபவர் முழக்குகின்ற பறையின் ஓசையும், திருப்பரங்குன்றில் நிகழும் திருவிழாவின் ஓசையும், மகளிரும் ஆடவரும் நீராடும் ஓசையும் கலந்தொலியாநிற்கும்.

முல்லைநிலம் ஒருபால் அமைந்திருக்கின்றது. அங்கே தினைக்கதிர்கள் கொய்யும் பதத்தை உறும். எள்ளிளங்காயும் வரகின் கதிரும் முற்றியிருக்கும். குழிகளில் மணிகள் விளங்கும். மான்கள் பிணைகளோடு சுழன்று துள்ளும். அடியிலுள்ள பாறைகளிற் கொன்றைமரத்திலிருந்து மலர்கள் உதிர்ந்து அழகுபெறும். பயிர்களின்மேல் முசுண்டைக்கொடியின் பூவும் முல்லையின் பூவும் உதிர்ந்து பரக்கும். பள்ளங்களில் நெய்தலும் தொய்யிற்கொடியும் படரும்.

குறிஞ்சி நிலம் ஒருபக்கம் அமைந்து விளங்குகிறது. அங்குள்ள மலைச்சாரலில் வெண்சிறுகடுகும் ஐவனநெல்லும் வளரும். இஞ்சி, மஞ்சள், மிளகு முதலியன குவிக்கப்பட்டிருக்கும். தினை விளைந்துள்ள இடங்களிற் கிளியை ஓட்டும் ஓசையும், அவரையைத் தின்னும் காட்டுப்பசுவை ஓட்டும் ஓசையும், குறவன் பன்றியைக் கொன்றதனாலுண்டான ஓசையும், வேங்கைமரத்தில் மலர்களைக் கொய்வோர் இடும் ஓசையும், பன்றியைக் கொல்லும் புலியின் ஓசையும் அருவியின் ஓசையோடு ஒலிக்கும்.

பாலை நிலமும் ஒருபுடை உண்டு. அங்கே மூங்கிலில் உண்டாகிய நெருப்பு, தூறுகளை எரித்துவிடும்; அதனால் ஓய்ந்த யானைகள் மலைகளிலிருந்து மேய்புலம் நோக்கிப் போகாநிற்கும். அருவிகள் இல்லையாகும். வைக்கோலைப்போன்று புற்கள் உலர்ந்துகிடக்கும். முழைஞ்சுகளிற் புகுந்துவரும் சூறுவளிக்காற்று கடலைப்போல ஒலிக்கும்.

நெய்தல் நிலமும் ஒருபால் உண்டு. அங்கே முத்தும் வளைகளும் வேறு பல பண்டங்களும் உப்பும் மீன்துண்டங்களும் கப்பல்களில் வந்த குதிரைகள் முதலிய பொருள்களும் சிறந்துவிளங்கும்.

இந்த ஐந்திணைகளும் தன்பால் அழகுபெற்று விளங்கும் பாண்டிநாட்டிற்கு நடுவணதாய் உள்ளது நின்மதுரையம்பதி. அது வையை நதியின் கரைகளில் நெடுங்காலமாக இருக்கும் பாணர் குடியிருப்பினை உடையது; பின்னும் மண்ணுள்ளவளவும் ஆழ்ந்த அகழியையும் மதிலையும் இடையறுமல் யாவரும் வழங்குகின்ற மதில்வாயிலினையும் நல்ல வீடுகளையும் உடையது. தெருக்களிலே பலவிதமான கூட்டத்தாருடையஒலிமிகுந்துஒலிக்கும். முரசறைவோர் விழாக் கொண்டாடுதலை அங்கங்கே அறிவித்துச்செல்வார். வாச்சியங்களின் இசையை விரும்பினவர்களுடைய ஆரவாரம் நிறைந்திருக்கும். நாளங்காடி அல்லங்காடி யென்னும் இரண்டு இடங்களிலும் விழாவிற்காக எடுத்த கொடிகளும், பகைவருடைய அரண்களைக் கைக்கொண்டு அவ்வெற்றியைக் கருதி எடுத்த விசயக்கொடிகளும், வேற்படையோடுசென்று பகைவர்களுடைய யானைப்படையைக் கொன்று ஓட்டி எடுத்த வெற்றிக்கொடிகளும், கள்ளுக்கடையிற் கட்டிய கொடிகளும், பிறகொடிகள் பலவும் மலையிடத்துள்ள அருவிகள்போல அசைந்து விளங்காநிற்கும்.

நாளங்காடியில், பூந்தட்டிலே இட்டுவைத்த பூவினை யுடையாரும், பூமாலைகளை யுடையாரும், சுண்ணத்தை யுடையாரும், பாக்கு வெற்றிலையினை யுடையாரும், சங்குச் சுண்ணம்பினை யுடையாரும், நால்வகைப்படையும் பல்காலும் வந்துபோகையினால் அஞ்சி ஏங்கியிருந்து அவை போனபின்னர் வருத்தம் நீங்கித் தத்தம் பண்டங்களை விற்பதற்கு மாடங்களின் நிழலிலே இருப்பார்கள். அழகிய முதுமகளிர் பலர் நுகர்பொருள்கள் பலவற்றை ஏந்திக்கொண்டு மனைகடோறும் உலாவிநிற்பர். விழாவெடுத்த

ஏழாம் நாளந்தியில் நாட்டிலுள்ளார் ஆர்க்கும் ஆரவாரம் நிறைந்திருக்கும்.

அல்லங்காடியில், செல்வர்கள் சிவபெருமானை முதல்வனாகக் கொண்டு ஏனைய தெய்வங்கட்கும் நிவேதனங்களைச் செய்யும் அந்திவிழாவில் வாத்தியங்கள் ஒலிக்கும். அங்கே பௌத்தப் பள்ளிகள் உள. அவற்றில், பெண்டிர்கள் தம் குழந்தைகளையும் கணவரையும் அழைத்துக்கொண்டு சென்று பூவும் புகையுமிட்டுத் தொழுவார்கள். அந்தணர்களின் இருப்பிடங்கள் இருக்கின்றன; வேதங்களை ஓதி உயர்ந்த ஒழுக்கத்தோடு பொருந்தி இவ்வுலகத்திலிருந்தே தேவருலக இன்பத்தை நுகர்பவர்களாகிய பெரியோர்கள் அறநெறி பிழையாத அன்புமிக்க நெஞ்சுடையவர்களாய் அங்கே உறைகின்றார்கள். அமண் பள்ளிகளும் உள்ளன; அவற்றில், முக்காலத்தையும் அறிந்து, தேவருலக இயல்பையும் இவ்வுலக இயல்பையும் தெரிந்து, அமைந்த விரதத்தையும் இளையாத உடம்பினையும் உடைய அறிஞர்கள் சாவகர் துதிக்க இருக்கின்றார்கள். அவர்கள் நோற்கும்பொருட்டு நூலுறியிலே குண்டிகையைத் தொங்கவிட்டிருப்பார்கள். அப்பள்ளிகள் குளிர்ச்சியையுடையனவாகி உயர்ந்திருக்கும். இவையெல்லாம் ஒன்றுசேர்ந்த பல மலைகள்போல விளங்கும். அறங்கூறவையத்தாரும், காவிதிப்பட்டம்பெற்ற அமைச்சர்களும், பல பண்டங்களை விற்பாரும், அமைச்சரல்லாத ஏனை நாற்பெருங்குழுவினரும், சங்குகளைக் கடைவாரும், மணிகளைத் துளையிடுவாரும், தட்டாரும், பொன் வாணிகரும், ஆடைகளை விற்பாரும், செம்புகளை வாங்கிக்கொள்வாரும், கச்சுக்களை முடிவாரும், பூக்களையும் சந்தனத்தையும் விற்பாரும், சித்திரவேலை செய்பவர்களும், பிறரும் கூடி நெருங்கி நிற்றலாலுண்டாகும் ஆரவாரம் மிகவும் அதிகமாகத் தோன்றும். அந்த ஆரவாரம் சேரனது அவையிலே தருக்கங்கூறுவாருடைய ஆரவாரத்தை ஒத்திருக்கும். அவ்வாரவாரமும், பலாச்சுளை மாம்பழம் முதலியவற்றை விற்பார் ஓசையும் கூடிக் கப்பலிலிருந்து பண்டங்கள் இறக்குமதியாகின்ற கடற்கரைப் பட்டினத்தின் ஒலிபோலக் கல்லென்றிசைக்கும். பல தேசங்களினின்றும் வந்த வாணிகர் தமக்கு வேண்டிய பேரணிகலங்களைப் பெற்றுக்கொண்டு திரிந்து ஆரவாரிப்பார்கள். இவ்வாரவாரங்கள் பலவகையான பறவைகளின் ஒலி எழுந்தாற்போன்றிருக்கும்.

இந்நகரில், ஞாயிறு அத்தமித்தபின்பு திங்கள் தோன்றிய இரவு வந்தவுடன் காதலரோடு மகிழ விரும்பிய மகளிர் கழுநீர் மாலையையும் ஆபரணங்களையும் அணிந்துகொண்டு கூந்தற்கு மயிர்ச்சாந்து ஊட்டிப் பசுங்கூட்டை அரைத்துவைத்துவிட்டு ஆடைக்கு மணம் ஊட்டுவார்கள். வேறு சிலமகளிர் விளக்கை ஏற்றுவார்கள்.

மாலைக்காலம் நீங்கியவுடன், தம்மை அலங்கரித்துக்கொண்டு பொய்பலபேசி, தம் இன்பத்தைக் கருதிவந்தோர் செல்வத்தை முற்றக் கவர்ந்து அவர்களைத் துறந்து பின்னும் கண்டோர் நெஞ்சை வருத்தமடையச்செய்து பொருள் கவரும் பரத்தையர்கள் மனைதோறும் இளையரோடு விளையாடுவார்கள். ஓணநாள் விழாவிற் பொருது வடுப்படும் நெற்றி முதலியவற்றையுடைய மறவர்மகிழ்ந்து திரிவார்கள். புதல்வர்களைப் பெற்றுப் புனிறு தீர்ந்தமகளிர் குளநீராடுவர். முதற்சூலையுடைய மகளிர் தெய்வத்தைப் பரவிப் பல வாச்சியங்களை முழக்கித் தேவராட்டியுடன் நின்று மடைகொடுப்பார்கள். ஒரு பக்கம் வேலன் முருகக்கடவுளைத் தன் மெய்க்கண்ணே நிறுத்தி வழிபடுவதனால் மன்றுகடோறும் குரவைக்கூத்து நிகழும். சேரிதோறும் புனைந்துரை, பாட்டு, கூத்து என்பன நடைபெறும். இவற்றால் உண்டாகித் தம்முட் கலந்த வேறுவேறாகிய ஆரவாரங்கள் மயங்கி நன்னனென்னும் அரசன் பிறந்தநாட்கொண்டாட்டத்தில் ஆரவாரம் எழுந்தாற் போல முழங்கும். இவ்வாறு முதற்சாமம் செல்லும்.

இரண்டாஞ்சாமத்தில் சங்கங்களின் ஒலியடங்கிக் கிடக்கும். சட்டக்காலைச் சாய்த்துத் தங்கள் கடைகளை மூடிவிட்டு மகளிர் துயில்வர். அடையினையும் மோதகத்தினையும் உடைய அப்பவாணிகர் அவற்றை வைத்தபடியேயிருந்து தூங்குவார். கூத்தர் துயில்கொள்வார். படுக்கையிற் படுத்தவர்கள் இனிதே தூங்குவார்கள்.

மூன்றாம் சாமத்தில் பேய் முதலியன திரியாநிற்கும். துயிலாத கண்களையும் அஞ்சாமையையும் ஆண்மையையும் களவுநூல் காவல்நூல் என்பவற்றிற்றேர்ந்த தேர்ச்சியினையும் உடைய ஊர்காவலர் கள்வர்களை ஒற்றியறிந்து இளைப்பின்றித் திரிவார்கள். இவ்வாறு தெய்வங்களுலாவும்யாமங்கள் இந்நகரினுள்ளாராற் கழிக்கப்படும்.

பின்பு விடியற்காலையில் அந்தணர் வேதங்களைப் பாடுவர்; அவ்வொலி வண்டுகள் அலரும் பருவத்தையுடைய அரும்பின்மேலிருந்து இசை பாடுவதுபோலிருக்கும். யாழையுடைய பாணர்கள் மருதப்பண்ணை வாசிப்பார்கள். குத்துக்கோற்காரர்கள் யானைக்குக் கவளம் கொடுப்பார்கள். குதிரைகள் புல்லுணவை மென்று உண்ணாநிற்கும். பல பண்டங்களை விற்கும் கடைகளை அவற்றையுடையார் மெழுகுவர். கள்ளைவிற்போர் அதன் விலையைக் கூறி விற்பார்கள். மகளிர் எழுந்துவந்து திறக்கையினாற் கதவுகள் ஒலிக்கும். கள்ளுண்டவர்களுடைய தழுதழுத்த குரல் கேட்கப்படும். சூதர் வாழ்த்துவர். மாகதர் புகழ் கூறுவர். வேதாளிகர் நாழிகை இசைப்பர். பள்ளியெழுச்சி முரசம் முழங்கும். ஏறுகள் ஆரவாரிக்கும். கோழிச் சேவல்கள் கூவும். அன்னம் கரையும். மயில் அகவும். களிறுகள் முழங்கும். கொடிய விலங்குகள் ஆரவாரம் செய்யும். மகளிர் ஊடி நீத்த முத்தமும், பாக்கும், பழம்பூவும் நிறைந்துள்ள முற்றத்தைச் சிலர் பெருக்குவார்.

பல வீரரைப் பொருது ஓட்டியபொழுது போர்க்களத்திலே அவர் விடுத்துப்போன யானைகளும், பகைவர் நாட்டினின்றும் கவர்ந்துவந்த குதிரைகளும், அவர் நாட்டிலிருந்து வீரர்கள் அடித்துவந்த பசுக்கூட்டங்களும், பல மன்னர்கள் கைதொழுது கொடுத்த காணிக்கையாகிய அணிகலங்களும், பிறவுமாகிய பண்டங்கள் கங்கையாறு கடலிலே புகுந்தாற்போன்று அளந்து முடிவறியாவாறு அவ்விடியற்காலத்தே நிறைதலால் தேவருலகம் போன்று விளங்குவது இம்மதுரை.

மிகப் புகழெய்திய இந்நகரில், துயிலெழுந்தபின்பு ஆடையணிகளைப் புனைந்துகொண்டு, படைத்தலைவர்கள் நின் வெற்றியை வாழ்த்த, "குதிரைவீரர்களைக் கொணர்மின்; பகைவரரணத்திலிருந்து வருந்திய வீரர்களை அழைமின்; பகைவர் நடுவே சென்று யானைகளை எறிந்து சோர்ந்த தலைவர்களை வரச்செய்ம்மின்; போரில் உயர்ந்த உதவிகளைச் செய்த முயற்சியுடையாரைக் கூட்டிக்கொண்டு வம்மின்; பெரிய செயல்களைச் செய்யும் மண்டலம் ஆள்வோரை அழைத்துவம்மின்; பிறரையும் கொணர்மின்; யாவரும் வருக" என்று கூறி, "பாணர், பாணிச்சியர், புலவர், கூத்தர் முதலியோர் வருக" என அழைத்து யாவருக்கும் தேரையும்

களிற்றையும் வழங்கி எங்கும் களிப்புத் தோன்றச்செய்து நீ வாழ் வாயாக! பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப்போலவும் நிலந்தருதிருவிற் பாண்டியனைப்போலவும் சான்றோர்களாற் புகழப் பெறும் சிறப்போடு விளங்குவாயாக! அரிய பொருள்களை யெல் லாம் வேற்றுப் புலத்திலிருந்து கொணர்ந்து தந்து நின்னாட்டுக் குடிமக்களைப் பெருக்கி வாழ்வாயாக! பெரிய நூல்களைக் கற்றுப் புகழை எங்கும் பரவச்செய்து கடலின் நடுவில் உதிக்கும் சூரிய னைப்போலவும் நாண்மீன்களுக்கு இடையில் விளங்கும் திங்களைப் போலவும் சுற்றத்தாருடன் விளங்குவாயாக! மாறன் முதலி யோரும் பல கோசரும் நின் ஏவல் கேட்பவும், குறுநிலமன்னர் கள் நின்னைப் புகழ்ந்து துதிக்கவும், மகளிர் ஏந்திய தேறலை மடுத்து இவ்வாறு நாடோறும் ஒழுகி நீ பெற்ற வாழ்நாள் முழுதும் மகிழ்ந்து வாழ்வாயாக!

எ. நெடுநல்வாடை: இது பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப்பிரிந்து வருந்தும் தலைவிக்குஅவ்வருத்தம்தீரும் படி அவன் பகையை வென்று விரைவில் வருவானாகவென்று கொற் றவையைப் பரவுவாள் கூறியதாக நக்கீரனார் பாடியது. இப்பெ யர் நெடிதாகிய நல்ல வாடையென விரிக்கப்படும். தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு ஒருபொழுது ஓருழிபோல நெடி தாகிய வாடையாய், அரசன் போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின் அவனுக்கு நல்லதாகிய வாடையாயினமையின் நெடுநல்வாடை யெனப்பட்டது. இஃது அகப்பொருட் கேற்ற செய்திகளைத் தன்பாற் கொண்டுள்ளதே னும், "வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம்" (176) எனப் பாண்டியனது அடையாளப் பூவாகிய வேம்பைக் கூறினமையின் அகத்திணையின் பாற்படாமற் புறத்திணையாயிற்று. இது வாகைத் திணையுள் கூதிர்ப்பாசறை யென்னும் துறையின் பாற்படும். இதன் பொருட் சுருக்கம் வருமாறு:—

பருவம் பொய்யாத மேகம் மழையைப் பெய்தமையினால் இடையர்கள் தாம் மேய்க்கும் பசு முதலியவற்றை வேற்றுப்புலத் திற்கு ஒட்டிச் சென்று மேயவிட்டு, நீர் அலைத்தலாலே தாங்கள் அணிந்திருந்த காந்தட்கண்ணி கலைய, தம் உடம்பிடத்தே மிக்க குளிர் வருத்துவதனால் பலருங் கூடித் தீயை மூட்டிக் கையை

III. 1 (உரை).

அதிலே காய்த்தி அக்கையைக் கவுளிலேதடவிப் பற்பறைகொட்டி நடுங்கினார்கள்; விலங்குகள் மேயுந்தொழிலை மறந்தன; குரங்குகள் முள்காந்திருந்தன; மரத்திலுள்ள பறவைகள் கீழே வீழ்ந்தன; பசுக்கள் கன்றை உதைத்துக் கடிந்தன; குன்றையுங் குளிர்விக்கும் நடுயாமத்தில் முசுண்டைக்கொடியும் பீர்க்கும் தூறுகள் தோறும் மலர்ந்தன; கொக்குக்களும் நாரைகளும் ஈரமணலிலிருந்து கவரும்படி கயல்மீன்கள், அற்ற நீரில் எதிரே வந்தன; மேகங்கள் சிறிய துளிகளைத் தூற்றின; வயல்களில் நெற்கதிர்கள் வளைந்தன; கமுகமரங்களிற் பாக்குக்கள்முற்றின; பொழில்களில் மழைத்துளிகள் மாறாமல் வீழ்ந்தன; மாடங்கள் உயர்ந்த ஊர்களிலுள்ள வீதிகளில் முறுக்குண்ட உடம்பினராகிய மாக்கள் கள்ளையுண்டு களித்து மழைத்துளிக்கு அஞ்சாமல் திரிந்தார்கள்; அழகையுடைய மகளிர் பூந்தட்டிலே இட்டுவைத்த பிச்சி மலர்கள் அலர்ந்தன; அவற்றின் அலர்ச்சியால் மாலைக் காலத்தின் வருகையை அம்மகளிர் அறிந்து விளக்கையேற்றி நெல்லையும் மலரையும் தூவித் தெய்வத்தைத் தொழுது மாலைக்காலத்தைக் கொண்டாடினார்கள்; வீட்டில் இருக்கும் புறாச்சேவல் பெடைகளோடு மன்றங்களிற் சென்று இரைதேடி உண்ணாமல் இரவும்பகலும் மயங்கிக் கொடுங்கையைத் தாங்கும் பலகைகளில் இருந்தன; சந்தனம் முதலியவற்றை அரைப்பதற்காக வடநாட்டிலுள்ளாரிடமிருந்து பெற்ற சந்தனக்கல்லும் தென்றிசையிற்பெற்ற சந்தனக்கட்டையும் பயனற்றுக் கிடந்தன; மகளிர் தம் கூந்தலில் மாலைகளை முடியாமல் சில மலர்களைமட்டும் வைத்து முடிக்க விரும்பிக் கூந்தலைப் புலர்த்துதற்கு அகிற்புகையை உண்டாக்கினர்; விசிறிகள் உறைகளிலே இடப்பெற்றுச் சிலந்தி கூடுகட்டும்படி மூலையிலே தூங்கின; உயர்ந்த மாடங்களின் மேல்நிலையில் வேனிற்காலத்தில் தென்றல் வரும் சாளரங்களின் கதவுகள் தாழிட்டுக் கிடந்தன; எங்கும் மழைத்துளி தூற்றப்படுவதனால் எல்லோரும் தண்ணீரை அருந்தாமல் தூபமுட்டியிலுள்ள நெருப்பின்வெம்மையை நுகர்ந்தனர்; ஆடல் மகளிர் பாடுதற்காகக் குளிர்ச்சியால் நிலைகுலைந்த யாழ் நரம்பைத் தம் மார்பிற்றடவி அங்குள்ள வெப்பத்தினால் பண்ணை முறைப்பட நிறுத்தினர்; கணவரைப்பிரிந்த மகளிர் வருந்தினர்; மழை நிறைந்தது; இவ்வாறு கூதிர்க்காலம் நிலைபெற்றது.

தலைவியிருக்கும் இவ்வரண்மனை, நல்லவேளையிற் சிற்பநூலறிந்தார் நூலைப்பிடித்துத் திசைகளைக் குறித்துக்கொண்டு அத் திசைகளிலுள்ள தெய்வங்களையும் ஆராய்ந்தறிந்து பெரிய அரசருக்குத் தக மனையை வகுத்து அமைத்த மதிலையுடையது; பருத்த இரும்பாலே கட்டிச் சாதிலிங்கத்தைப் பூசி இரட்டைக் கதவுகளையமைத்து, உத்தரக் கற்கவியிலே குவளைப்பூக்களும் பெண்யானைகளுமாகிய சித்திரங்களையமைத்து, கைத்தொழில்வல்ல தச்சன் இயைத்ததனாற் குற்றமற்று விளங்குவனவும், சிறுகடுகை யப்பி நெய்யையணிந்த நெடியநிலையினை யுடையனவும், கொடியோடு யானை புகத்தக்க உயர்ச்சியை யுடையனவுமாகிய வாயில்களையுடையது; திருமகள் நிலைபெற்ற சிறப்பினையுடையது; மணல்பரந்த முற்றத்தையும் கவரிமான் அன்னம் என்பன திரியும் வாசல்முன்பினையும் உடையது. அங்கே, குதிரைகள் புல்லுணவைக் குதட்டும் ஓசையோடே நிலாமுற்றத்திலிருந்து வந்துவிழும் மழைநீர்த்தாரையின் ஓசையும் கலந்து மலையின் ஆரவாரம்போல ஒலிக்கும். இதனுள்ளேயுள்ள அந்தப்புரத்தில் சிலமகளிர் யவனர் இயற்றிய பாவைவிளக்கில் நிறைய நெய்யைச் சொரிந்து விளக்கு ஒளிமழுங்கும்போதெல்லாம் நெய்யைவார்த்துத் தூண்டி இருள்நீங்கச்செய்வார்கள். அவ்விடம் பாண்டியனன்றிப் பிற ஆண்மக்கள் அணுகாத காவலையுடையது; மலைகளைப்போன்ற உயர்ச்சியையும் இந்திரவில்லைப்போன்ற கொடிகளையும் நீலமணியைப்போன்ற கருமையையுடைய திரண்ட தூண்களையும் கொண்டுள்ளது; செம்பினாற் பண்ணினாலொத்த சுவர்களில் ஒருகொடி எழுதப்பெற்றது. அதனுள் தலைவி ஒரு பெரிய வட்டக்கட்டிலிற் படுத்திருக்கின்றாள். அக்கட்டில், நாற்பது பிராயத்தையுடையதும் போரிற் பொருதுபட்டதுமாகிய யானையின் கொம்பை வெட்டிக் கனமும் செம்மையும் ஒப்பத் தச்சன் உளியாலே இயற்றி இலைத்தொழிலை இடையே அமைத்த திரண்ட குடங்களையும் உள்ளிப்புட்டிலைப்போன்ற அடியினையும் உடையது. அதில் முத்தையுடைய சாளரங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. புலிவடிவம் பொறித்த பூத்தொழிலையுடைய கச்சுக்கள்இடமறையும்படி கட்டப்பட்டிருக்கின்றன. நிறம் ஊட்டப்பெற்ற பலசேணங்களை விரவவைத்து மான்வேட்டம் எழுதி முல்லை முதலிய மலர்களை நிரைத்து மெல்லிதாக விரித்த படுக்கை இடப்பட்டிருக்கிறது; அதன்மேல் அன்னத்தின் தூவியைப் பரப்பி அணை

களையிட்டுவைத்துத் துகில்களில் தூயவற்றை விரித்த பாயலில் அவள் இருக்கின்றனள். முன்பு முத்துமாலையை அணிந்திருந்த அவளுடைய மார்பில் தாலிநாணொன்றுமே தாழ்ந்திருக்கிறது; தன் கணவன் பிரிந்தமையினால் நெற்றியினிடத்து உலறிக்கிடந்த சிலவாகிய அளகத்தையும், குழைகளைக் களைந்து தாளுருவியை அழுத்தின காதையும் உடையவளாய், பொன்னாலாகிய தொடியை அணிந்திருந்த கைகளிற் சங்குவளையை அணிந்து, காப்பு நாணைக்கட்டிக்கொண்டு, முடக்கென்னும் மோதிரத்தையும் பூத்தொழிலையுடைய ஆடைஉடுக்கப் பெற்றிருந்த இடையில் மாசேறி விளங்கிய நூற்புடைவையையும் உடையளாய் வண்ணங்கொண்டெழுதாத சித்திரத்தைப் போலத் தோற்றுகின்றனள். அழகிய மகளிர் துயிலச்செய்தற்கு எண்ணித் தன் அடியை மெல்ல வருடவும், செவிலியர்கள் குறியவும் நெடியவுமாகிய பொய்யும் மெய்யுங் கலந்த மொழிகளைப் பலகாற் சொல்லி, “இப்பொழுதே நின்காதலர் வருவார்” எனக்கூறவும் அவள் மனம் பொருந்தாளாயினாள்; மிக வருந்துகின்றாள்; கட்டிலின் மேற்கட்டியில் எழுதியுள்ள பன்னிரண்டு ராசிகளில், சந்திரனோடு உள்ள உரோகிணியைப் பார்த்துத் தானும் அவ்வாறு தன் கணவனோடு இருக்கப் பெறுமையை நினைந்து நெட்டுயிர்ப்புக் கொண்டு கண்ணில் துளித்த நீர்த்துளிகளைத் தன் கைவிரலாற் கடைக்கண்களிற் சேர்த்தித் தெறித்துத் தனிமையாய் இருக்கின்றாள். இத்தகைய அன்புடைய தலைவிக்குத் தீதாயிருக்கின்ற ஆற்றுதற்கரிய துன்ப நினைவு தீரும்படி தலைவன் வருவானாக.

பாசறையிலுள்ள தலைவன் போர்க்களத்தே துதிக்கைகள் நிலத்திற் புரளும்படி களிறுகளைக் கொன்ற வீரருடைய விழுப்புண்ணைக் காணக்கருதித் தானிருக்கும் இடத்திற்குப் புறம்பே வந்து வாடைக்காற்று அடிக்குந்தோறும் விளக்கிலெரிகின்ற சுடர்கள் தென்றிசை நோக்கிச் சாய்ந்த தலையினையுடையனவாய் எரியாநிற்க வேப்பமாலையைத் தலையிற் கட்டிய வேலோடே முன்னேசெல்கின்ற சேனபதி வீரர்களைமுறையே தனக்குக்காட்டிக்கொண்டுவரத் தன் தோளினின்றும் நழுவி வீழ்கின்ற உத்தரீயத்தை இடப்பக்கத்தே தழுவிக்கொண்டு வாளையுடைய வீரனது தோளில் வலக்கையை வைத்தவனாகி முகமலர்ச்சியோடு வந்து மாலையையுடைய கொற்றக்குடை மழைத்துளியை மறைக்க நடு

யாமத்திலும் படுத்துறங்காமற் சில வீரர்களோடு புண்பட்ட வீரர்களைப் பார்த்துத் திரியா நிற்பான். அத்தகைய வேந்தன் பாசறையிடத்திலிருந்து பலரோடு செய்யும் போர்த்தொழில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்து இப்பொழுதே முடிவதாக; இஃது எனது விருப்பம்.

அ. குறிஞ்சிப்பாட்டு: இது, பாங்கி செவிலிக்கு அறத்தொடு நின்றவழிக் கூறும் கூற்றாக, ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்குக் கபிலர் பாடியது; பெருங்குறிஞ்சி யெனவும் வழங்கப்பெறும். இப்பாட்டு, புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய குறிஞ்சியுரிப்பொருட் சிறப்புப்பற்றிப் பெயர்பெற்றது. இதன் பொருட் சுருக்கம் வருமாறு:—

தாயே! வாழி! யான் கூறுகின்றவற்றைக் கேட்க விரும்புவாயாக.

நீ என் தோழியாகிய தலைவியின் மருந்து முதலியவற்றால் நீக்குதற்கரிய நோயினைப்பற்றித் தெரிந்தாரிடத்து வினவினை; கடவுளை வணங்கி வழிபட்டாய். அழகுகெட்டுத் தோள் நெகிழ அவள் தன்னுள்ளே அடக்கிக்கொண்ட துன்பம் வெளியிடற்கு அரியதாதலின் நான் அறிவியாமல் இருந்தேன். நீ நோயின் காரணத்தை அறியாமல் வருந்தாநின்றாய். "முத்து முதலியவற்றால் அமைந்த பூண் கெட்டால் பின்னும் வந்து கூடும்; அவ்வாறன்றி, குலத்திற்கேற்ற சால்பும் மேன்மையும் ஒழுக்கமும் குன்றினால் முனிவர்க்கேயெனினும் அக்குறையை முன்புபோல நிறைவுறுத்தல் அரியகாரியம்; ஆதலின், எந்தையின் காவலைநீங்கி நானும் தலைவனும் ஆராய்ந்துகொண்ட மணம் இதுவென்று தாய் முதலியோர்க்கு நாம் அறிவுறுத்தலினாற் பழியுண்டோ? அவ்வாறுசெய்தல் ஒழுக்கம்கெடாமற்காப்பதாகும். அவர்களுக்குநாம் அறிவுறுத்தியபின்னர் நம்மோடு பொருந்துமாறு நடவாராயின் இவ்வருத்தத்தைப் பொறுத்திருப்போம்; மறுபிறப்பில் இக்கூட்டம் கூடுவதாகுக" என்று சொல்லிச் செயலற்று இத்தலைவி வருந்துகின்றாள். போர் செய்யும் இருவேந்தர்களுக்கு இடையிற் சந்து செய்வித்தலை மேற்கொண்ட அறிஞரைப்போல, நின் காவலுக்கும் இவள் துன்பத்திற்கும் இடையே அகப்பட்டு அஞ்சி நானும் வருந்துகின்றேன். நன்மை, குடிச்சிறப்பு, குணம், உதவி

முதலியவற்றை ஆராய்ந்து ஒப்புநோக்கி எண்ணுமல் நாங்களாகத் துணிந்து செய்துகொண்ட உயிருக்குக் காவலாகிய இம்மணம் முன்பு நிகழ்ந்த விதத்தை நீ நன்கு உணரும்வண்ணம் சொல்லுகின்றேன்; நீ அதைக் கேட்டுச் சினவாதிருப்பாயாக.

"கதிர் முற்றிய தினையிற்படும் பறவைகளை ஓட்டிச் சூரியன் மறைந்தவுடன் வருவீராக" என்றுகூறி முன்னொருநாள் நீ எம்மை விடுத்தாய். அவ்வாறு யாங்கள் தினைப்புனத்திற்குச் சென்று பரண்மேலிருந்து கிளிமுதலியவற்றை ஓட்டிக்கொண்டு இருந்தேம். பின்னர், அருவியில் மிக்க விருப்பத்துடன் ஆடி எமக்கு விருப்பமாகிய பாட்டுக்களைப் பாடிவிட்டுக் கூந்தலைப் பிழிந்து உலர்த்தி, சிவந்த கண்ணையுடையேமாய்ச் செங்காந்தள் முதலிய மலர்களைப் பறித்து அகன்ற பாறையிலே குவித்துவிட்டு மலைப்பக்கத்துப் புனத்திலே கிளியை ஓட்டும் சொற்களைக்கூறி ஓட்டியும் தழையைக் கட்டி உடுத்தும் பலவகை மாலைகளைக் கூந்தலில் அணிந்துகொண்டும் அசோகமரத்தின் நிழலில் இருந்தேம்.

அப்பொழுது ஒரு தோன்றல் வந்தான். அவன், எண்ணெயும் மயிர்ச்சாந்தும் பூசி விரலாற்புலர்த்தப்பட்டு அகிற்புகையையூட்டி வண்டுகள் மொய்க்கப் பெற்ற குஞ்சியில் பலவகைமலர்களை அணிந்து பிச்சிமலராற்செய்த ஒற்றைவடத்தைச் சுற்றிக்கொண்டிருந்தான்; ஒருகாதில் அசோகந்தளிரைச் செருகிக்கொண்டிருந்தான்; மார்பில் அணிந்த பூமாலை ஆபரணத்தோடு விளங்கிற்று; கையில் அழகிய வில்லொன்றையேந்தி, அம்புகளைத் தெரிந்துபிடித்து, இடையிலே கச்சைக்கட்டி, காலில் வீரக்கழல் விளங்கத்தோன்றினன். அவனுடன் வந்த நாய்கள் குரைத்து எம்மை வளைத்துக்கொண்டன. நாங்கள் அவற்றிற்கு அஞ்சி நடுங்கி வேறிடத்திற்கு விரைந்துசென்றேம். அப்பொழுது அவன் எம்பால்வந்து நாங்கள் வெருவுதற்குத் தான் அஞ்சி மெல்லிய இனியசொற்களைக்கூறி எங்கள்கூந்தலின் அழகைப் புகழ்ந்து, "இளைய மகளீர்! யானைமுதலிய சில விலங்குகள் என்பால் நின்றும் நீங்கிப் போந்தன; அவைஇவ்விடத்திலே வந்தனவோ?" என வினவிநின்றான். யாங்கள் அதற்கு விடைகொடுத்தோமில்லை. அதனால் அவன் கலங்கி, "கெட்டுப்போன விலங்குகளைப்பற்றிக் கூறுவிடினும் எம்முடன் ஒருவார்த்தை சொல்லுதலும் உமக்குப் பழிபாமோ?" என்று கூறிவிட்டுப் பூங்கொம்பொன்றையெடுத்து எமக்கு அச்சத்தை

விளைத்த நாய்களை அடித்து ஓட்டி அவற்றின் குரைப்பை அடக்கி எம்முடைய வார்த்தைகள் தோன்றுஞ் செவ்வி பார்த்துநின்றான். அப்பொழுது வேடனொருவனால் துரத்தப்பட்ட ஒருகளிறானது மதத்தாலே செருக்கி மரங்களை முறித்துக்கொண்டு எங்கள்மேலே வந்தது. வரவே, உயிரைப் பாதுகாப்பதற்குரிய புகலிடத்தை யறியேமாகி நடுங்கி எங்கள் நாணத்தையும்விட்டு அத்தோன்றலை விரைந்தடைந்து வெறியுற்ற மயிலைப்போல நடுங்கிநின்றோம். உடனே அவன் ஓரம்பைவாங்கி அக்களிற்றின்முகத்திலே அழுந்த எய்தான்; அதனால் அது நில்லாது அயர்ந்து சென்றுவிட்டது. பின்னர், நாங்கள் கைகோத்துக்கொண்டு யாற்று வெள்ளத்திற் குதிக்கையினால் கால்தளர்ந்து நீர்வழிஒழுகினேம். அங்கே வந்த அத்தலைவன் உடனே நீரினின்றும் எம்மை எடுத்துத் தலைவியை நோக்கி, "நீ அஞ்சாதே" என்று கூறி நுதலை நீவினான்; இக்களவொழுக்கம் நீட்டித்திருக்கவேண்டுமென்று நினைத்து என் முகத்தைப் பார்த்து நகைத்தான். அப்பொழுது தனக்கு இயல்பாகிய நாணமும் அச்சமும் தோன்ற இவள் அவனிடத்தினின்றும் நீங்க முயன்றும் அவன் விடானாகி அணைத்துத் தழுவினான். பின்பு மலைகள் பொருந்திய நாட்டையுடைய அவன் இவளுள்ளத்து நிகழ்ந்த வரைவு வேட்கையை நினைந்து, "விருந்தினர்களுக்கு இட்டு எஞ்சிய உணவை நீ இட நான் உண்டல் சிறந்தது" என்று கூறுவதனால் இல்லறம் சிறந்ததென்று அறிவித்து மலையிலுள்ள முருகக்கடவுளை வாழ்த்திப் பிரியேனெனச் சூளுறவு கூறித் தெளிவித்து அருவி நீரைக்குடித்தான். அதனால் இவள் நெஞ்சு பொருந்தினாள். இவ்வாறுசோலையிலே களிறுதருபுணர்ச்சியை அன்றைப் பகற்பொழுதெல்லாம் இருந்துபோக்கினர். பின்னர், சூரியன் அத்தமித்தது; மான்கணம் மரத்தடியில் வந்து கூடின; பசுக்கள் கன்றுகளை நினைந்து மன்றுகளிற் புக்கன; அன்றில்கள் அகவின; பாம்புகள் இரைதேடல் கருதி மணியை உமிழ்ந்தன;கோவலர் ஆம்பற்பண்ணை எழுப்பினர்; ஆம்பற் போதுகள் மலர்ந்தன; மகளிர் விளக்கை யேற்றினர்; அந்தணர் மாலைக்கடன்களைச் செய்தனர்; வேடர் பரணின்மேல் நெருப்பை எரித்தனர்; மேகங்கள் மலையைச் சூழ்ந்து கறுத்தன; காட்டில் விலங்குகள் முழங்கின; பறவைகள் கூட்டில் ஒலித்தன; இவ்வாறு மாலைக்காலம் வருதலை யறிந்து அவன் இவளை நோக்கி, "உன்னுடைய கையை உன் சுற்றத்தார் பற்றி எமக்குத்

தர நாட்டிலுள்ளார் வெளிப்பட அறியும் கலியாணத்தினைப் பின்பு செய்வேம்; சில நாள் வருந்துதலை யொழிக" என்ற அன்புடைய மொழிகளைக் கூறி எம்மோடே வந்து நம்மூர் நீர்த்துறையில் எம்மை விட்டுவிட்டு மீண்டு சென்றான்.

அன்று முதல் அவன் அன்றேபோன்ற விருப்பத்துடன் என்றும் இராப்பொழுதில் வருகின்றான். அவ்வாறு வருங்காலங்களில், ஊர்காவலர் திரிந்து காத்தாலும் நாய்கள்குரைத்தாலும் நீ துயில் நீங்கினும் நிலவு எறிப்பினும் இவளது முயக்கத்தைப் பெறமாட்டான்; குறிபிழைத்து வாளா மீள நேரினும் அதற்காகச் சினப்பானல்லன்.

அவன் இளமையினின்றும் நீங்கியவனல்லன்; தனக்குரிய செல்வத்தால் தன் குணங்களில் வழுவியவனுமல்லன்.

அச்சத்தையுடைய இவ்வூரில் வருகின்ற அவனது நிலையற்ற வரவை நினைந்து இவள் வருந்துவாள்; அன்றி, "அவர்வருகின்ற இரவிலே புலியும் சிங்கமும் கரடியும் காட்டுப்பசுவும் களிறும் இடியும் பாம்பும் முதலைகளும் கொடிப்பிணக்கும் பாறைகளும் பிசாசுகளும் பெரும்பாம்பும் பிறவுமாகிய துன்பந்தருவனவற்றை வழியிலே உள்ள மலைமுழைஞ்சுகள் உடையனவாயிருக்குமே!" என்று ஒவ்வொருநாளும் நினைக்குந்தோறும் கண்ணீர் சிந்தி வலைப்பட்ட மயில் போல அழகுகுலைந்து கலங்கா நிற்பாள். இதுவே நிகழ்ந்தது.

௬. பட்டினப்பாலை: இது, வேற்று நாட்டிற்குப் பொருளீட்டும் பொருட்டுச் செல்லத்தொடங்கிய தலைவன் தனது நெஞ்சை நோக்கி, 'கரிகாற்பெருவளத்தானுக்குரிய காவிரிப் பூம்பட்டினத்தைப் பெறுவேனெனினும் அவனது செங்கோலைப்போற்குளிர்ந்த தோள்களையுடைய தலைவியைப்பிரிந்து அவன் வேலைப்போல் வெம்மையை யுடைய பாலைநிலத்தைக் கடந்து வாரேன்' என்று செலவழுங்கிக் கூறுங்கூற்றாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. இது வஞ்சிநெடும் பாட்டெனவும் வழங்கும். இப்பாட்டைப் பாடியதற்காக உருத்திரங்கண்ணனார் பதினாறுயிரம் பொன் கரிகாற்பெருவளத்தானாற் பெற்றனரென்று தெரிகிறது. பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறிய பாலைத்திணையாதலின் இது பட்டினப்பாலையென்னும் பெயர்பெற்றது. இதில் பிரிதல் நிமித்தமாகிய பாலையுரிப்பொருளே சிறந்து வந்தது. இதன் பொருட் சுருக்கம் வருமாறு:—

மழைக்கோளாகிய சுக்கிரன் தென்றிசைக்கட் செல்லினும் மழையில்லாமையாற் பஞ்சகாலம் வந்தாலும் தவறுமற் காவிரி வந்துபாயும் பெருமை வாய்ந்தது சோழநாடு. அந்நதியின் நீர் பரத்தலால் கழனிகளில் விளைவு குறையாது. அக்கழனிகளிற் கரும்பை அடும் ஆலைக் கொட்டிலினுள்ள நெருப்பினலே நெய்தற் பூக்கள் வாடும். அந்நிலத்தில் நெற்கதிரைத்தின்ற எருமைக் கன்றுகள் நெற்கூடுகளின் நிழலிலே துயிலும். தெங்கு, வாழை, கமுகு, மஞ்சள், மா, பனை, சேம்பு, இஞ்சி முதலியவற்றையுடைய வீடுகளின் வாசலில் உலர்த்திய நெல்லைத் தின்னவரும் கோழிகளை மகளிர் பொற்குழைகளைக் கழற்றியெறிந்து ஓட்டுவார்கள். அக்குழைகள் சிறுவர்கள் உருட்டும் சிறுதேர்களைச் செல்லவொட்டாதபடி தடுக்கும். பல குடிகள்வாழும் இத்தகைய பாக்கங்களையுடையனவும் ஒன்றற்கொன்று அணியனவுமாகிய பல ஊர்களை உடையது அச்சோழநாடு.

அந்நாட்டிலே உள்ள காவிரிப்பூம்பட்டினம், உப்பை விற்றுவிட்டு அதற்கு விலையாக நெல்லைக்கொணர்ந்த படகைக் குதிரைகளைப்போலத் தறிகளிலே பிணிக்கும் கழிசூழ்ந்த பாக்கத்தினையும், சோலைகளையும், உயர்ந்த கரைகளையுடைய பொய்கைகளையும், இரண்டு ஏரிகளையும், புலியடையாளமிட்ட இரட்டைக்கதவுகளையுடைய மதிலினையும் உடையது; சோறிடுஞ் சாலைகள் பலவற்றைத் தன்பாற் கொண்டுள்ளது. அச்சாலைகளில் வடித்தகஞ்சி ஆறுபோல ஓடும்; அதில் ஆனேறுகள் தம்மிற் சண்டையிடுவதனல் ஈரம்புலர்ந்து புழுதி யுண்டாகும்; அப்புழுதி அருகிலுள்ள மனைகளைப் புழுதி படிந்த யானையைப்போலே தோன்றும்படி மாசுபடியப் பண்ணும். பின்னும் அப்பட்டினம் கேணிகளையுடைய முற்றத்தோடு கூடிய எருத்துச் சாலைகளையும், தவஞ்செய்வோர் இருப்பிடங்களையும், சோலைகளில் முனிவர் வேள்வி செய்வதனுலுண்டாகிய புகையை வெறுத்துக் குயிலினங்கள் பெடைகளோடுசென்று பூதங்களாலே காக்கப்படும் கோயிலினுள்ள தூதுணம்புறவுகளோடு குடியிருக்கும் பழைய மரங்களையுடைய இடங்களையும், மணல் நிரம்பிய அகன்ற மேடுகளையும் உடையது. அந்நகரிலுள்ள புறச்சேரியினுள்ள பரதவர் இறுமீனின் சுட்ட இறைச்சியையும் ஆமைப்புழுக்கலையும் உண்டு அடும்பின்மலரையும் ஆம்பல் மலரையும் சூடிப் பலரோடு கூடிக் கையாலும் படைகளாலும் பொருது சண்டையிடு

472. III.

வார்கள்; அப்பொழுது அவர்கள் எறியும் கவண்கல்லிற்கு வெருவிப் பறவைகள் அங்கேயுள்ள பனையினின்றும் புறப்பட்டுச் செல்லும்; பன்றி, கோழி, உறைக்கிணறு என்பன அச்சேரியில் இருக்கும். தூண்டிற்கோலைச் செருகிவைத்த சிறிய கூரையையுடைய வீடுகளுக்கு நடுவே மணற்பரப்பில் சுறுமீனின் கொம்பைநட்டு அதிலே சார்த்திய தெய்வத்தைப் பரதவர் வழிபடுவார்கள்; தாழை மலரை அணிந்துகொண்டு பனங்கள்ளைக் குடித்து, உவாநாட்களிற் கடலில் மீன்வேட்டைக்குச் செல்லாமல், மகளிரோடு உண்டாட்டயர்வர்; சங்கமுகத்திலே நீராடிப் பின்பு நன்னீரிற் குளித்தும் அலவனாட்டியும் பஞ்சாய்க்கோரைகளாற் பாவைகளைச் செய்தும் பகலில் விளையாடுவர். மங்கையர் மைந்தர்களுடன் நீரில் விளையாடுவர். இராக்காலத்தில், மீன்படகிலே உள்ள பரதவர்கள் மாடங்களில் இட்ட விளக்குகளை எண்ணுநிற்பர். கரையிலுள்ள பரதவர் பாடலைக்கேட்டு நாடகம்கண்டு இன்புற்றிருப்பர்; பின்பு காவிரி மணல்மேட்டிலே துயில்கொள்வர்.

தாழை நிறைந்த தெருக்களில் அரசனுக்குரிய பொருள்களைக் காக்கும் காவலாளர்கள் ஒவ்வொருநாளும் சலிப்பின்றிச் சுங்கங் கொள்ளுவார்கள். கப்பலிலிருந்து நிலத்திலிறக்கப்படுவனவும், நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோற்கிடக்கும். மாடங்களில் உள்ள மகளிர்கள் கைகளைக்கூப்பி, வெறியாடும் மகளிரோடு பொருந்தி வேய்ங்குழல் முதலியனவற்றை வாசிக்க விழாக்கொண்ட ஆவணத்தையுடையது அப்பட்டினம். தெய்வத்திற்காக எடுத்த கொடிகளும், விலைப்பண்டங்களை அறிவித்தற்குக் கட்டிய கொடிகளும், ஆசிரியர்கள் வாதுகருதிவைத்த கொடிகளும், கப்பலின் கூம்பிலுள்ள கொடிகளும், கள்ளுக்கடையில் நாட்டிய கொடிகளும் நகர்ப்பக்கத்தில் விரவியிருக்கும். அங்கே கடல்வழியே வந்த குதிரைகளும், நிலத்தின்வழியேவந்த மிளகுபொதிகளும், இமயத்திலுண்டான மணிகளும் பொன்னும், குடகமலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், தென்கடலிற் பிறந்த முத்தும், கீழ்கடலில் உண்டான பவளமும், கங்கையில் உண்டான பொருள்களும், காவிரியில் உண்டான வளங்களும், ஈழநாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், காழகநாட்டுப் பொருள்களும், பிறஅரிய பெரிய பொருள்களும்கூடி வளம் மிகுந்த பரந்த இடத்தையுடைய

தெருக்கள் உள்ளன. பின்னும், அப்பட்டினம் வணிகர் நெருங்கியிருக்கும் இருப்பிடங்கள் பலவற்றை உடையது; அவ்வணிகர்கள் வலையருடைய மனைகளின் முன்னே நீரில் மீன்கள் அச்சமற்றுத் திரியவும் ஊன்விற்பார் குடிசைகளில் ஆடு முதலிய விலங்குகள் அச்சமற்றுத்திரியவும் அச்சாதியாரிடமிருந்து கொலையை நீக்குவார்கள்; கள்வரிடமிருந்து களவுத்தன்மையைப் போக்குவார்கள்; தேவர்களுக்கு ஆகுதிகளைக் கொடுத்து வழிபடுவார்கள்; பசுக்களையும் எருதுகளையும் பாதுகாப்பார்கள்; உணவையும் பிறவற்றையும் உரியார்க்கு அளித்து நுகத்தடியிலுள்ள பகலாணிபோல நடுவு நிலைமையையுடைய நெஞ்சினையுடையாராய் உண்மையைக்கூறித் தம் பொருள்களையும் பிறர் பொருள்களையும் ஒப்பநினைந்து, கொடுக்கும் பண்டத்தின் மதிப்பிற்கு அதிகமாகப் பொருளைக் கொள்ளாமலும் கொள்ளும் பொருட்குக் குறையப் பண்டங்களைக் கொடாமலும் பலபண்டங்களை இலாபத்தை வெளியாகச் சொல்லி விற்பார்கள்.

இத்தகைய இடங்களையுடையதாகிப் பல பாஷைகள் பரவிய தேசத்திலுள்ளார்பலரும் கலந்து இனிதே வாழ்ந்திருப்பதும் குறைவற்ற சிறப்பையுடையதுமாகிய அந்தக்காவிரிப்பூம் பட்டினத்தைப் பெறுவேனெனினும், நெஞ்சமே! தலைவி இங்கே தனியே இருக்க அவளைநீங்கி நான்வருவேனல்லேன். அதன் காரணம் என்னெனிற் கூறுவேன்; கேட்பாயாக:

சிங்கம் கூட்டில் அடைபட்டுக் கிடந்ததுபோலப் பகைவரது சிறையிலிருந்து பின்பு, யானை தன்னை அகப்படுத்திய குழியினின்றும் மீண்டதுபோலப் பகைவர் காவலினின்றும் வெளிப்போந்து அவர்களைவென்று தனக்குரிய அரச உரிமையைப் பெற்றவனும், தான் பெற்றவற்றோடு நில்லாமல் மேலும் வெற்றியில் ஆசைமிக்குப் படைகளுடன் சென்று பகைவர்களை எதிர்த்து வென்று அவர்கள் நாட்டிலுள்ள வயல்களை அழித்து மலர்கள் நிறைந்திருந்த பொய்கைகள் நீரற்றுக்கிடப்பவும் மகளிர் விளக்கையேற்றப் பலரும் தொழும் இயல்புள்ள கந்துகளையுடைய பொதியில்களிற் காட்டுயானைகள் இருப்பவும் மன்றங்களிற் பேய்கள் ஆடவும் கிளிகள் இனிய பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருந்த வீடுகளிலுள்ள குதிர்களிற் கோட்டான் இருந்து ஒலிப்பவும் ஊர்களைப் பாழாக்கியவனும், அச்செயலோடு மனம் பொருந்தானாகி, "இவன் மலை

யைப் பொடிபடுத்துவான்; கடலைத் தூர்த்து விடுவான்; வானத்தையும் இடித்து விடுவான்; காற்றையும் மாற்றுவான்" என்று தன் மிடல் மிகுதியைக் கண்டார் அஞ்சிக் கூறுமாறு வெற்றித் துறைகளில் முற்ற முயன்று ஒளிநாட்டார் அருவாளர் வடநாட்டார் குடவர் பாண்டியன் பொதுவர் இருங்கோவேள் என்பவர்களை வென்றவனும், தன்னுடைய நாட்டிற் காடாகியிருந்த இடங்களை அழித்து நாடாக்கி அந்நாட்டை வளம்படுத்தற்குப் பலகுளங்களை வெட்டி உறையூரை விரிவுற அமைத்துக் கோயில்களையும் பழங்குடிகளையும் பண்டுபோல நிலைநிறுத்திப் பெரிய வாயில்களையும் சிறிய வாயில்களையும் அமைத்து மதில்களையும் அவற்றில் அம்புக்கட்டுகளையும் வைத்தவனும், வேற்று வேந்தர் வணங்கும் வீரக் கழலையணிந்த காலையும் சிங்கத்தைப் போன்ற வலியையும் உடையவனுமாகிய கரிகாற் பெருவளத்தான் பகைவரைக்கொல்ல ஓச்சிய வேலைக்காட்டிலும் பாலைநிலம் வெம்மையையுடையது; இவனுடைய தோள்கள் அவனுடைய செங்கோலைவிடக் குளிர்ச்சியையுடையன.

௧௦. மலைபடுகடாம்: இது, செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன்பாற் பரிசில் பெற்றானொருவன் பல பாணர்களோடும் விறலியர்களோடும் பலவகை வாத்தியங்களைச்சுமந்துகொண்டு வறுமைத்துன்பத்தால் உபகாரிகளைத் தேடியலையும் கூத்தனொருவனை அந் நன்னனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது. இது கூத்தராற்றுப் படையெனவும் வழங்கும். "அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த, மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப" (347 - 8) என்ற அடிகள் முதலியவற்றால் மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பித்ததனால் இப்பாட்டு மலைபடுகடாமென்று பெயர்பெற்றது; கடாமென்பது ஆகுபெயராய் அதனாற்பிறந்த ஓசையை உணர்த்திற்று. இதன் பொருட்சுருக்கம் வருமாறு:—

முழவு முதலிய வாத்தியங்களை அடக்கிய பைகளைக் கட்டிய காமரத்தைத் தோளில் தாங்கிக்கொண்டு மலைப்பக்கத்துள்ள அரியவழியில் நடந்துவந்து இளைப்புற்றுப் பாணரும் விறலியரும் சுற்ற மரநிழலிலிருந்த கூத்தர்தலைவனே! யாங்கள் முன்பு உம்

மினும் வறுமையுற்று வாடியிருந்தவர்களே; இப்போது நன்னன் பாற்சென்று பரிசில்பெற்றுக் கவலையற்று வருகின்றேம். நீங்களும் அவனை அடைவீராயின் நல்ல பயனை அடைவீர்கள். என்னைச் சந்தித்தமையால் நீங்கள் புறப்பட்டவேளை நல்லவேளையே; நல்ல சகுனத்தையும் நீவிர் பெற்றிருத்தல் கூடுமென்று எண்ணுகிறேன். இனி, அவனூரை அடைதற்குரிய வழியின் நன்மை தீமைகளையும் இடையிடையே தங்கித்தங்கி இளைப்பாறுவதற்கு ஏற்ற இடங்களையும் அவனுடைய மலைநாட்டிலும் காட்டுநாட்டிலும் தண்பணைநாட்டிலும் உள்ள உணவின்வகைகளையும் அவனுடைய மலையின் தன்மையையும் அங்கங்கேயுள்ள சோலைகள் காடுகள் இவற்றின் இயல்புகளையும் அவனுடைய வண்மையையும் அவனது அறிவின் வன்மையையும் அவனுடைய நாளோலக்கச் சிறப்பையும் அவன் சுற்றத்தாரது நல்லொழுக்கத்தினையும் அவனுடைய நவிரமென்னும் மலையில் எழுந்தருளியிருக்கும் 'காரியுண்டிக்கடவுள்' என்ற திருநாமம்பெற்ற சிவபெருமானது இயல்பையும் அவனது தலைமையையும் அவன் முன்னோர்களின் பெருமையையும் அவன் ஊரின் இயல்பையும் உள்ளவாறு சொல்லுவேன்; அவற்றைக் கேட்டிடுக:

அவன் நகரத்துக்குச் செல்லுகின்றவழி புதுவருவாய்களையுடைய ஊர்கள் நெருங்கப்பெற்று எங்கும் காணப்படாத புதிய காட்சிகளையுடையது. வேண்டியகாலத்தில் மழை பெய்கையினாலே அங்கங்கேயுள்ளவர்கள் விரும்பியபடியே பயிர்கள் விளைந்து விளங்கும். கொல்லைகளில் முசுட்டைக்கொடிகள் கார்த்திகை நக்ஷத்திரம்போன்ற பூக்களைப்பெற்று விளங்கும். எள்ளுப் பயிர்கள் ஒரு கைப்பிடியில் ஏழுகாய்களே அடங்கும்படி நெய் யொழுகக் காய்த்து வளர்ந்திருக்கும். விளையாட்டுச் சண்டை செய்கின்ற யானைக்கன்றுகளின் துதிக்கை ஒன்றேடொன்று பிணைந்தாற்போலவே தினைக்கதிர் ஒன்றேடொன்று நெருங்கி அறுத்தற்குரிய பருவத்தைப்பெற்றுத் தோன்றுநிற்கும். தினையையறுத்த கொல்லைகளில் அரிதாள்தோறும் அவரைகள் தயிர்க்கட்டிகளைப் போற் பூக்களைக் கீழே உதிர்த்து அரிவாள்போன்ற காய்களையுடையனவாய்த் தோன்றும். வரகப்பயிர்கள், தருக்கம் பேசுவோனுடைய இணைந்துதோன்றும் கைவிரல்களைப்போன்று இரட்டித்த கதிர்கள் முற்றி அரிவாளாலே அரிதலுறுநிற்கும். ஐவனநெல்லும்

வெண்ணெல்லும் பால்கட்டிச் சிறிதுமுற்றி நாற்றிசைக் காற்றுக் களாலும் ஊடறுக்கப்பட்டு நன்றாக விளைந்து காணப்படும். கரும்புகள் மிக வளர்ந்து வேற்படைகளையுடைய சேனைகள் ஓடுதல்போலவே காற்றாலே ஒருபக்கமாகச் சாய்ந்து அசையாநிற் கும். காட்டிலே மூங்கில்காய்த்த நெல் அவலிடிக்கும் பதத்தைக் கொண்டு தோன்றும். வெண்சிறுகடுகுகள் உழாமல் களைக்கொட்டால் அடிவரைந்து கொத்தும் தோட்டங்களில் விதைக்கப்பட்டு நெருங்கி விளைந்திருக்கும். கருநெய்தல்கள் மலர்ந்து விளங்கும். இஞ்சிகள் பாவைபோன்ற கிழங்குகளை யுடையனவாய் உறைப்புச் சுவையைப் பெற்றுத் தோன்றும். கவலைக் கிழங்குகள் குழிகள் தோறும் பெண்யானையின் மடித்த முழந்தாளைப்போலச் சிறந்து வளர்ந்திருக்கும். யானையை வேல்குத்தினாற்போலச் சிறுமலையின் மேலே தம்முடைய பூக்கள் படும்படி நிற்கும் வாழைகளின் காய்க் குலைகள் பழுத்து விளங்காநிற்கும். பெருமூங்கில்கள் காய்த்து முற்றிய நெல்லுடன் கூடி அசையாநிற்கும். அகாலங்களிலும் நில விசேடத்தால் மரங்கள் பலனைக் கொடுத்தலால் நாவலின்பழங்கள் காற்றாலே உதிர்ந்து பாறைகளிலே பரந்துகிடக்கும். விடாய்த்த காலத்தில் வாயில் நீரூறுதற்குக் காரணமான உயவைக்கொடிகள் எங்கும் படர்ந்து தோன்றும். கூவைக்கிழங்குகள் முற்றிக் கிடக் கும். தேமாம்பழங்கள் சாறு மிகுந்து உண்பாரை வேறொன்றிற் செல்லாதபடி தடுத்து விளங்காநிற்கும். ஈரப்பலாக்களின் பழங் கள் தாமே வெடித்து உள்ளேயுள்ள விதைகளைச் சிந்தாநிற்கும். பலாமரங்கள் வழிப்போக்கர்களான கூத்தர்களுடைய மத்தளங் கள்போலவே கீழும் மேலும் காய்த்து முற்றி விளைந்து தோன்றா நிற்கும்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டுசென்று வேடர்க ளுடைய சிறிய ஊர்களிலே தங்குவீராயின் அவர்களால் நல்ல உணவுகளைப் பெறுவீர். பெற்ற அன்று அங்கே அவர்களுடன் தங்கி இளைப்பாறி அசோகம்பூக்களைச் சுற்றத்துடன் சூடிக் கொண்டு அம்மரங்களுள்ள செவ்விய வழியிற்போய்ப் பின்பு மலையினுள்ள அரிய வழியில் இறங்கிச்சென்று அதன் பக்கத்தி னுள்ள சீறூர்களை அடைந்து, "யாங்கள் நன்னனுடைய கூத்தரேம்" என்று சொல்லுவீராயின், நீங்கள் அவ்வூரரால் அழைக்கப்பெற்று அவர்கள் நெடுந்தூரம் நடந்துவந்த உம்

முடைய வருத்தம் தீரும்படி இனியமொழிகளைக் கூறி நெய்யில் வெந்த பொரியலையும் அழகிய தினைச்சோற்றையும் கொடுக்க உண்டு மகிழ்வீர். நன்னனுடைய மலைமேலுள்ள நாடு மிகச் சிறந்தது. அங்கே செல்லுவீராயின், நீர் பெறுவனவற்றைச் சொல்லுவேன்; கேட்பீராக: உடும்பின் தசையோடு கடமானு டைய கொழுத்த இறைச்சியையும் முள்ளம்பன்றியின் இறைச்சி யையும் கலந்துதின்று இடையிடையே தேனாற்செய்த கள்ளின் தெளிவை மிகப்பருகிப் பின்பு நெல்லாற் சமைத்த கள்ளினை யும் உண்டு களிப்புற்றுத் துயின்று விடியற்காலத்துள்ள உம் முடைய மயக்கம் தீரும்படி பலாவிதையின் மாவையும் புளியை யும் கலந்து வைத்த மோருலையில் மூங்கிலரிசியைச் சொரிந்து ஆக்கிய சோற்றைக் குறமங்கையர் உண்பிக்க அவ்வுணவையும் மலையுச்சியிலிருந்துகொண்டுவந்த சந்தனம், அகில், பொன், மணி முதலியவற்றையும் அவர்களுடைய மனைகள்தோறும் பெற்று மகிழ்வீர். இங்ஙனம் பெறுதலினாலே தாமதித்து நன்னனிடம் சென்று பெறக்கருதிய பரிசிலை நீவிர் மறக்கவும்கூடும். அன்றியும் தெய்வங்கள் விரும்பும் பூக்களைக் கிட்டினாலும் அங்கேயுள்ள வரை யரமகளிர் இருத்தலைக் கண்டாலும் உயிர்போம்படி வெதும்பி நடுங்குதற்கும் உரியீராவீர். ஆகையினாலே அம்மலையிடங்களிற் பலநாள் நில்லாது இறங்கி நிலத்திலுள்ள நாட்டிற் செல்லுமின் தினைப்புனத்தை அழிக்கும் பன்றிகளைப் பிடித்தற்கு வைக்கப் பட்ட கற்பொறிகள் அவ்வழிகளிலுண்டு; ஆதலால் அவ்வழியிற் போக எண்ணுவீராயின் பொழுதுவிடிந்தபின் செல்லுவீராக. சிறு வழிகளில் மேட்டுநிலத்தில் வெடிப்புக்கள் உண்டு; அவ்வெடிப்புக் களில் பாம்புகள் மறைந்து ஒடுங்கிக்கிடக்கும் குழிகளும் உள்ளன; அக்குழிகளை மரங்களின்மேலே ஏறிக் கையைக் கொட்டிப் பார்த்து விட்டு, அப்பாம்புகள் மகிழும்படி விறலியர் அஞ்சலிசெய்து வாழ்த்தாநிற்க மிருகங்கள் கிடக்கும் வழியினின்றும் சிறிது தாண் டிப்போய் வலப்பக்கத்து வழியை உமக்கு வழியாகக் கொண்டு போவீராக. விளைந்த தினைக்கொல்லையைக் காத்தற்கு வந்து அத னைச் சூழ்ந்த குறவர் யானைகளால் அஃது அழிந்துபோவதற்கு வருந்தி மிக உயர்ந்த பரணிலே ஏறி, பக்கத்துள்ள குறுங்காட் டிடத்தேநின்ற அந்த யானைகள் பகற்காலத்தில் அங்கேநின்றும் வேறிடங்களுக்குப் போய்விடும்படி வீசிய கவண்கற்கள் குரங்குகள்

தம் குட்டிகளோடு அஞ்சியோடும்படி இடையேயுள்ள மூங்கில்களைக் கடந்து தவறுமல் வரும்; அவை யமன்போன்றவை; ஆதலால், அக்கற்கள் உங்கள்மேலே படாதபடி மரங்களிலே மறைந்து செல்லுவீராக. காவற்காட்டினையும் மடுக்களையும் நீர்குத்தின இடங்களையும் உடையனவாய் ஏறுதற்கும் இறங்குதற்கும் அரியனவாயிருத்தலினாலே அகழியிலே இறங்கிச் சென்றாற்போலும் காட்டாற்றுவழிகள் கால் வழுக்கும் இடங்களையுடையன; அவ்விடத்திற் பெரிய மரங்களிற் சுற்றிக்கிடக்கின்ற பெருங்கொடிகளைப் பிடித்துக்கொண்டும் ஒருவரையொருவர் பாதுகாத்துக்கொண்டும் பிள்ளைகளோடே போவீராக. பக்கமலையில் விழுந்தவர்களை மறைத்துவிடும்படியான ஆழமுள்ள குளங்களுக்கு அருகில் இடத்தை மறைத்துக்கொண்டிருக்கும் நுண்ணியபாசி ஊன்றியிட்ட அடியை ஓடப்பண்ணும்; அன்றியும் அவ்விடங்கள் செல்லுதற்கு அருமையையுமுடையன; அதற்குப் பரிகாரமாக வழிகளின் இருபுறத்தும் பின்னிவளர்ந்த சிறு மூங்கில்களின் கோல்களையும் கொறுக்காந்தட்டைகளின் கோல்களையும் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு போமின். யானைகளையும் அம்புகளையுமுடைய முன்படையால் அழகுபெற்றதும், ஆற்றங்கரையிலுள்ளதும், மதிலையுடையதுமான திருப்பதியை யடைந்து, அக்கோயிலிலுள்ளவரும் துதித்தற்கரியவருமாகிய காரியுண்டிக் கடவுளைத் தரிசிக்கும்பொழுது அவரை நீவிர் வணங்கிவிட்டு உடனே செல்லுக; அங்ஙனம் செல்லுதலைத் தவிர்த்து உங்களுடைய வாத்தியங்களை வாசிக்கவேண்டா; வாசிப்பீராயின், அம்மலையில் இடைவிடாமற் பெய்துகொண்டிருக்கும் மழையால் அவை நனைந்துபோய்விடும்; அல்லாமல் நீங்கள் போதலும் அரிது. அன்றியும் அந்தக் காட்டில் மயில்கள் ஆடி இளைத்துநின்றாலும் ஆண்குரங்குகள் நீண்ட மூங்கிற்கிளைகளிலே பாய்ந்தாலும் மலையில் வைக்கப்பட்டுள்ள தேனடை தோற்றினாலும் அவற்றை நீங்கள் பார்க்கவேண்டா; பார்த்தால் வழி தப்பிவிடும். அங்ஙனம் போய் மலைவழியிலேயுள்ள காட்டிற் செல்லுவீராயின், உயர்ந்த பரணின்மேலேயிருந்து புனத்தைக் காப்பவன் எய்த அம்பால் தன்மார்பில் புண்மிகுந்து அந்த அம்போடே ஓடிப்போய் வழியிற் கிடப்பதாகிய கொழுத்த பன்றியைக் காண்பீர்; கண்டால், இழைந்த மூங்கிலிலிருந்து உண்டாகிய தீயினாலே அதனை வதக்கி மயிர்போகச்சீவித்தின்று சுனை

நீரைக் குடித்து எஞ்சிய தசையைப் பொதியாகக்கட்டிக் கைக்
கொண்டு அவ்விடத்தே இராத்திரிவேளையில் அப்பாற்போவதை
நிறுத்திவிட்டு உம்முடைய வீடுபோன்ற குகைகளிலே பிள்ளைக
ளோடே தங்குங்கள். இங்ஙனம் தங்கி இளைப்பாறிவிட்டு விடியற்
காலத்திலே எழுந்து செல்லுவீராக. செல்லுங்கால் யானையை
விழுங்குவதும் வெட்டிய பெருமரம் கிடந்தாற்போல்வதுமாகிய
பெரும்பாம்பு விழுந்துகிடக்கும் வழியைவிட்டு விலகிச்செல்லுக.
செல்லுகையில் தெய்வங்களன்றி மானிடரால் விரும்பப்படாதன
வாய் அங்கேயுள்ள பூக்களையும், பழங்களையும், குளங்களைக்கண்
டாற்போலும் குளிர்ச்சியையுடைய மரங்களின் தொகுதிகளையும்
இடப்பக்கத்தும் வலப்பக்கத்தும் பார்த்துக்கொண்டே யான்
கூறிய அடையாளங்களை நினைந்து அவற்றை அணுகாமற் செல்லு
வீராக. நாடுகளையெல்லாம் காணுதற்குரிய அகன்ற இடத்தை
யுடைய உச்சிமலையில் மெல்லமெல்லப் போவீராக; அங்ஙனம்
போகையில் வெயில்வெப்பம் இல்லாததும், குறவர்கள்கூட்டம்
பகலிலும் மயங்குதற்குரியதுமான குன்றத்தை அடைவீர்;
அடைந்தால் அதனிடத்தே செல்லுதலை ஒழிக; சென்றால் திசை
மயக்கத்தால் வருந்துவீர். ஆதலால் அதனருகிலுள்ள விசாலமான
பாறையிற் சேர்ந்துநின்று கல்லென்னும் ஓசையுண்டாகும்படி
நும்முடைய வாத்தியங்களைக் கொட்டுவீராக; கொட்டினால், நன்
னனுடைய கட்டளையால் காட்டைக் காத்துக்கொண்டு உச்சிமலை
யில் இருக்கும் வேடர்கள் பலர், அப்பொழுது அவ்வாத்திய
வோசையைக்கேட்டு, வெள்ளத்தில் அகப்பட்டு வருந்தும் மனிதர்
களின் துன்பத்தைக்கண்டு ஓடிவந்து விரைந்து எடுப்பாரைப்
போலே, உங்கள் வருத்தம் தீரும்படி மிகவிரைந்துவந்து நறிய
பூக்களையும் இனிய பழங்களையும் உங்களுக்குக் கொடுப்பார். நீங்
கள் அம்மலர்களைச் சூடி அப்பழங்களை உண்டபின், இடையூறு
மிகுந்த வழியில் அவர்கள் உங்களுக்கு முற்படச் செல்லுவர்.
நீங்கள் அவர்கள்பின்னே சென்று சுற்றத்தோடு மனமகிழ்ச்
சியை அடைவீர். அடைந்து அவர் கூறிய திசையை நினைந்து
புதியராய்வந்தோர் பார்த்தாலும் அவர்கள் தலைகளைச் சுற்றச்செய்
யும் பக்கமலையில் குறியனவும் நெடியனவுமாகிய குவடுகளினின்
றும் முறைமைப்பட இறங்கிப் பூக்கள் பரந்தநிழலிலே இளைப்பாறி
யிருப்பின், அப்பொழுது திசைகடோறும் அருவியாடும் தெய்வ

மகளிர் அவ்வருவியைக் கையாற் குடையுந்தோறும் உங்கள் வாத்தியத்தைப்போல உண்டாகிற இனிய ஓசையையும், மலைமேலிட்ட பரணிலுள்ள வேடர்கள் தினைப்புனத்திற்புகுந்து தின்னும்யானைத் தலைவனைப் பிடித்தற்குச் செய்யும் ஆரவாரத்தையும், குகையில் தங்கியிருக்கும் முள்ளம்பன்றி தனது கூரியமுள்ளால் எய்து வருத்துகையினாலே வீழ்ந்த வேடர்கள் அழும் முழக்கத்தையும், தம் கணவர்மார்பில் புலிபாய்ந்தமையாலுண்டாகிய விழுப்புண்ணை ஆற்றுதற்கு இது தக்கதென்று எண்ணிக் குறத்தியர் பாடும் பாட்டாலெழுந்த ஓசையையும், முதனாளிலே பூத்த வேங்கைமரத்தின் பூக்களைச் சூடக்கருதிய மகளிர் புலி புலியென்று கூப்பிடும்ஒலியையும், கருவுற்ற பெண்யானைக்கு அது வேண்டிய உணவுகளைக் கொடுத்து ஆண்யானை பாதுகாத்துவிட்டுப் போகும்போது புலி ஒளித்திருந்து பாய்ந்து அதனை வருத்த அதுகண்ட பெண்யானை தன்னுடைய சுற்றத்தோடே வருந்திக் கூப்பிடும் இடிபோன்ற குரலையும், எடுத்தற்கு அரிய வெடிப்பில் தன் கையினின்றும் வீழ்ந்து இறந்த தன் குட்டியின்பொருட்டுச் சுற்றங்களோடுகூடிக் கத்தும் மந்தியின் ஆரவாரத்தையும், உயர்ந்த மலையிலே கண்ணேணி வழியாகச் சென்று தேனடையை அழித்துத் தேன் கொள்வோர் செய்யும் ஆரவாரத்தையும், சிற்றரண்களை அழித்த வேடர் மகிழ்வுற்றுச் செய்யும் ஆரவாரத்தையும், வேடர் சிறுபறை முழங்கத் தம் மனைவியரோடு ஆடும் குரவைக்கூத்தின் ஒலியையும், கல்லின்மேல் வரும் ஆறுகள் வெடிப்புக்களில் வீழ்ந்து தேர்கள் வந்தாற்போல இடைவிடாமல் ஒலிக்கும் ஆரவாரத்தையும், சுழியில் அகப்பட்ட யானைகளைக் கோபந்தணிவித்துத் தறியிற் கட்டுதற்குச் செய்யும் பாகருடைய ஓசையையும், தினைப்புனத்தில் கிளியை ஓட்டுகின்ற மகளிருடைய ஆரவாரத்தையும், காளையும் மரையானேறும் பின்னிடாமல் வலியுடனே புண்ணுண்டாம்படி ஒன்றோடொன்று முட்டிப் பொரும் ஆரவாரத்தையும், எருமைக்கடாக்கள் தம்மிற் பொரும் ஆரவாரத்தையும், எல்லாரும் உண்டபின்பு மிஞ்சிக்கிடக்கும் பலாப்பழத்தின் சுளையிலிருந்து விதையைக் கொள்ளுதற்கு யானைக் கன்றுகளைப் பிணைத்துக் காந்தள் மடலாலே அடித்து அவற்றைக் கடாவிடும் பிள்ளைகளின் ஆரவாரத்தையும், ஆலைகளிற் கரும்பினின்று சாறுகொள்ளும் ஒலியையும், தினையைக் குற்றும் மகளிர் பாடும் உலக்கைப்

பாட்டின் ஒலியையும், சேம்பையும் மஞ்சளையும் பன்றிகள் தோண்டிவிடாதபடி காப்பவர்கள் கொட்டும் பன்றிப்பறையின் ஓசையையும், இந்த ஓசைகளால் மலையினிடத்தில் எழும் எதிரொலியையும் கேட்பீர். நன்னனுடைய மலை திருநாளை ஒத்து உங்களுக்குச் சிறந்துதோன்றும். அங்கே காணுதற்கு இனியவற்றைக் கண்குளிரக் கண்டும் கேட்பதற்கு இனியவற்றைச் செவிகுளிரக் கேட்டும் உண்பதற்கு இனிய உணவுகளைப் பாராட்டியுண்டும் இந்நுகர்ச்சி இன்னும் உண்டாவதாகவென்று பழைய உறவினரைப்போன்ற முறைமையினை உடையீராய்ச் சிலநாள் தங்கிச் செல்லுமின். சென்று பக்கமலையிலே விறலியர் குறிஞ்சிப் பண்ணைப்பாட அங்கேயுள்ள தெய்வங்களைக் கையால்தொழுது, 'எம்குறைமுடித்தால் உமக்கு இவைதருவேம்' என்று துதித்து வேண்டிக்கொண்டு அப்பாற் போவீராக. பெரிய மலையிடத்தில் மிகவும் சமீபமான இடத்திலுள்ள கரிய மேகக்கூட்டம் திவலைகளைத் தூவுகையினாலே திசையறியாமல் மயங்கும் சுற்றத்தோடே சுமந்து சென்றவாத்தியங்கள் நனையாதபடி கிணறுகள்போன்ற குகையிலே புகுந்துகொள்ளுக. பின்பு முறிந்துநிற்கும் மலைகளை அடையாமல் மலையிலுள்ளனவாகிய குழிகளாலுண்டாகுந் துன்பங்களை மாற்றிக்கொள்ளுதற்குக் காமரத்தை ஊன்றுகோலாகக்கொண்டு செல்லுவீராக. செல்லுகையிற் பாறையில் வெய்யில் வேளையிற் செல்லாமல் அந்திப்பொழுதிற் போவீராக. அவ்வழிகளில் நன்னனுடைய சேனைத்தலைவரோடே யானைக்கூட்டங்களையுடையனவும் போர்செய்யவந்த அரசர்களுடைய நிலைமையைக் கெடுப்பனவுமாகிய அரண்கள் பலவுள்ளன. அந்த அரண்களில் பின்னிவைத்தாற்போலக் கொடிகள் பிணங்கியிருக்கும் சிறுகாட்டையுடைய வழிகடோறும் உங்களுள்ளே முன்னேபோகிறவர் தம் முகத்தில் அடியாதபடி வாங்கிவிட்ட கோல்கள் யாழின் பத்தரையும் முழவின்கண்ணையும் கெடுத்துவிடாமற் காத்துக்கொண்டு பின்னே போகிறவர் தவறாமல் அவர் கையைப் பிடித்துக்கொண்டு மெல்லமெல்லச் செல்லுக. சென்றால், நெருங்கியிருக்கும் கற்களினிடத்தே காடுகள் பல உள்ளன. தாம் புறங்கொடுத்து ஓடியவிடத்துப் பகைவர் சிரித்து ஒலிக்க, அது பொறாமல் நாம் உயிர்விடுதற்கு இது நல்லசமயமென்று மீண்டுவந்து பொருது தம்முடைய உயிரைவிட்ட மறவருடைய பெயர்களை எழுதி நட்ட

கற்கள் முதுகிட்டுப் போனவரை இகழும் கவர்த்தவழிகள் மிகப் பலவாயிருக்கும்; அந்நடுகல்லிலுள்ள தெய்வத்திற்கு விருப்ப முண்டாகும்படி யாழை வாசித்துவிட்டு விரைந்துபோவீராக. உங்களுள் வழியறியாமற்போய் மீண்டுவந்த புதியவர்கள், பின் வருகிறவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி பலவழிகளுங் கூடின சந்தியைக் கையாலே துடைத்து அடையாளமாக ஊகம் புல்லை முடிந்துவைத்திடுக. நீங்கள் போகும் இடத்தில் மராமரத்தின் நிழலிலே இவ்வாறு பொருதுபட்ட இன்னுரென்று உலகம் அறிவதற்கு வீரர்பெயர்களை எழுதி நடப்பட்டனவாகிய கற்கள் தெய்வத்தன்மைமிகுந்து பிறகாடுகளை இகழும் கவர்த்த வழிகளில், நன்னனுடைய பகைவரிருக்கும் அருகிலங்கள் பலவுள்ளன; அவை தத்தம் ஊர்களிலிருந்து மனிதர் நினைத்தாலும் நடுங்குதற்குக்காரணமானவை. 'நன்னனை நினைந்து செல்லுகின்றேம்' என்று அங்கேயுள்ளவர்களிடம் கூறுவீராயின் அவர்களுடைய ஊர்கள் உங்களுக்கு நன்னனுடைய பழைய ஊர்களை ஒக்கும்; ஆதலால், அங்கே இளைத்த இடத்தே இளைப்பாறி அஞ்சாமற்போவீராக காடுகளில் முறையேபோய், வேறிடத்திற்சென்று மேய்ந்துவந்த பசுக்களின் இனியபாலை இடையர் கொண்டுவந்து சொரிகையினாலே அவர்களுக்கு விருந்தினராவீர். பண்டங்களை விற்றுவாங்கின பல வகை நெல்லின் அரிசியையொத்து நிறம் வேறுபட்ட பலவகை ஆடுகளின் திரள்களிலே இராக்காலத்திற் செல்லுவீராயின், அங்கே யுள்ளார் சமைத்துவைத்திருந்த பாற்சோற்றையும் பாலையும் பெறுவீர். அவற்றை உண்டு ஆட்டுத்தோலிலே கொடிய விலங்குகள் வாராமல் இடையர்வைத்துள்ள நெருப்பைத் துணையாகக்கொண்டு தங்கி அப்பாற் செல்லுவீராக. செல்லும்பொழுது நாடுகாக்கும் வேடர்களைக்காண்பீர்; காண்பீராயின் அவர்களுக்கு, 'நன்னன்பாற் செல்லுகின்றேம்' என்று கூறுமின்; கூறின், அவர்கள் தசைகளையும் கிழங்குகளையும் கொடுத்து உங்களை வற்புறுத்தித் தின்னப்பண்ணிப் பாதுகாப்பார்களேயன்றி வருத்தமாட்டார்கள். அவற்றையுண்டு அவ்விடத்தில் அவர்கள் போகச்சொன்னவழியையே வழியாகக் கைக்கொண்டுபோமின்; அக்காடு அத்தன்மையது. அப்பண்பைக் கண்டு மகிழ்ந்து மராமரத்தினது பூங்கொத்தும் யாமரத்தின் பூவும் ஆகிய இவற்றைத் தளிர்களோடே சேர்த்து மரல் நாராற்

கட்டின கண்ணியைச்சூடி மழைபெய்யப்பெற்றுக் குளிர்ந்திருக்கும் வழியிலுள்ள நீரைக்குடித்துக் குளித்து அதனை வழிக்கும் முகந்துகொண்டுபோமின். போனால், புல்வேய்ந்த குடிசைகடோறுமுள்ள குடிகளிடத்தே புளியங்கூழைப் பகலில் வழிவந்தவருத்தந் திரும்படி இராத்திரி உணவாகப் பெறுவீர்; பெற்று இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள் தங்குவீராயின் தினைமாவோடு சோற்றுருண்டையை உள்ளீடாக நெய்விழுதைக்கொண்டு உண்ணும்படி அவர்கள் கொடுக்க நாடோறும் பெறுவீர்; அவற்றைப்பெற்று உண்டு, பனி நீங்கும்படி விறகுகளை எரித்துக் குளிர்காய்ந்து நன்றாகத் தூங்கிவிட்டு விடியற்காலத்தில் நிமித்தம் பார்த்துக்கொண்டு போவீராக. போனால், காஞ்சிமரத்தினையும் நீர்வந்துபொருகின்ற அறுகம்புல் பரந்த இடங்களையும் விளைநிலங்களையும் சோலைகளையும் இடைச்சேரிகளையுமுடைய நன்னனது தண்பணைநாடு, நீங்கள் பலநாள் தங்கினாலும் ஒருநாள் நின்றாலும் யாழின் பண்ணை மாறிவாசித்தாற்போன்ற நுகர்தற்கு நன்றாகிய பலபொருள்களை ஊர்கடோறும் உடையது. அந்நாட்டையடைந்தால் காலையில் உழவர் நெல்லை முகந்துதராநிற்பர். கள்விற்கும் வலையருடைய மகளிர் வாளைமீனின் தசையை வரான்மீனின் தசையோடே கலந்துகொடுத்து நெல் முளையாலாக்கின கள்ளின் தெளிவையும் கொடுப்பக் களங்கடோறும் அவற்றைப் பெறுகுவீர். அவற்றைப் பெற்ற பின்பு, இவை நன்னனுக்கும் உணவாதற்கு அமையுமென்று கண்டோர் மயங்கும்படி அங்கங்கேயுள்ளவர்களிட்ட இறைச்சிகளோடு கலந்து ஆக்கின சோற்றைச் சுற்றங்களோடு உண்டு மருதப்பண்ணை வாசித்து இளைப்பாறிவிட்டுப் போமின். போய், நெல்லறுப்பார் கொட்டும் தண்ணுமைக்கு அஞ்சிய எருமைக்கடா நும்மேல் வாராதபடி பாதுகாத்துக்கொண்டு சேயாற்றின் கரைவழியே செல்லுமின். சென்றால், சோலைகளையும் மதிலையும் திருநாளென்று கூறும்படி சனங்கள் அடர்ந்து இடம்பெறாத கடைவீதியையும் பல கவர்த்த தன்மையையுடைய குறுந்தெருக்களையும் பழங்குடிகளையுடையனவாய் மிகவுயர்ந்த மாடங்களை இருபுறத்திலும் பெற்று ஆறுபோலத் தோன்றும் பெருந்தெருக்களையுமுடையதாய்ப் பொருட்டிரள் நிலைபெற்ற அவனுடைய பழைய ஊர் மிகவும் தூரியதன்று. அவ்வூரிற்சென்று பகைவரை வெல்

லும் வீரர்கள் வேலைச் சார்த்திவைத்திருக்கும் பல தெற்றுவாசல்களையுடைய கோபுரவாயிலில் ஐயமின்றிப் புகுவீராக. புகுந்து சென்றால், அம்பலங்களில் அயலூரிலிருந்துவந்து தங்குவோராகிய கூத்தர் முதலியோர் உங்களைக் கண்டு, "இவர்கள் நன்னனைப் பார்த்தற்கு வருபவர்கள்" என்று கருதி, தனியே இருந்த தங்கள் வருத்தம் போம்படி உங்களை விருந்தினராக எண்ணி எதிர்கொள்ளுவார்கள். நீங்கள் அவர்களோடு அளவளாவியிருந்துவிட்டுப் பின், ஆமான்கன்றும் கரடிக்குட்டியும் எண்கால் வருடைக்கிடாயும் கீரிப்பிள்ளையும் மரையான் குழவியும் ஆண் உடும்பும் மயிலும் காட்டுக்கோழிச் சேவலும் பலாப்பழமும் மாம்பழமும் நறைக்கொடியும் நூற்றைக்கிழங்கும் கற்பூரமும் மாணிக்கமும் யானைக்கொம்புகளும் காந்தட்பூவும் புன்னைப்பூவும் மஞ்சாடிப்பூவும் சந்தனமும் மிளகின் காய்க்குலையும் மூங்கிற்குழாயிலே முற்றின கள்ளின் தெளிவும் மூங்கிற்குழாயிலே தோய்த்த எருமைத்தயிரும் தேனடையும் ஈரப்பலாவின் பழமும் ஆகிய இவைகள், வருபவர்களால் நன்னனுக்குக் கையுறையாக வைக்கப்பெற்றிருத்தலின், காவிரிநதி கடலொடு கலக்கும் புகாரைப்போன்ற அரண்மனை வாயிலை அடைந்து, பின் அரண்மனை முற்றத்தை அணுகி, விறலியர் முதலிற் கடவுளை வாழ்த்தின பின்பு, நீங்கள் பாடவேண்டிய புதிய பாட்டினைப் பாடி முடித்துவிட்டு நன்னனை நோக்கி, "உலகமுள்ளளவளவும் கீர்த்தி நிற்கும்படி கொடுப்பதாகிய கடப்பாட்டை முடித்த தலைமையையுடையோனே" என்று சொல்லி, பின்பு வெற்றியாலுண்டாகும் பல வகைப் புகழ்களையும் ஐம்பொறிகளையும் தன்வயமாக்கிய அவன் வெற்றியையும் புகழ்ந்து, உங்களுடைய மனத்திலுள்ள மற்றப் புகழ்களையும் பாடுமின். அவற்றை முற்றக் கேட்டற்கும் உடன்பாடில்லாதவனாகி அவன் உங்களை நோக்கி, "என்மீதுள்ள விருப்பத்தால் நீவிர் இங்கு வந்ததே அமையும்; வழிவந்த வருத்தம் நுமக்கு மிகுதியாகவுள்ளது" என முகமன்கூறி, பின் சான்றோர் பலருடன் சமயமிருக்கும் மண்டபத்தே தான் இருந்து, "உயர்ந்த அரசவுரிமையையும் நல்ல அமைச்சர் முதலியோரையும் பரந்த நாட்டினையும் நுண்ணிய அறிவினையுமுடையராயிருந்தும், இரந்தோர்க்கு, 'யாம் வறுமையை யுடையேம்' என்று கூறி மறித்த கையினையுடையராய்த் தம் பெய

ரைத் தம்மொடு கொண்டு முற்றக்கெட்ட அரசர் சேயாற்றுமண லினும்பலர்; அதனுல், நம்முடைய வாழ்நாள் புகழோடே கழி வதாக'' என்று கருதிக் கொடுத்தற்றொழிலிலே விரிந்த உள்ளத் தோடே பரிசில் பெறுதற்கு விரும்பிச்சென்ற உம்மைக்காட்டி லும் தான் மிகமகிழ்ந்து இனிமையாக உங்களைப்பார்த்து நூலின் போக்குவரவுதெரியாத நுண்ணிய உடைகளை உங்களுடைய இடை யிலே உடுக்கச்செய்து அவ்விடத்தே நீங்கள் பலநாள் தங்குவீ ராயினும் இனியதசைகளையும் வெண்ணெல் அரிசிகளையும் முட் டில்லாமல் முதனுள்போன்ற விருப்பத்தோடே தரப் பெறுகுவீர்; பெற்று அவ்விடத்தில், 'எம்முடைய ஊர்க்குப் போகக்கருது கின்றேம்' என்று அவன் பொறுக்கும்படி மெல்லெனச்சொல்லி விடைகேட்பீராயின், அவன் நிதியத்தோடே தேர்கள் யானைகள் பசுத்திரள்கள் குதிரைகள் ஆகிய இவற்றையெல்லாம், உங்களிலே தலைவனுன கூத்தன் பொற்றுமரையைச்சூட, விறலியர் பேரணி கலங்களைப்பூண, பரிசிலாகக்கொடுத்துப் போகச்சொல்லுவன். ஆதலால், விரைந்துசென்று அவன்பாற் பரிசில்பெற்று வாழ்வீ ராக.

உ

கணபதி துணை.

பத்துப்பாட்டு.

முதலாவது

திருமுருகாற்றுப்படை.

[க.—திருப்பரங்குன்றம்.]

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்

தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க
இருபே ருருவி னொருபே ரியாக்கை

அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரிய னதாஅன்று

[உ.— திருச்சீரலைவாய்.]

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே

MAHAMAHOPADHYAYA.
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுகம்
ஆர்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட்டன்றே யொருமுகம்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே
ஆங்கம், மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்
ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபி னையர்க் கேந்திய
தொருகை யுக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக்குறங்கின்மிசையசைஇயதொருகை
அங்குசங் கடாவ வொருகை யிருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்கப், பன்னிரு கையும் பாற்பட வியற்றி
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே யதாஅன்று

[௩.—திருவாவினன்குடி.]

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானின்
உரிவை தைஇய வூன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதும்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசி றூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
எருத்த மேறிய திருக்கிளர் செல்வனும்

நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி யசைதலு முரிய னதாஅன்

[௪.—திருவேரகம்.]

றிருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரிய னதாஅன்று

[௫.—குன்றுதோறாடல்.]

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு

வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை யணைத்த கூந்தல்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்கு றிளைப்ப வுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் றொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையி னியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே யதாஅன்று

[ரு.—பழமுதிர்சோலை.]

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்

சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பியை துரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியொ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்
ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே
ஆண்டாண் டாயினு மாக காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி

வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
அந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தி யானாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா வளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
அன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய வுலகத்
தொருநீ யாகித் தோன்ற விழுமிய

பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம ழலரிறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
இளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

குமரவேளை மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார்
பாடிய திருமுருகாற்றுப்படை
முற்றிற்று.

வெண்பாக்கள்.

1. * குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையா யழகியா யேறார்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை.

2. குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

3. வீரவே லுரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவே லுண்டே துணை.

4. இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

5. உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

6. அஞ்சு முகந்தோன்றி லாறு முகந்தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேறோன்றும் - நெஞ்சில்
ஒருகா னினைக்கி னிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

7. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான்.

---

* பத்துப்பாட்டும் சேர்ந்துள்ள பழைய ஏட்டுப்பிரதிகளில் இல்லாமல் திருமுருகாற்றுப்படைமட்டுமுள்ள புதிய ஏட்டுப்பிரதிகளிலும் அச்சுப்பிரதிகளிலும் இந்த வெண்பாக்கள் பத்தும் இருந்தமையால் இங்கே பதிப்பிக்கப்பட்டன.

8. காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமா மறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்கா ணிரங்கா யினி.

9. பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

10. நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.

இரண்டாவது

பொருநராற்றுப்படை.

அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந
குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
எய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
அளைவா ழலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி
எண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
அண்ணா வில்லா வமைவரு வறுவாய்ப்
பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோண் முன்கை யாய்தொடி கடுக்கும்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவின்
ஆய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பிற்
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்
மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
ஆறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை
வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்
சிருடை நன்மொழி நீரொடு சிதறி
அறல்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்
இலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன

பூங்குழை யூசற் பொறைசால் காதின்
நாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தின்
ஆடமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகிர்
அணங்கென வுருத்த சுணங்கணி யாகத்
தீர்க்கிடை போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூழ்
உண்டென வுணரா வுயவு நடுவின்
வண்டிருப் பன்ன பல்கா ழல்குல்
இரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
அரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலிற்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்
நன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறும்
களிறு வழங்கதர்க் கானத் தல்கி
இலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாள்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
அரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந
அறியா மையி னெறிதிரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந
ஆடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டி னீடின்
றெழுமதி வாழி யேழின் கிழவ
பழுமர முள்ளிய பறவையின் யானுமவன்

இழுமென் சும்மை யிடனுடை வரைப்பின்
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்கென் னிடும்பை தீர
எய்த்த மெய்யே னெய்யே னாகிப்
பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்
ஒன்றியான் பெட்டா வளவையி னொன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமோ
டுருகு பவைபோ லென்புகுளிர் கொளீஇ
ஈரும் பேனு மிருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை நல்கி
மழையென மருளு மகிழ்செய் மாடத்
திழையணி வனப்பி னின்னகை மகளிர்
போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை மற்றவன்
திருக்கிளர் கோயி லொருசிறைத் தங்கித்
தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ
ததன்பய மெய்திய வளவை மான
ஆறுசெல் வருத்த மகல நீக்கி
அனந்தர் நடுக்க மல்ல தியாவதும்
மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து
மாலை யன்னதோர் புன்மையுங் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்
கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப
வல்லஞர் பொத்திய மனமகிழ் சிறப்பக்

கல்லா விளைஞர் சொல்லிக் காட்டக்
கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்
அதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராஅரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
ஊழி னூழின் வாய்வெய் தொற்றி
அவையவை முனிகுவ மெனினே சுவைய
வேறுபல் லுருவின் விரகுதந் திரீஇ
மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ்
ஒண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி யொருநாள்
அவிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பரல்வறைக் கருனை காடியின் மிதப்ப
அயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
எல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி
உயிர்ப்பிடம் பெறாஅ தூண்முனிந் தொருநாள்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
அகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானும்
என்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென் வென்வேல்
உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
தாய்வயிற் றிருந்து தாய மெய்தி
எய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்

பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
னாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
ஆளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
தாணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்
றீற்றா விருப்பிற் போற்றுபு நோக்கிநும்
கையது கேளா வளவை யொய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவி பருகி
எரியகைந் தன்ன வேடி றாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஊட்டுளை துயல்வர வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா விருக்கை

நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழம்
தரவிடைத் தங்கலோ விலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்
செலவுகடைக் கூட்டுதி ராயிற் பலபுலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்ல னொல்லெனத்
திரைபிறழிய விரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த வகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினெற்
றூழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினாற்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
மனைநொச்சி நிழலாங்கண்
ஈற்றியாமைதன் பார்ப்போம்பவும்
இளையோர் வண்ட லயரவு முதியோர்
அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்
முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி
அறைக்கரும்பி னரிநெல்லின்
இனக்களம ரிசைபெருக
வறளடும்பி னிவர்பகன்றைத்
தளிர்ப்புன்கின் றாழ்காவின்
நனைஞாழலொடு மரங்குழீஇய
அவண்முனையி னகன்றுமாறி
அவிழ்தளவி னகன்றோன்றி
நகுமுல்லை யுகுதேறுவீப்
பொற்கொன்றை மணிக்காயா
நற்புறவி னடைமுனையிற்
சுறவழங்கு மிரும்பௌவத்
திறவருந்திய வினநாரை

பூம்புன்னைச் சினைச்சேப்பின்
ஓங்குதிரை யொலிவெரீஇத்
தீம்பெண்ணை மடற்சேப்பவும்
கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்து
யாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயரத்
தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவுமறுகவும்
தீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவும்
குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்
நறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி தினைக்கவர
வரைமந்தி கழிமூழ்கக்
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பினா னடுகுழீஇ
மண்மருங்கினான் மறுவின்றி
ஒருகுடையா னொன்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி வென்வேற் குருசில்
மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மாண்
எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெரி நைப்பவும்
அருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னாகிய பண்பில் காலையும்
நறையு நரந்தமு மகிலு மாரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி

நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே.

சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார்
பாடிய பொருநராற்றுப்படை முற்றிற்று.

வெண்பா.

1. ஏரியு மேற்றத்தி னானும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம் - தேரின்
அரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு.

2. அரிமா சுமந்த வமளிமே லானைத்
திருமா வளவனெனத் தேறேன் - திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன் றொழுதகைப்
போனவா பெய்த வளை.

3. முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால் - செய்ச்செய்
அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

மூன்றாவது

சிறுபாணாற்றுப்படை.

மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கறல்
அயிலுருப் பனைய வாகி யைதுநடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாள்
காலை ஞாயிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ
ஐதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅய்
உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சே றிகுதரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்

மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல
கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழல்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணுற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே யதாஅன்று
நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
உளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
தென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே யதாஅன்று
நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
ஆசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
ஏம வின்றுணை தழீஇயிற குளர்ந்து
காமரு தும்பி காமரஞ் செப்பும்
தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னார்
ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை யுறந்தையும் வறிதே யதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த
அழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

அமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்
அரவக்கடற் றானை யதிகனுங் கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் றாங்கிய வுரனுடை நோன்றாள்
நறுவீ நாகமு மகிலு மாரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுன றரூஉம் போக்கரு மரபின்
தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக வின்னாள்
திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்த னோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்

வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுட்
டறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருதும் நீயிரும்
இவணயந் திருந்த விரும்பே ரொக்கற்
செம்ம லுள்ளமொடு செல்குவி ராயின்
அலைநீர்த் தாழை யன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரின்
ஓங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதியேக் கறாஉ மாசறு திருமுகத்து
நுதிவே னோக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
தளையவிழ் தெரியற் றகையோற் பாடி
அறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்
பைந்நனை யவரை பவழங் கோப்பவும்
கருநனைக் காயாக் கணமயி லவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொல்லை நெடுவழிக் கோப மூரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்

சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்
உறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொ
டாமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்
மதிசே ரரவின் மானத் தோன்றும்
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
அந்தண ரருகா வருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கினவ னாமூ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தின்
உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்கா ழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்
எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்
நிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள்
அண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று சிறிதுநணி யதுவே
பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவி னந்தணர்க் காயினும்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன

அடையா வாயிலவ னருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையும்
இன்முக முடைமையு மினிய னாதலும்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலுங் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையு மோடிய துணர்தலும்
அரியே ருண்க ணரிவைய ரேத்த
அறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
இன்னகை யாயமொ டிருந்தோற் குறுகிப்
பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன
அங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்
தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகோ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி யானாது
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினை யெனவும்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவும்
நீசில மொழியா வளவை மாசில்
காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்

பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பிற் றானின் றூட்டித்
திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளிர்
அகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

ஓய்மானாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படை முற்றிற்று.

வெண்பா.

1. அணியிழையார்க் காரணங் காகிமற் றந்நோய்
தணிமருந்துந் தாமேயா மென்ப - மணிமிடைபூண்
இம்மென் முழவி னெயிற்பட் டினநாடன்
செம்மல் சிலைபொருத தோள்.

2. நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் பாம்பேர் மருங்குல்—இடுகொடி
ஓடிய மார்ப னுயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்.

நான்காவது

பெரும்பாணாற்றுப்படை.

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்ததன்
உள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
உருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதரும்
தண்கடல் வரைப்பிற் றூங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்
பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்
டியாமவ ணின்றும் வருது நீயிரும்
இருநிலங் கடந்த திருமறு மார்பின்

முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பல்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையற் படர்குவி ராயின்
கேளவ னிலையே கெடுகநின் னவலம்
அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்
உருமு முரறா தரவுந் தப்பா
காட்டு மாவு முறுகண் செய்யா வேட்டாங்
கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ விரவல சிறக்கநின் னுள்ளம்
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமர வுருளி
எழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன
ஆரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்
வேழங் காவலர் குரம்பை யேய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முளையெயிற் றிரும்பிடி முழந்தா ளேய்க்கும்
துளையரைச் சீறுர றாங்கத் தூக்கி
நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்
மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்பக்
கோட்டினர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்

பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி
எல்லிடைக் கழியுநர்க் கேம மாக
மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉம்
அரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்றாள்
அடிபுதை யரண மெய்திப் படம்புக்குப்
பொருகணை தொலைச்சிய புண்டேர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட்
கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
உடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவின்
நீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்
ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
ஈன்பிண வொழியப் போகி நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்பு லடக்கிய வெண்ப லெயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழன் முன்றி னிலவுரற் பெய்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி

வார்ரா தட்ட வாடூன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமகன்
ஓடாத் தானை யொண்டொழிற் கழற்காற்
செவ்வரை நாடன் சென்னிய மெனினே
தெய்வ மடையிற் றேக்கிலைக் குவைஇ நும்
பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்
மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
அகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கும்
அரைநாள் வேட்ட மழுங்கிற் பகனாட்
பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையும்
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணும்
அருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருந்துபட
ஒன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனகர்
ஊகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவி லெயினக் குறும்பிற் சேப்பின்
களர்வள ரீந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்
யானை தாக்கினு மரவுமேற் செலினும்

நீணிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
சென்னா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
இல்லடு கள்ளின் றோப்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி வலன்வளையூஉப்
பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை
முரண்டலை கழிந்த பின்றை மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்
அதளோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்
நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகி ழன்ன கூம்புமுகை
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்
அளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறாஉம்
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுப்பார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி

விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
உறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
அந்நு ணவிர்புகை கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
தெழுகா டோங்கிய தொழுவுடை வரைப்பிற்
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்க்
குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டிற்
பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றிப்
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர் ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்

கறையணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோல்
மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன
கவைத்தா ளலவ னளற்றளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்
காரேறு பொருத கண்ணகன் செறுவின்
உழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவிற்
களைஞர் தந்த கணைக்கா னெய்தற்
கட்கமழ் புதுப்பூ முனையின் முட்சினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கான் மாமலர் கொய்துகொண் டவண
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி
ஈருடை யிருந்தலை யாரச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்
இரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்
புதுவை வேய்ந்த கவிகுடின் முன்றில்
அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
தூம்புடைத் திரடா ளுமித்த வினைஞர்
பாம்புறை மருதி னோங்குசினை நீழற்
பலிபெறு வியன்கள மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடும்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வானூல் வலந்த மருங்கின்
குழுமுநிலைப் போரின் முழுமுத றொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப
வையுந் துரும்பு நீக்கிப் பைதறக்

குட்காற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்
தண்பணை தழீஇய தளரா விருக்கைப்
பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்குல்
ஏணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லிற்
றச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றே ருருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்
தமளித் துஞ்சு மழகுடை நல்லிற்
றொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவிர்
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்
தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்
கெந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை
விசய மடூஉம் புகைசூ ழாலைதொறும்
கரும்பின் றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்
வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்
இளையரு முதியருங் கிளையுடன் றுவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழு
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின்

அவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
எல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி நடுங்க நாண்கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉம்
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைதலோம்பி
உறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை
அகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுநரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமையத்துப் பிணையினிர் கழிமின்
செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பின்
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
திருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த

தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவனர்
ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பைபயத் தோன்றும்
நீர்ப்பெயற் றெல்லைப் போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்
சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின்
நெல்லுழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்கும்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பின்
ஈர்ஞ்சே றாடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நென்மா வல்சி தீற்றிப் பன்னாள்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்

கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையும்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்
குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பின்
தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழிற் றாழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்
திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
தீம்பஃ றார முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர் பகற்பெயல்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய்
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி யிளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோல்
நிழறாழ் வார்மண னீர்முகத் துறைப்பப்

புன்ல்கால் கழீஇய பொழிறொறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர்நுதல்
நறவுபெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயின்
அருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநும்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்
காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம்
கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்தின்
திண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் வழங்குநர்த் தடுத்த
அடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பின்
இழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக்கட லுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூர்
அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வாய்
அந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப

ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஆராச் செருவி னைவர் போல
அடங்காத் தானையோ டன்றுமேல் வந்த
ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்
கச்சி யோனே கைவண் டோன்றல்
நச்சிச் சென்றோர்க் கேம மாகிய
அளியுந் தெறலு மெளிய வாகலின்
மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோரும்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோரும்
கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்னர்
இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகு மிரியன் மாக்கள்
ஒருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்கும்
கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்
திறையுறை புறவின் செங்காற் சேவல்
இன்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
இடைத்தெரிந் துணரு மிருடீர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்

புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக
மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும வாழிய நெடிதென
இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யந்நிலை
நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
ஆவி யன்ன வவிர்நூற் கலிங்கம்
இரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
அரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்கல்
அருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசில்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்
தானா விருப்பிற் றானின் றூட்டி
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கும்
ஆடுவண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
உரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயற் றுளியின் மின்னுநிமிர்ந் தாங்குப்

புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
அரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழித்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசி லின்சீர்க்
கின்னர முரலு மணங்குடைச் சாரல்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பிற்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்
மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே.

தொண்டைமானிளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்
கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படை
முற்றிற்று.

வெண்பா.

கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்-வெஞ்சினவேற்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.

ஐந்தாவது

முல்லைப்பாட்டு.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுய ரலமர னோக்கி யாய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாய ரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டன மதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
உவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற

MAHAMAHOPADHYA
Dr. U. V. SWAMINATHAIYAR LI
TIRUVANMIYUR, MADRAS-

தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவி லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித் துப்போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில்
திருமணி விளக்கங் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய வீரறைப் பள்ளியுள்
உடம்பி னுரைக்கு முரையா நாவின்

படம்புகு மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்தும்
ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
அரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
இன்றுயில் வதியுநற் காணா துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
இடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
இன்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்

முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார்
நப்பூதனார் பாடிய முல்லைப்பாட்டு முற்றிற்று

வெண்பா.

1. வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி வாணெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ - தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுகுத்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

2. புனையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துனைபடைத் துன்னார் - முனையுள்
அடன்முகந்த தானை யவர்வாரா முன்னம்
கடன்முகந்து வந்தன்று கார்.

ஆறாவது

மதுரைக்காஞ்சி.

ஓங்குதிரை வியன்பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பாகத்
தேன்றூங்கு முயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியனாண்மீ னெறியொழுகப்
பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறும்
இரவுச்செய்யும் வெண்டிங்களும்
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த
ஓங்குநிலை வயக்களிறு
கண்டுதண்டாக் கட்கின்பத்
துண்டுதண்டா மிகுவளத்தான்
உயர்பூரிம விழுத்தெருவிற்
பொய்யறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாந்தரொடு
நல்லூழி யடிப்படரப்
பல்வெள்ள மீக்கூற
உலக மாண்ட வுயர்ந்தோர் மருக
பிணக்கோட்ட களிற்றுக்குழும்பின்
நிணம்வாய்ப்பெய்த பேய்மகளிர்
இணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூப மெழுந்தாட
அஞ்சுவந்த போர்க்களத்தான்
ஆண்டலை யணங்கடுப்பின்

வயவேந்த ரொண்குருதி
சினத்தீயிற் பெயர்புபொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பிற்
றொடித்தோட்கை துடுப்பாக
ஆடுற்ற வூன்சோறு
நெறியறிந்த கடிவாலுவன்
அடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர
அமர்கடக்கும் வியன்றானைத்
தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந
விழுச்சூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத்
தளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளு முயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களனுழக்கவும்
மாவெடுத்த மலிகுரூஉத் துகள்
அகல்வானத்து வெயில்கரப்பவும்
வாம்பரிய கடுந்திண்டேர்
காற்றென்னக் கடிதுகொட்பவும்
வாண்மிகு மறமைந்தர்
தோண்முறையான் வீறுமுற்றவும்
இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருதவரைச் செருவென்றும்
இலங்கருவிய வரைநீந்திச்
சுரம்போழ்ந்த விகலாற்றல்
உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்
நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பி னெடியோ னும்பல்
மரந்தின்னூஉ வரையுதிர்க்கும்
நரையுருமி னேறனையை
அருங்குழுமிளைக் குண்டுகிடங்கின்

உயர்ந்தோங்கிய நிரைப்புதவின்
நெடுமதி னிரைஞாயில்
அம்புமி ழயிலருப்பம்
தண்டாது தலைச்சென்று
கொண்டுநீங்கிய விழுச்சிறப்பின்
தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்தொழுகிய
கொற்றவர்தங் கோனாகுவை
வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை யிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லின்
ஊர்கொண்ட வுயர்கொற்றவ
நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கு மகலாம்பியிற்
கயனகைய வயனிறைக்கும்
மென்றொடை வன்கிழாஅர்
அதரி கொள்பவர் பகடுபூண் டெண்மணி
இரும்பு ளோப்பு மிசையே யென்றும்
மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற்
பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப
ஒருசார், விழவுநின்ற வியலாங்கண்
முழவுத்தோண் முரட்பொருநர்க்

குருகெழு பெருஞ்சிறப்பின்
இருபெயர்ப் பேராயமொ
டிலங்குமருப்பிற் களிறுகொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியும்
நலஞ்சான்ற கலஞ்சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே
கல்காயுங் கடுவேனிலொ
டிருவானம் பெயலொளிப்பினும்
வரும்வைகன் மீன்பிறழினும்
வெள்ளமா றாது விளையுள் பெருக
நெல்லி னோதை யரிநர் கம்பலை
புள்ளிமிழ்ந் தொலிக்கு மிசையே யென்றும்
சலம்புகன்று சுறவுக்கலித்த
புலவுநீர் வியன்பௌவத்து
நிலவுக்கானன் முழவுத்தாழைக்
குளிர்ப்பொதும்பர் நளித்தூவல்
நிரைதிமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை
இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொ
டொலியோவாக் கலியாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
வியன்மேவல் விழுச்செல்வத்
திருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு
தொன்றுமொழிந்து தொழில்கேட்பக்
காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட வெரிபரப்பி
ஆலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
அடுதிறலுயர் புகழ்வேந்தே
நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க்குவை
பேருலகத்து மேஎந்தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்

விளைந்துமுதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப்பொருந
செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்
றஞ்சுவரத் தட்கு மணங்குடைத் துப்பிற்
கோழூஉன் குறைக் கொழுவல்சிப்
புலவுவிற் பொலிகூவை
ஒன்றுமொழி யொலியிருப்பிற்
றென்பரதவர் போரேறே
அரியவெல்லா மெளிதினிற்கொண்
டுரிய வெல்லா மோம்பாது வீசி
நனிபுகன் றுறைது மென்னா தேற்றெழுந்து
பனிவார் சிமையக் கானம் போகி
அகநாடு புக்கவ ரருப்பம் வௌவி
யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குருசில்
உறுசெறுநர் புலம்புக்கவர்
கடிகாவி னிலைதொலைச்சி
இழிபறியாப் பெருந்தண்பணை
குரூஉக்கொடிய வெரிமேய
நாடெனும்பேர் காடாக
ஆசேந்தவழி மாசேப்ப
ஊரிருந்தவழி பாழாக
இலங்குவளை மடமங்கையர்
துணங்கையஞ்சீர்த் தழூஉமறப்ப
அவையிருந்த பெரும்பொதியிற்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட
அணங்குவழங்கு மகலாங்கண்
நிலத்தாற்றுங் குழூஉப்புதவின்
அரந்தைப் பெண்டி ரினைந்தன ரகவக்
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்

குடுமிக் கூகை குராலொடு முரலக்
கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக்
களிறுமாய் செருந்தியொடு கண்பமன் றார்தர
நல்லேர் நடந்த நசைசால் விளைவயற்
பன்மயிர்ப் பிணவொடு கேழ லுகள
வாழா மையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎம்
எழாஅத்தோ ளிமிழ்முழக்கின்
மாஅத்தா ளுயர்மருப்பிற்
கடுஞ்சினத்த களிறுபரப்பி
விரிகடல் வியன்றானையொடு
முருகுறழப் பகைத்தலைச்சென்
றகல்விசும்பி னார்ப்பிமிழப்
பெயலுறழக் கணைசிதறிப்
பலபுரவி நீறுகைப்ப
வளைநரல வயிரார்ப்பப்
பீடழியக் கடந்தட்டவர்
நாடழிய வெயில்வௌவிச்
சுற்றமொடு தூவறுத்தலிற்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழின் மண்டில முற்றி
அரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்
குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற்
றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்
உயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொ
டுயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி

ஈத லுள்ளமொ டிசைவேட் குவையே
அன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
கொன்னொன்று கிளக்குவ லடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை
தவாப்பெருக்கத் தறாயாணர்
அழித்தானாக் கொழுந்திற்றி
இழித்தானாப் பலசொன்றி
உண்டானாக் கூர்நறவிற்
றின்றானா வினவைகல்
நிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப்
பயனற வறியா வளங்கெழு திருநகர்
நரம்பின் முரலு நயம்வரு முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாண ருவப்பக் களிறுபல தரீஇக்
கலந்தோ ருவப்ப வெயிற்பல கடைஇ
மறங்கலங்கத் தலைச்சென்று
வாளுழந்ததன் றாள்வாழ்த்தி
நாளீண்டிய நல்லகவர்க்குத்
தேரொடு மாசிதறிச்
சூடுற்ற சுடர்ப்பூவின்
பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்ற மாகக்
கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு
பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்
பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப்
படுகண் முரசங் காலை யியம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணைகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்
கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே
அதனால், குணகடல் கொண்டு குடகடன் முற்றி
இரவு மெல்லையும் விளிவிட னறியா

தவனு மிசையு நீர்த்திரள் பீண்டிக்
கவலையங் குழும்பி னருவி யொலிப்பக்
கழைவளர் சாரற் களிற்றின நடுங்க
வரைமுத லிரங்கு மேறொடு வான்ஞெமிர்ந்து
சிதரற் பெரும்பெயல் சிறத்தலிற் றாங்காது
குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுந்தி
நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க்கழனி
ஒளிறிலஞ்சி யடைநிவந்த
முட்டாள சுடர்த்தாமரை
கட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழவிழ்நீலம்
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கைக்
கம்புட் சேவ லின்றுயி லிரிய
வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழி லாட்டுக்
கரும்பி னெந்திரங் கட்பி னோதை
அள்ளற் றங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே
ஒலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞ ரரிபறை யின்குரற்
றளிமழை பொழியுந் தண்பரங் குன்றிற்
கலிகொள் சும்மை யொலிகொ ளாயம்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னாடு மிசையே யனைத்தும்
அகலிரு வானத் திமிழ்ந்தினி திசைப்பக்
குருகுநரல மனைமரத்தான்
மீன்சீவும் பாண்சேரியொடு
மருதஞ் சான்ற தண்பணை சுற்றி யொருசார்ச்
சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகி னிருங்குரல் புலர
ஆழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர
எழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப்

பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி
மடக்கட் பிணையொடு மறுகுவன வுகளச்
சுடர்ப்பூங் கொன்றை தாஅய நீழற்
பாஅ யன்ன பாறை யணிந்து
நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து
சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்
மணிமரு ணெய்த லுறழக் காமர்
துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர
வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப
முல்லை சான்ற புறவணிந் தொருசார்
நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை நெடுங்கா லையவி
ஐவன வெண்ணெலொ டரில்கொள்பு நீடி
இஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டித்
தினைவிளை சாரற் கிளிகடி பூசல்
மணிப்பூ வவரைக் குரூஉத்தளிர் மேயும்
ஆமா கடியுங் கானவர் பூசல்
சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழ லட்ட பூசல்
கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூச லிருங்கேழ்
ஏறடு வயப்புலிப் பூசலொ டனைத்தும்
இலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்
தருங்கடி மாமலை தழீஇ யொருசார்
இருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப
நிழத்த யானை மேய்புலம் படரக்
கலித்த வியவ ரியந்தொட் டன்ன
கண்விடு புடையூஉத் தட்டை கவினழிந்
தருவி யான்ற வணியின் மாமலை
வைகண் டன்ன புன்முளி யங்காட்டுக்
கமஞ்சூழ் கோடை விடரக முகந்து
காலுறு கடலி னொலிக்குஞ் சும்மை

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY, TIRUVANMIYUR, MADRAS-41.

இலைவேய் குரம்பை யுழையதட் பள்ளி
உவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப
நிழலுரு விழந்த வேனிற் குன்றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்
முழங்குகட றந்த விளங்குகதிர் முத்தம்
அரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
வைக றோறும் வழிவழிச் சிறப்ப
நெய்தல் சான்ற வளம்பல பயின்றாங்
கைம்பாற் றிணையுங் கவினி யமைவர
முழவிமிழ் மகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகிற்
றுணங்கையுந் தழூஉவின் மணங்கமழ் சேரி
இன்களி யாணர்க் குழூஉப்பல பயின்றாங்குப்
பாடல் சான்ற நன்னாட்டு நடுவண்
கலைதாய வுயர்சிமையத்து
மயிலகவு மலிபொங்கர்
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவின்
இயங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழி றழீஇய வடைகரை தோறும்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையி னொழுகும் விரிநீர் நல்வரல்
அவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி
அழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும்
நிலனும் வளனுங் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் மான விறல்வேள்

அழும்பி லன்ன நாடிழந் தனரும்
கொழும்பல் பதிய குடியிழந் தனரும்
தொன்றுகறுத் துறையுந் துப்புத்தர வந்த
அண்ணல் யானை யடுபோர் வேந்தர்
இன்னிசை முரச மிடைப்புலத் தொழியப்
பன்மா ரேஎட்டிப் பெயர்புறம் பெற்று
மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையி னிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்
வகைபெற வெழுந்து வான மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப
மாகா லெடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை யறைவனர் நுவலக்
கயங்குடைந் தன்ன வியந்தொட் டிமிழிசை
மகிழ்ந்தோ ராடுங் கலிகொள் சும்மை
ஓவுக்கண் டன்ன விருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்கப்
பணைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்குபிணி நோன்கயி றரீஇ யிதைபுடையூக்
கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல

இருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்துக்
கந்துநீத் துழிதருங் கடாஅ யானையும்
அங்கண்மால் விசும்பு புதைய வளிபோழ்ந்
தொண்கதிர் ஞாயிற் றூறளவாத் திரிதரும்
செங்கா லன்னத்துச் சேவ லன்ன
குரூஉமயிர்ப் புரவி யுராலிற் பரிகிமிர்ந்து
காலெனக் கடுக்குங் கவின்பெறு தேரும்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின்
அடிபடு மண்டிலத் தாதி போகிய
கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்
வேழத் தன்ன வெருவரு செலவிற்
கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமும்
அரியவும் பெரியவும் வருவன பெயர்தலிற்
றீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர்
பூந்தலை முழவி னோன்றலை கடுப்பப்
பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்
தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்
நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றினர்
இருதலை வந்த பகைமுனை கடுப்ப
இன்னுயி ரஞ்சி யின்னா வெய்துயிர்த்
தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்
மலைபுரை மாடத்துக் கொழுநிழ லிருத்தர
இருங்கடல் வான்கோடு புரைய வாருற்றுப்
பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்கண்
ஐஇய கலுழு மாமையர் வையெயிற்று
வார்ந்த வாயர் வணங்கிறைப் பணைத்தோட்

சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத்
தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை
மையுக் கன்ன மொய்யிருங் கூந்தல்
மயிலிய லோரு மடமொழி யோரும்
கைஇ மெல்லிதி னொதுங்கிக் கையெறிந்து
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்பப்
புடையமை பொலிந்த வகையமை செப்பிற்
காம ருருவிற் றும்வேண்டு பண்ணியம்
கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக
மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி
ஆடுதுவன்று விழவி னாடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாளங் காடி நனந்தலைக் கம்பலை
வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்க ரன்ன சிவந்துநுணங் குருவிற்
கண்பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்
பொன்புனை வாளொடு பொலியக் கட்டித்
திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக்
கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி
மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியல்
மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை
அணிகிளர் மார்பி னரமொ டளைஇக்
காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்
காலோர் காப்பக் காலெனக் கழியும்
வான வண்கை வளங்கெழு செல்வர்
நாண்மகி ழிருக்கை காண்மார் பூணொடு
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்
றுவற விளங்கிய வாய்பொ னவிரிழை
அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ
ஒண்குழை திகழு மொளிகெழு திருமுகம்
திண்கா ழேற்ற வியலிரு விலோதம்

தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப
நிரைநிலை மாடத் தரமியந் தோறும்
மழைமாய் மதியிற் றோன்றுபு மறைய
நீரு நிலனுந் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமார்
அந்தி விழவிற் றூரியங் கறங்கத்
திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியும்
சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
உயர்நிலை யுலக மிவணின் றெய்தும்
அறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையும்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும்
வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉ மமயமும்
இன்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணரும்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்

செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற
அச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ றவையமும்
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
அன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களும்
அறநெறி பிழையா தாற்றி னொழுகிக்
குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்
பல்வேறு பண்டமொ டூண்மலிந்து கவினி
மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்
மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவும்
கோடுபோழ் கடைநருந் திருமணி குயினரும்
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மருங் கலிங்கம் பகர்நரும்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையு மாயு மாக்களும்
எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறருங் கூடித்
தெண்டிரை யவிரறல் கடுப்ப வொண்பல்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS

குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியருங் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினுங் காலுற நிற்றரக்
கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்
தண்கட னாட னொண்பூங் கோதை
பெருநா ளிருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்பப் பலவுடன்
சேறு நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வே றுருவிற் காயும் பழனும்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடகும்
அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேரூன் சோறும்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்
இன்சோறு தருநர் பல்வயி னுகர
வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்
தொல்லெ னிமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோதம்
இருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்
துருகெழு பானாள் வருவன பெயர்தலின்
பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே
அல்லங் காடி யழிதரு கம்பலை
ஒண்சுட ருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்பகற் கொண்டு
குடமுதற் குன்றஞ் சேரக் குணமுதல்
நாண்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற விரவுவர நயந்தோர்
காத லின்றுணை புணர்மார் ஆயிதழ்த்
தண்ணறுங் கழுநீர் துணைப்ப விழைபுனையூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்பப்

பெண்மகிழ் வுற்ற பிணைநோக்கு மகளிர்
நெடுஞ்சுடர் விளக்கங் கொளீஇ நெடுநகர்
எல்லை யெல்லா நோயொடு புகுந்து
கல்லென் மாலை நீங்க நாணுக்கொள
ஏழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ்
தாழ்பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து
வீழ்துணை தழீஇ வியல்விசும்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்
டாய்கோ லவிர்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிகுநல மெய்திப்
பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர்
திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்துக்
கொண்டன் மலர்ப்புதன் மானப்பூ வேய்ந்து
நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி
மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரு நணியரு நலனயந்து வந்த
இளம்பல் செல்வர் வளந்தப வாங்கி
நுண்டா துண்டு வறும்பூத் துறக்கும்
மென்சிறை வண்டின மானப் புணர்ந்தோர்
நெஞ்சே மாப்ப வின்றுயி றுறந்து
பழந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய
மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லில்
ஆய்பொன் னவிர்தொடிப் பாசிழை மகளிர்
ஒண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி
நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நாப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனித்துறைக் குவவுமணன் முனைஇ மென்றளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி
மணங்கமழ் மனைதொறும் பொய்தல யரக்

கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாள்
கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாரூ துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்
கடுங்களி ரோட்டலிற் காணுந ரிட்ட
நெடுங்கரைக் காழக நிலம்பர லுருப்பக்
கடுங்கட் டேறன் மகிழ்சிறந்து திரிதரக்
கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து
பணைத்தேந் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீ ரயரத்
திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுடன்
ஒண்சுடர் விளக்க முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல வியலிக்
கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார்
அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறும்
உரையும் பாட்டு மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை நன்னன் பெறும்பெயர் நன்னாள்
சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு
முந்தை யாமஞ் சென்ற பின்றைப்
பணிலங் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து
நொடைநவி னெடுங்கடை யடைத்து மடமதர்
ஒள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை

அயிருருப் புற்ற வாடமை விசயம்
கவவொடு பிடித்த வகையமை மோதகம்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க
விழவி னுடும் வயிரியர் மடியப்
பாடான் றவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்பப்
பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற்
கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப
இரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்கும்
கண்மா றாடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
ஊர்காப் பாள ரூக்கருங் கணையினர்
தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைந் துற்ற வரைநா ளமயமும்
அசைவில ரெழுந்து நயம்வந்து வழங்கலின்
கடவுள் வழங்குங் கையறு கங்குலும்
அச்ச மறியா தேம மாகிய
மற்றை யாமம் பகலுறக் கழிப்பிப்
போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் டும்பி போது முரன்றாங்
கோத லந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்

பணைநிலைப் புரவி புல்லுணாத் தெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல வில்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடிய லெய்த விரும்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
ஒண்பொ னவிரிழை தெழிப்ப வியலித்
திண்சுவர் நல்லிற் கதவங் கரைய
உண்டுமகிழ் தட்ட மழலை நாவிற்
பழஞ்செருக் காளர் தழங்குகுர றோன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல
வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப
இமிழ்முர சிரங்க வேறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யானையங் குருகின் சேவலொடு காமர்
அன்னங் கரைய வணிமயி லகவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்
கூட்டுறை வயமாப் புலியொடு குழும
வான நீங்கிய நீனிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலந்தனர் பரிந்த
பரூஉக்கா ழாரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன
அம்மென் குரும்பைக் காய்படு பிறவும்
தருமணன் முற்றத் தரிஞிமி றார்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சீப்ப
இரவுத்தலைப் பெயரு மேம வைகறை
மைபடு பெருந்தோண் மழவ ரோட்டி
இடைப்புலத் தொழிந்த வேந்துகோட் டியானை
பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோ லாக வாள்செல நூறிக்
காய்சின முன்பிற் கடுங்கட் கூளியர்
ஊர்சுடு விளக்கிற் றந்த வாயமும்
நாடுடை நல்லெயி லணங்குடைத் தோட்டி
நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி

நாடா வந்த விழுக்கல மனைத்தும்
கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்
களந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரைச்
சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ
ஒண்பூம் பிண்டி யவிழ்ந்த காவிற்
சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்
றிலங்குகதி ரிளவெயிற் றோன்றி யன்ன
தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்து
மயிலோ ரன்ன சாயன் மாவின்
தளிரே ரன்ன மேனித் தளிர்ப்புறத்
தீர்க்கி னரும்பிய திதலையர் கூரெயிற்
றொண்குழை புணரிய வண்டாழ் காதிற்
கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாதுபடு பெரும்போது புரையும் வாண்முகத்
தாய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயி லெடுப்ப வினிதி னெழுந்து
திண்கா ழார நீவிக் கதிர்விடும்
ஒண்கா ழாரங் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப
எருத்தந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற்
பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்
வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்
சோறமை வுற்ற நீருடைக் கலிங்கம்
உடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன வுருவினை யாகி
வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்
தொன்னா ரோட்டிய செருப்புகன் மறவர்
வாள்வலம் புணர்ந்தநின் றாள்வலம் வாழ்த்த
வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழ்த்தோண் மறவர்த் தம்மின்

கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கின்
நல்லெயி லுழந்த செல்வர்த் தம்மின்
கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரச மோவில கறங்க
எரிநிமிர்ந் தன்ன தானை நாப்பண்
பெருநல் யானை போர்க்களத் தொழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யா ரென்னாது முறைகருதுபு சூட்டிக்
காழ்மண் டெஃகமொடு கணையலைக் கலங்கிப்
பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து
வானத் தன்ன வளநகர் பொற்ப
நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பின்
உயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின்
நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியற்
பெருஞ்செய் யாடவர்த் தம்மின் பிறரும்
யாவரும் வருக வேனோருந் தம்மென
வரையா வாயிற் செறாஅ திருந்து
பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென
இருங்கிளை புரக்கு மிரவலர்க் கெல்லாம்
கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசிக்
களந்தோறுங் கள்ளரிப்ப
மரந்தோறு மைவீழ்ப்ப
நிணவூன்சுட் டுருக்கமைய
நெய்கனிந்து வறையார்ப்பக்
குருஉக்குய்ப்புகை மழைமங்குலிற்
பரந்துதோன்று வியனகராற்
பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோ

பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி
அரியதந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீ னடுவட் டிங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் றலைவ னாகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூ ணைவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர்
அவரும் பிறருந் துவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்
நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார்பாடிய
மதுரைக்காஞ்சி முற்றிற்று.

வெண்பா.

1. பைங்க ணிளம்பகட்டின் மேலானைப் பான்மதிபோல்
திங்க ணெடுங்குடையின் கீழானை - அங்கிரந்து
நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டுங் கூடற் றமிழ்.

2. சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால் - மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்.

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIXAR LIBRARY TIRUVANMIYUR, MADRAS-41

ஏழாவது

நெடுநல்வாடை.

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பிற் றுவலை கற்ப
அங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லன் மூதூர்
ஆறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்

படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறன் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்
திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர
வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த வேந்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்
தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்
திரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா
திரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்
திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்

பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார
ஆடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர்நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்
தொருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்
தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயிற்
றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலிழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
ஒலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்

யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையக னிறையநெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் குறுகா வருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லில்
தசநான் கெய்திய பணைமரு ணோன்றாள்
இகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதற்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்
டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந்
தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படக்
துணைபுண ரன்னத் தூநிறத் தூவி
இணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை

ஆரந் தாங்கிய வலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்குல்
அம்மா சூர்ந்த வவிர்நூற் கலிங்கமொடு
புனையா வோவியங் கடுப்பப் புனைவில்
தளிரேர் மேனித் தாய சுணங்கின்
அம்பணைத் தடைஇய மென்றோண் முகிழ்முலை
வம்புவிசித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியன் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி
இன்னே வருகுவ ரின்றுணை யோரென
உகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால்
ஊறா வறுமுலை கொளீஇய காறிருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பி னாடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவன ணோக்கி நெடிதுயிரா
மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சில்தெறியாப்
புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வரும்படர் தீர விறறந்
தின்னே முடிகதில் லம்ம மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்

களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய நெடுநல்வாடை முற்றிற்று

வெண்பா.

வாடை நலிய வடிக்கண்ணா டோணசைஇ
ஓடை மழகளிற்றா னுள்ளான்கொல் - கோடல்
முகையோ டலமர முற்றெரிபோற் பொங்கிப்
பகையோடு பாசறையு ளான்.

எட்டாவது

குறிஞ்சிப்பாட்டு

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுதல்
ஒலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய்
அகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவும்
உட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி யையர்க்கு மந்நிலை
எளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
இருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறாலிற் பழியு முண்டோ
ஆற்றின் வாரா ராயினு மாற்ற
ஏனையுல கத்து மியைவதா னமக்கென
மானமர் நோக்கங் கலங்கிக் கையற்
றானாச் சிறுமைய ளிவளுந் தேம்பும்
இகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
இருபே ரச்சமோ டியானு மாற்றலென்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர லுடைமையும்

வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணா
தெமியேந் துணிந்த வேமஞ்சா லருவினை
நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
எற்பட வருதிய ரெனநீ விடுத்தலிற்
கலிகெழு மரமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவும்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி
உரவுக்கதிர் தெறூஉ முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
இன்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎய்
ஒன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
அண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீர்
அவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
உள்ளகஞ் சிவந்த கண்ணேம் வள்ளிதழ்
ஒண்செங் காந்த ளாம்ப லனிச்சம்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
உரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிளம்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

எரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடசம்
எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகம்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்தல்
தாழை தளவ முட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்கம்
ஈங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை
அடும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரம்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவ நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
ஆரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவும்
அரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்
புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்

4751. ጠ. (ஒ)

கிள்ளை யோப்பியுங் கிளையிதழ் பறியாப்
பைவிரி யல்குற் கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
எரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக
எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
ஈரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
அணிமிகு வரிமிஞி றார்ப்பத் தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பித்திகத் தாயித ழலரி
அந்தொடை யொருகாழ் வளைஇச் செந்தீ
ஒண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
அந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி யம்புதெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
இயலணிப் பொலிந்த வீகை வான்கழல்
துயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வே லிளைஞரின்
உரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளும்
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியாம்
இடும்பைகூர் மனத்தே மருண்டுபுலம் படர
மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்

தாகாண் விடையி னணிபெற வந்தெம்
அலமர லாயிடை வெரூஉத லஞ்சி
மெல்லிய வினிய மேவரக் கிளந்தெம்
ஐம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி
அசைமென் சாய லவ்வாங் குந்தி
மடமதர் மழைக்க ணிளையீ ரிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதலி னல்லாந்து கலங்கிக்
கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீரென
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பி னிம்மென விமிரும்
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவி ழலரித் தாசினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குர லவித்தெம்
சொல்லற் பாணி நின்றன னாக
இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையேர் நோக்கின் மனையோள் மடுப்பத்
தேம்பிழி தேறன் மாந்தி மகிழ்சிறந்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்
திரும்புன கிழத்தலிற் சிறுமை நோனா
தரவுற ழஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா லுடற்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
உய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோல்
உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை

அண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவேள்
அணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திணிநிலைக் கடம்பின் றிரளரை வளைஇய
துணையறை மாலையிற் கைபிணி விடேஎம்
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
அடுங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
அஞ்சி லோதி யசையல் யாவதும்
அஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கன னந்நிலை
நாணு முட்கு நண்ணுவழி யடைதர
ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
ஆக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி
அரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிறல்
உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிணை மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு

U. V. SWAMINATHAIYAR LIBRA
TIRUVANMIYUR, MADRAS-41.

விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
அந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி
வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
எல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
ஏங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவலர்
ஆம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற
ஆம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி யந்தண ரயரக் கானவர்
விண்டோய் பணவை மிசைஞெகிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானம்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணூஉ
நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாள்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
ஈர நன்மொழி தீரக் கூறித்
துணைபுண ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயில்
உண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்றும்
இரவரன் மாலைய னேவரு தோறும்
காவலர் கடுகினுங் கதநாய் குரைப்பினும்

நீதுயி லெழினு நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும்
பெறுஅன் பெயரினு முனிய லுறுஅன்
இளமையி னிகந்தன்று மிலனே வளமையிற்
றன்னிலை தீர்ந்தன்று மிலனே கொன்னூர்
மாய வரவி னியல்புநினைஇத் தேற்றி
நீரெறி மலரிற் சாஅ யிதழ்சோரா
ஈரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண்
ஆகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்குல்
அளைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்
துருமுஞ் சூரு மிரைதே ரரவமும்
ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமும்
நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலை விடரக முடையவா லெனவே.

ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர்
பாடிய குறிஞ்சிப்பாட்டு முற்றிற்று.

வெண்பா.

1. நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடையள்
என்குற்றம் யானு முணர்கலேன் - பொன்குற்
றருவி கொழிக்கு மணிமலை நாடன்
தெரியுங்காற் றீய திலன்.

2. ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே - தேற்ற
மறையோர் மணமெட்டி னைந்தா மணத்திற்
குறையாக் குறிஞ்சிக் குணம்.

ஒன்பதாவது

பட்டினப்பாலை.

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கண்
காய்ச்செந்நெற் கதிரருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியும்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்சள்
இனமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
அகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கின்
நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி

நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியி னணைமுதற் பிணிக்கும்
கழிசூழ்படப்பைக் கலியாணர்ப்
பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீன்
உருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
இருகாமத் திணையேரிப்
புலிப்பொறிப் போர்க்கதவிற்
றிருத்துஞ்சுந் திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
அறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டுந்
தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவின்
அவிர்சடை முனிவ ரங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை முனைஇக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்
தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்
முதுமரத்த முரண்களரி
வரிமண லகன்றிட்டை
இருங்கிளை யினனொக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்

வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியும்
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரும்
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ
திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்பண்
நிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினால்
மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானல்
மாமலை யணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கும்
மலியோதத் தொலிகூடற்
றீதுநீங்கக் கடலாடியும்

மாசுபோகப் புனல்படிந்தும்
அலவ னாட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத்
துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்தும்
மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும்
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்
மகளிர் கோதை மைந்தர் மலையவும்
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும்
பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்தும்
கண்ணடைஇய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டும்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவின்
நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகறூஉ மசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்

புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
ஏழகத் தகரோ டுகளு முன்றிற்
குறுந்தொடை நெடும்படிக்காற்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழைப் பகட்டல்குற்
றூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மானோக்கிற்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
ஓங்குவரை மருங்கி னுண்டா துறைக்கும்
காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறா வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கிற்
காழூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துறைபோகிய

தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்
வெளிலிளக்குங் களிறுபோலத்
தீம்புகார்த் திரைமுன்றுறைத்
தூங்குநாவாய் துவன்றிருக்கை   கப்பல்.
மிசைக்கூம்பி னசைக்கொடியும்
மீன்றடிந்து விடக்கறுத்
தூன்பொரிக்கு மொலிமுன்றில்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவின்
நறவுநொடைக் கொடியோடு
பிறபிறவு நனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பின்
நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்   பிறநாட்டுப்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்   பொருள்கள்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்
நீர்நாப் பண்ணு நிலத்தின் மேலும்
ஏமாப்ப வினிது துஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது   வணிகர்இயல்பு
வலைஞர்முன்றின் மீன்பிறழவும்
விலைஞர்குரம்பை மாவீண்டவுங்
கொலைகடிந்துங் களவுநீக்கியும்
அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
நல்லானொடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்

கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப்
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்
கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றாள்
உகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரசம்
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி

வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவும்
கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவும்
அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
அழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவும்
அழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவும்
கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவும்
கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண் டானாப் பெருஞ்சோற் றட்டில்
ஒண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
உணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவும்
அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்கத்

தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் றிறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாள்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேண் மருங்குசாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்
தொருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயில்
மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவும்
முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூண்
அரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர்
உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலை முற்றிற்று.

வெண்பா.

முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால் - செய்ச்செய்
அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

4751.
III. 1(உ)

பத்தாவது

மலைபடுகடாம்.

திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்
இளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவருந் தீங்குழ றுதைஇ
நடுவுநின் றிசைக்கு மரிக்குரற் றட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வா யெல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்
கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பிற்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்துநிறுத் தன்ன விட்டருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவர்
இடுக்கண் செய்யா தியங்குந ரியக்கும்
அடுக்கன் மீமிசை யருப்பம் பேணா
திடிச்சுர நிவப்பி னியவுக்கொண் டொழுகித்
தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவின்
கடிப்பகை யனைத்துங் கேள்வி போகாக்
குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்
அரலை தீர வுரீஇ வரகின்
குரல்வார்ந் தன்ன நுண்டுளை யிரீஇச்
சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி
இலங்குதுளை செறிய வாணி முடுக்கிப்
புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகம ழைம்பால்

மடந்தை மாண்ட நுடங்கெழி லாகத்
தடங்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப
அகடுசேர்பு பொருந்தி யளவினிற் றிரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி
நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்
அமைவரப் பண்ணி யருநெறி திரியா
திசைபெறு திருவின் வேத்தவை யேற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணரொ
டுயர்ந்தோங்கு பெருமலை யூறின் றேறலின்
மதந்தபு ஞமலி நாவி னன்ன
துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ
விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்
திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்றக்
கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற்
புனல்கால் கழீஇய மணல்வார் புறவிற்
புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக்
கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ
தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங்
கியாமவ ணின்றும் வருது நீயிரும்
கனிபொழி கானங் கிளையொ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளின மானப்
புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்
வனைபுனை யெழின்முலை வாங்கமைத் திரடோள்
மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பின்
இசைநுவல் வித்தி னசையே ருழவர்க்குப்
புதுநிறை வந்த புனலஞ் சாயல்
மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி
வின்னவி றடக்கை மேவரும் பெரும்பூண்
நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொ
டுள்ளினிர் சேறி ராயிற் பொழுதெதிர்ந்த

புள்ளினிர் மன்ற வெற்றுக் குறுதலின்
ஆற்றி னளவு மசையுநற் புலமும்
வீற்றுவளஞ் சுரக்குமவ னாடுபடு வல்சியும்
மலையுஞ் சோலையு மாபுகல் கானமும்
தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியும்
இகழுநர்ப் பிணிக்கு மாற்றலும் புகழுநர்க்
கரசுமுழுது கொடுப்பினு மமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ னாண்மகி ழிருக்கையும்
நல்லோர் குழீஇய நாநவி லவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமும்
நீரகம் பனிக்கு மஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிர மேஎ யுறையும்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும்
பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரு
ஞாயி றன்னவவன் வசையில் சிறப்பும்
இகந்தன வாயினுந் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக்
கொடைக்கட னிறுத்தவவன் றொல்லோர் வரவும்
இரைதேர்ந் திவருங் கொடுந்தாண் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்றோ யிஞ்சி
உரைசெல வெறுத்தவவன் மூதூர் மாலையும்
கேளினி வேளைநீ முன்னிய திசையே
மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற்
புதுவது வந்தன் றிதுவதன் பண்பே
வானமின்னு வசிவு பொழிய வானா
திட்ட வெல்லாம் பெட்டாங்கு விளையப்
பெயலொடு வைகிய வியன்க ணிருப்புனத்
தகலிரு விசும்பி னாஅல் போல

வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை
நீலத் தன்ன விதைப்புன மருங்கின்
மகுளி பாயாது மலிதுளி தழாலின்
அகளத் தன்ன நிறைசுனைப் புறவிற்
கௌவை போகிய கருங்காய் பிடியேழ்
நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்
பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
கொய்பத முற்றன குலவுக்குர லேனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன வவரை
மேதி யன்ன கல்பிறங் கியவின்
வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி
இரும்புகவர் வுற்றன பெரும்புன வரகே
பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு
வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல்
வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்னக்
காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக்
குறையறை வாரா நிவப்பி னறையுற்
றாலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே
புயற்புனிறு போகிய பூமலி புறவின்
அவற்பதங் கொண்டன வம்பொதித் தோரை
தொய்யாது வித்திய துளர்படு துடவை
ஐயவி யமன்ற வெண்காற் செறுவின்
மையென விரிந்தன நீணறு நெய்தல்
செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்
காயங் கொண்டன விஞ்சி மாவிருந்து
வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை
காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென
ஊழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத்
துறுகல் சுற்றிய சோலை வாழை
இறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக்
கூழுற் றலமரு முந்தூ ழகலறைக்
கால மன்றியு மரம்பயன் கொடுத்தலிற்
காலி னுதிர்ந்தன கருங்கனி நாவல்

மாறுகொள வொழுகின வூறுநீ ருயவை
நூறொடு குழீஇயின கூவை சேறுசிறந்
துண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிந்
தரலை யுக்கன நெடுந்தா ளாசினி
விரலூன்று படுக ணுகுளி கடுப்பக்
குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக்
கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச்
சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி
முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே
தீயி னன்ன வொண்செங் காந்தட்
டுவேற் கலித்த புதுமுகை யூன்செத்
தறியா தெடுத்த புன்புறச் சேவல்
ஊஉ னன்மையி னுண்ணா துகுத்தென
நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்
வெறிக்களங் கடுக்கும் வியலறை தோறும்
மணவில் கமழு மாமலைச் சாரற்
றேனினர் கிழங்கின ரூனர் வட்டியர்
சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கிப்
பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்
தூவொடு மலிந்த காய கானவர்
செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே
இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்
அன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கிக்
கன்றெரி யொள்ளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி
அலங்குகழை நரலு மாரிப் படுகர்ச்
சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்றாள்
மான விறல்வேள் வயிரிய மெனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட்புலம் பகல வினிய கூறிப்
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவிர்
எறித் தருஉ மிலங்குமலைத் தாரமொடு

வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்
குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக் குற்றநும் மனந்த ரீர
அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனின்
இன்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து
வழையமை சாரல் கமழத் துழைஇ
நறுமல ரணிந்த நாறிரு முச்சிக்
குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி
அகமலி யுவகை யார்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பிற் குருசின் முன்னிய
பரிசின் மறப்ப நீடலு முரியிர்
அனைய தன்றவன் மலைமிசை நாடே
நிரையிதழ்க் குவளைக் கடிவீ தொடினும்
வரையர மகளி ரிருக்கை காணினும்
உயிர்செல வெம்பிப் பனித்தலு முரியிர்
பலநா ணில்லாது நிலநாடு படர்மின்
விளைபுன நிழத்தலிற் கேழ லஞ்சிப்
புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி
உடைய வாறே நள்ளிரு ளலரி
விரிந்த விடியல் வைகினிர் கழிமின்
நளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்
முரம்புகண் ணுடைந்த பரலவற் போழ்விற்
கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே
குறிக்கொண்டு மரங் கொட்டி நோக்கிச்
செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறிதுநெறி யொரீஇ வலஞ்செயாக் கழிமின்
புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவர்
உயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ
அகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப்

பகனிலை தளர்க்குங் கவணுமிழ் கடுங்கல்
இருவெதி ரீர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிர லூகம் பார்ப்போ டிரிய
உயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரமறையாக் கழிமின்
உரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி
இரவி னன்ன விருடேங்கு வரைப்பின்
குமிழி சுழலுங் குண்டுகய முடுக்கர்
அகழிழிந் தன்ன கான்யாற்று நடவை
வழூஉமருங் குடைய வழாஅ லோம்பிப்
பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித்
துருவி னன்ன புன்றலை மகாரோ
டொருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்
அழுந்துபட் டலமரும் புழகமல் சாரல்
விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா
வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி
அடிநிலை தளர்க்கு மருப்பமு முடைய
முழுநெறி யணங்கிய நுண்கோல் வேரலோ
டெருவை மென்கோல் கொண்டனிர் கழிமின்
உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய
மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்
தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சி
ஓரியாற் றியவின் மூத்த புரிசைப்
பராவரு மரபிற் கடவுட் காணிற்
றொழாநிர் கழியி னல்லது வறிது
நும்மியந் தொடுத லோம்புமின் மயங்குதுளி
மாரி தலையுமவன் மல்லல் வெற்பே
அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினும்
கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினும்
நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த
சூர்புக லடுக்கத்துப் பிரசங் காணினும்
ஞெரேரென நோக்க லோம்புமி னுரித்தன்று

நிரைசெலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர்
வரைசேர் வகுந்திற் கானத்துப் படினே
கழுதிற் சேணோ னேவொடு போகி
இழுதி னன்ன வானிணஞ் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பின்
நெறிக்கெடக் கிடந்த விரும்பிண ரெருத்தின்
இருடுணிந் தன்ன வேனங் காணின்
முளிகழை யிழைந்த காடுபடு தீயின்
நளிபுகை கமழா திறாயினிர் மிசைந்து
துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்
குவளையம் பைஞ்சுனை யசைவிடப் பருகி
மிகுத்துப்பதங் கொண்ட பரூஉக்கட் பொதியினிர்
புட்கை போகிய புன்றலை மகாரோ
டற்கிடைக் கழித லோம்பி யாற்றுநும்
இல்புக் கன்ன கல்லளை வதிமின்
அல்சேர்ந் தல்கி யசைத லோம்பி
வான்கண் விரிந்த விடியலேற் றெழுந்து
கானப் பட்ட செந்நெறிக் கொண்மின்
கயங்கண் டன்ன வகன்பை யங்கண்
மைந்துமலி சினத்த களிறுமத னழிக்கும்
துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி
இகந்துசேட் கமழும் பூவு முண்டோர்
மறந்தமை கல்லாப் பழனு மூழிறந்து
பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னார்
இருங்கால் வீயும் பெருமரக் குழாமும்
இடனும் வலனு நினையினிர் நோக்கிக்
குறியறிந் தவையவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளின்
நாடுகா ணனந்தலை மென்மெல வகன்மின்
மாநிழற் பட்ட மரம்பயி லிறும்பின்
ஞாயிறு தெரூஅ மாக நனந்தலைத்
தேஎ மருளு மமைய மாயினும்
இறுஅவன் சிலையர் மாதேர்பு கொட்கும்
குறவரு மருளுங் குன்றத்துப் படினே

அகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென
இயங்க லோம்புநும் மியங்க டொடுமின்
பாடி னருவிப் பயங்கெழு மீமிசைக்
காடுகாத் துறையுங் கானவ ருளரே
நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள்
புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
உண்டற் கினிய பழனுங் கண்டோர்
மலைதற் கினிய பூவுங் காட்டி
ஊறு நிரம்பிய வாறவர் முந்துற
நும்மி னெஞ்சத் தவலம் வீட
இம்மென் கடும்போ டினியி ராகுவிர்
அறிஞர் கூறிய மாதிரங் கைக்கொள்பு
குறியவு நெடியவு மூழிழிபு புதுவோர்
நோக்கினும் பனிக்கு நோய்கூ ரடுக்கத்
தலர்தாய வரிநிழ லசையினி ரிருப்பிற்
பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ
கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந் தூறலின்
மலைமுழுதுங் கமழு மாதிரந் தோறும்
அருவி நுகரும் வானர மகளிர்
வருவிசை தவிராது வாங்குபு குடைதொறும்
தெரியிமிழ் கொண்டநும் மியம்போ லின்னிசை
இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல்
விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்
சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளின்
எய்தெற விழுக்கிய கானவ ரழுகை
கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்
தலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை
மலைமா ரிடூஉ மேமப் பூசல்
கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்குவரம் பாகிய கணவ னோம்பலின்
ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு
நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்குகுரல்

கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
அருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பி னெடுவரை
நிலைபெய் திட்ட மால்புநெறி யாகப்
பெரும்பயன் றொகுத்த தேங்கொள் கொள்ளை
அருங்குறும் பெறிந்த கானவ ருவகை
திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென
நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயருங் குரவை
நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன
கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை
நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்
துரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை
ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறும்
கிளிகடி மகளிர் விளிபடு பூசல்
இனத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறு மைந்தி னூறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொரூஉங் கல்லென் கம்பலை
காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி
வண்கோட் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுபடு மிச்சிற் காழ்பயன் கொண்மார்
கன்றுகடாஅ வுறுக்கு மகாஅ ரோதை
மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரெனக்
கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமும்
தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையும்
சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகச் சிலம்பும்
என்றிவ் வனைத்து மியைந்தொருங் கீண்டி

அவலவு மிசையவுந் துவன்றிப் பலவுடன்
அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்பக்
குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர்
முழவுத்துயி லறியா வியலு ளாங்கண்
விழவி னற்றவன் வியன்கண் வெற்பே
கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்
உண்டற் கினிய பலபா ராட்டியும்
இன்னும் வருவ தாக நமக்கெனத்
தொன்முறை மரபினி ராகிப் பன்மாண்
செருமிக்குப் புகலுந் திருவார் மார்பன்
உருமுரறு கருவிய பெருமலை பிற்பட
இறும்பூது கஞலிய வின்குரல் விறலியர்
நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்
மைபடு மாமலைப் பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி
தூஉ யன்ன துவலை துவற்றலின்
தேஎந் தேருக் கடும்பரிக் கடும்பொடு
காஅய்க் கொண்டநும் மியந்தொய் படாமற்
கூவ லன்ன விடரகம் புகுமின்
இருங்க லிகுப்பத் திறுவரை சேராது
குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து
நின்று நோக்கினுங் கண்வாள் வெளவும்
மண்கனை முழவின் றலைக்கோல் கொண்டு
தண்டுகா லாகத் தளர்த லோம்பி
ஊன்றினிர் கழிமி னூறுதவப் பலவே
அயில்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை
வெயில்புறந் தரூஉ மின்ன லியக்கத்துக்
கதிர்சினந் தணிந்த வமயத்துக் கழிமின்
உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு
புரைதவ வுயரிய மழைமருள் பஃறோல்
அரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய
பின்னி யன்ன பிணங்கரி னுழைதொறும்
முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோல்

இன்னிசை நல்யாழ்ப் பத்தரும் விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணு மோம்பிக்
கைபிணி விடாஅது பைபயக் கழிமின்
களிறுமலைந் தன்ன கண்கூடு துறுகற்
றளிபொழி கானந் தலைதவப் பலவே
ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே
இன்புறு முரற்கைநும் பாட்டுவிருப் பாகத்
தொன்றுமுதிர் மரபினும் மருப்பிகுத்துத் துனைமின்
பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புன்முடிந் திடுமின்
செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவு ளோங்கிய காடேசு கவலை
ஒட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே
தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
ஓம்பா வள்ளற் படர்ந்திகு மெனினே
மேம்பட வெறுத்தவவன் றொஃறிணை மூதூர்
ஆங்கன மற்றே நம்ம னோர்க்கே
அசைவுழி யசைஇ யஞ்சாது கழிமின்
புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்
கலைநின்று விளிக்குங் கானமூ ழிறந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலிற்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும்

பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலு மிதவையும் பண்ணுது பெறுகுவிர்
துய்ம்மயி ரடக்கிய சேக்கை யன்ன
மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்
கூப்பிடு கடக்குங் கூர்நல் லம்பிற்
கொடுவிற் கூளியர் கூவை காணிற்
படியோர்த் தேய்த்த பணிவி லாண்மைக்
கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே
தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
ஓம்புந ரல்ல துடற்றுந ரில்லை
ஆங்குவியங் கொண்மி னதுவதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅமெல் லிணரும்
உம்ப லகைத்த வொண்முறி யாவும்
தளிரொடு மிடைந்த காமரு கண்ணி
திரங்குமர னாரிற் பொலியச் சூடி
முரம்புகண் ணுடைந்த நடவை தண்ணென
உண்டனி ராடிக் கொண்டனிர் கழிமின்
செவ்வீ வேங்கைப் பூவி னன்ன
வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த
சுவல்விளை நெல்லி னவரையம் புளிங்கூழ்
அற்கிடை யுழந்தநும் வருத்தம் வீட
அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்
பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி
வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை
தண்ணெ னுண்ணிழு துள்ளீ டாக
அசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர்
விசையங் கொழித்த பூழி யன்ன
உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை
நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசே ணீங்க வினிதுடன் றுஞ்சிப்
புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்
புல்லரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்லவ லிருந்த வூர்தொறு நல்லியாழ்ப்

பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும்
பன்னா ளிற்பினுஞ் சேந்தனிர் செலினும்
நன்பல வுடைத்தவன் றண்பணை நாடே
கண்புமலி பழனங் கமழத் துழைஇ
வலையோர் தந்த விருஞ்சுவல் வாளை
நிலையோ ரிட்ட நெடுநாண் டூண்டிற்
பிடிக்கை யன்ன செங்கண் வராஅற்
றுடிக்க ணன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்
ஞெண்டாடு செறுவிற் றராய்க்கண் வைத்த
விலங்க லன்ன போர்முதற் றொலைஇ
வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல்
இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்
திண்டேர் நன்னற்கு மயினி சான்மெனக்
கண்டோர் மருளக் கடும்புட னருந்தி
எருதெறி களம ரோதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி யசையினிர் கழிமின்
வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்க ணெருமை யினம்பிரி யொருத்தல்
கணைசெலன் முன்பொடு கதழ்ந்துவரல் போற்றி
வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்
துனைசெலற் றலைவா யோவிறந்து வரிக்கும்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்
யாண ரொருகரைக் கொண்டனிர் கழிமின்
நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத்
தியாறெனக் கிடந்த தெருவிற் சாறென
இகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்
கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு
மலையென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும்

பனிவார் காவிற் பல்வண் டிமிரும்
நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்
பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை தூமியப்
பருந்துபடக் கடக்கு மொள்வாண் மறவர்
கருங்கடை யெஃகஞ் சாத்திய புதவின்
அருங்கடி வாயி லயிராது புகுமின்
மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய்ப் பெருவிற லுள்ளி
வந்தோர் மன்ற வளியர் தாமெனக்
கண்டோ ரெல்லா மமர்ந்தினிதி னோக்கி
விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப்
பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட
எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத்
தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை யாமான் கயமுனிக் குழவி
ஊமை யெண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தகர்
அரவுக்குறும் பெறிந்த சிறுகட் டீர்வை
அளைச்செறி யுழுவை கோளுற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி
அரக்குவிரித் தன்ன செந்நில மருங்கிற்
பரற்றவ ழுடும்பின் கொடுந்தா ளேற்றை
வரைப்பொலிந் தியலு மடக்கண் மஞ்ஞை
கானக் கோழிக் கவர்குரற் சேவல்
கானப் பலவின் முழவுமருள் பெரும்பழம்
இடிக்கலப் பன்ன நறுவடி மாவின்
வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரம்
தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி
காஅய்க் கொண்ட நுகமரு ணூறை
பரூஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி
குரூஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்
வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்தள்
நாகந் திலக நறுங்கா ழாரம்

கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்
கானிலை யெருமைக் கழைபெய் தீந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லு நெய்க்க ணிறூஅல்
உடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்தும்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப
நோனாச் செருவி னெடுங்கடைத் துவன்றி
வானத் தன்ன வளமலி யானைத்
தாதெருத் ததைந்த முற்ற முன்னி
மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிட மிமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅ
தருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்று நல்லிசைச் சென்றோ ரும்பல்
இன்றிவட் செல்லா துலகமொடு நிற்ப
இடைத்தெரிந் துணரும் பெரியோர் மாய்ந்தெனக்
கொடைக்கட னிறுத்த செம்ம லோயென
வென்றிப் பல்புகழ் விறலோ டேத்திச்
சென்றது நொடியவும் விடாஅ னசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்
பொருமுர ணெதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்ற மணுகல் வேண்டிக்
கல்லெ னொக்க னல்வலத் திரீஇ
உயர்ந்த கட்டி லுரும்பில் சுற்றத்
தகன்ற தாயத் தஃகிய நுட்பத்
திலமென மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை யிழிதரு நீத்தஞ்சா லருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று

வடுவா ழெக்கர் மணலினும் பலரே
அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி
துவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி
இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவ றந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெ ணெல்லி னரிசி முட்டாது
தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கூறி விடுப்பி னும்முள்
தலைவன் றாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய
நீரியக் கன்ன நிரைசெல னெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழம்
கறங்குமணி துவைக்கு மேறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமோ டனைத்தும்
இலம்படு புலவ ரேற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்
வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழைசுரந் தன்ன வீகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்
வென்றெழு கொடியிற் றோன்றும்
குன்றுசூ ழிருக்கை நாடுகிழ வோனே.

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்
பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்துவேள்
நன்னன் சேய் நன்னனைப்பாடிய
மலைபடுகடாம் முற்றிற்று.

வெண்பா.

தூஉஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல்
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்
மாஅ மிசையான்கோ னன்ன னறுநுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு.

வெண்பா.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

பத்துப்பாட்டு

முற்றுப்பெற்றன.

4751.
TII. 1 (ஒள).

பத்துப்பாட்டு

மூல அரும்பத அகராதி.

அ - அழகு.
அகடு - நடு.
அகநாடு - உண்ணடு.
அகம் - இடம், நெஞ்சு, வீடு.
அகல் - சட்டி.
அகலம் - மார்பு.
அகலறை - பாசறை, மலைப்பக்கம்.
அகலுள் - அகன்றஊர்.
அகவ - ஒலியாநிற்க.
அகவர் - அழைத்துப் புகழ்வோர், சூதர், நாட்டில் வாழ்வார்.
அகழ் - குளம், தோண்டப்பட்டது.
அகளம் - நீர்ச்சால், பத்தர்.
அகற்றி - பெருக்கி.
அகைத்த - முறித்த.
அகைந்தன்ன - தழைத்தாலொத்த.
அகைய - தழைக்க.
அங்கண் - ஊர்.
அங்காடி - கடைத்தெரு.
அசைஇ - இருந்து, இளைத்து, இளைப்பாறி, வருத்தி.
அசைஇய - ஓய்ந்த.
அசைஇயது - கிடந்தது.
அசைத்த - கட்டிய.
அசைதல் - இருத்தல்.
அஞர் - வருத்தம்.
அட்டி - இட்டு, மிக இட்டு.
அட்டில் - அடுக்களை.
அட்டு - கொன்று.
அடகு - இலைக்கறி.
அடர் - தகடு.
அடிபுதையரணம் - செருப்பு.
அடுக்கம் - மலைப்பக்கம்.
அடும்பு - ஒருகொடி.
அடை - இலை, நெல்லடை, முளை.
அடைச்சி - உடுத்து.
அண்ணல் - தலைமை.
அண்ணு - உண்ணுக்கு.
அணங்கல் - வருத்துதல்.
அணங்கிய - பின்னி வளர்ந்த.
அணங்கு - தெய்வம், பேய்மகள், வருத்தம், வருத்துந்தெய்வம்.
அணத்தல் - தலையெடுத்தல்.
அணந்த - மேனோக்கின.
அணல் - கழுத்து, தாடி.
அணி - அணிகலன், அழகு, படை.
அணிந்து - அழகு பெற்று.
அணுகுபு - நெருங்கி.
அத்தம் - வழி.
அதட் பள்ளி - தோற்படுக்கை.
அதர் - வழி.
அதரி கொள்ளுதல் - கடாவிடுதல்.
அதள் - தோல்.
அதிகன் - ஒருவள்ளல்; இவன் தனக்குக் கிடைத்த அமிழ்து விளையும் கருநெல்லிக் கனியைத் தானுண்டு உடம்பு பெருதே ஔவைக்குக் கொடுத்தான்.
அதிரல் - புனலிக்கொடி.
அந்தணர் - வேதாந்தத்தையே நோக்குவார்.
அந்தி - சந்தி.
அம் - அழகு.
அம்பணம் - வீட்டிலுள்ள கூடு வாய்மூலை.
அம்பர் - அப்பால்.
அமயம் - சமயம்.
அமர் - போர்.
அமர்தல் - (நெஞ்சு)பொருந்துதல்.
அமலுதல் - நெருங்குதல்.
அமலை - கட்டி, சோற்றுருண்டை.
அமன்றன - நெருங்கின.
அமுதம் - பால்.
அமை - மூங்கில்.
அமைத்து - பண்ணி.
அமைதல் - நெருங்குதல்.
அமைதி - சால்பு.
அமையம் - பொழுது.
அமையான் - பொருந்தான்.
அமைவர - பொருந்துதல் வர.

அயர்கம் - செய்வேம்.
அயர்ந்து - தன்னை மறந்து.
அயிர் - கண்டசருக்கரை, நுண் [மணல்.
அயிராது - ஐயுறாமல்.
அயில் - கூர்மை, வேல்.
அயில்வாய் - வண்டி உருளையின் [விளிம்பு.
அயினி - உணவு.
அரக்கு - எள்ளின்காயில் உள்ள குற்றம், சாதிலிங்கம்.
அரந்தை - மனக்கவற்சி.
அரம் - வாளரம்.
அரமியம் - நிலாமுற்றம்.
அரலை - கொடும்பு, குற்றம், விதை.
அரவம் - ஒலி.
அரி - அழகு, உவமை, மென்மை, வண்டு. [சை.
அரிக்குரல் - அரித்தெழுகின்ற ஓ
அரிசெத்து - உவமையொழிந்து.
அரித்த - அரிக்கப்பட்ட, தின்ற.
அரிநர் - அறுப்பார்.
அரிமா - சிங்கவேறு.
அரியல் - கள்.
அரில் - சிறுகாடு, பிணக்கம்.
அரீஇ - அறுத்து.
அருகா - கெடாத.
அருந்தி - உள்ளடக்கி.
அருநிலம் - பாலைநிலம்.
அருப்பம்-அரண், அரிது, அருமை.
அருவாளர் - அருவாளநாட்டரசர்.
அருவிடர் - அரியகுகை.
அருளின்மாறு - மறம்.
அரை - வயிறு.
அரைநாள் - நடுயாமம்.
அல் - இராக்காலம்.
அல்கல் - தங்கல்.
அல்கலும் - நாடோறும்.
அல்குல் - பக்கம்.
அல்லங்காடி - மாலைக்கடை.
அல்லது - மறம்.
அல்லாந்து - மகிழ்ந்து.
அலகு - பலகறை (சோழி.)
அலங்கல் - அசைதல்.
அலந்தோர் - இடுக்கட்பட்டோர்.
அலமரல் - சுழற்சி.
அலமரும் - அசையும்.
அலரி - ஞாயிறு, பூ.
அலவன் - நண்டு.
அலவுற்று - சுழன்று.
அலை - அலைத்தல்.
அலைக்கும் - வருத்தும்.
அலைவாய் - திருச்செந்தூர்.
அவ்வயிறு - அழகியவயிறு.
அவண - அவ்விடத்திலுள்ளன.
அவல் - பள்ளம், விளைநிலம்.
அவலம் - கேடு, மிடி.
அவித்து - அடித்து, மாற்றி.
அவிழ் - சோறு.
அவிழ்தல் - மலர்தல்.
அவைப்பு - குத்துதல்.
அவையம் - திரள்.
அவையல் - குத்தலரிசி.
அழல் - எரிகின்றநிறம், கோபம், [நெருப்பு.
அழலுதல் - எரிதல்.
அழன்ற - வெம்மைசெய்த.
அழி - மிகுதி.
அழுந்துபட்டிருத்தல் - நெடுங்காலம் அடிப்பட்டிருத்தல்.
அழும்பில் - மானவிறல் வேளென்னுங்குறுநிலமன்னனுடையவூர்.
அழுவம் - ஆழம், குழி, பரப்பு.
அள்ளல் - சேறு.
அளகு - கோழிப்பெடை.
அளவை - தன்மை.
அளியன் - அளிக்கத்தக்கான்.
அளை - குகை, முழைஞ்சு, மோர்.
அளைஇ - கலந்து.
அறல் - அற்றநீர், நெறி, மணல்.
அறற்குழல் - தாள அறுதியையுடைய வேய்ங்குழல்.
அறிந - அறியவல்லாய்.
அறிமார் - அறிய.
அறிவுமடம் - தான் கூறுகின்றவற்றை உணரும் அறிவில்லாதார் மாட்டுத் தான் அறியாமைப்பட்டிருத்தல்.
அறிவுறல் - அறிவுறுத்தல்.
அறுகை - அறுகம்புல்.
அறுவை - துகில்.

அறை - அறுத்தல், நறுக்கல், பாத்
அன்ன - ஒத்த. [தி, பாறை.
அனந்தர் - கள்ளின்மயக்கம்.
அனந்தல் - மதம்.
அனிச்சம் - அனிச்சப்பூ.
ஆக்கம் - நுகர்பொருள்.
ஆகம் - மார்பு.
ஆகியர் - ஆவாய்.
ஆகுளி - சிறுபறை.
ஆங்கண் - ஊர்.
ஆசினி - ஈரப்பலா.
ஆடவர் - ஆண்மக்கள், ஆளுகின்ற
ஆடி - அளைந்து. [வர், வீரர்.
ஆடிய - அளைந்த.
ஆடு-அடுதல்,சமைத்தல், மேடராசி,
ஆடை - தயிராடை. [வெற்றி.
ஆண்டலை - ஆண்டலைப்புள்.
ஆணை - ஆக்கினை.
ஆதி - குதிரைக்கதியுளொன்று.
ஆப்பி - பசுச்சாணம்.
ஆம்பல் - ஒரு கொடி, ஒருபண்.
ஆம்பி - குடைக்காளான், பன்றிப்
பத்தல். [ஏறு.
ஆமான் புகல்வி - காட்டுப்பசுவின்
ஆமூர் - நல்லியக்கோடனது ஊர்.
ஆய் - அழகு, இடைச்சாதி, ஒரு
வள்ளல்.
ஆயம் - திரள்.
ஆர் - ஆரக்கால்.
ஆர்கலி - வெள்ளம்.
ஆர்த்தி - கொடுத்து.
ஆர்த்தும் - நுகர்விக்கும்.
ஆர்வம் - கருதிய பொருள்களின்
மேல்தோன்றின பற்றுள்ளம்.
ஆர்வலர் - அன்புசெய்வோர்.
ஆர - நுகர.
ஆரம் - ஆரக்கால், சந்தனம்,மாலை,
முத்த மாலை, முத்தாற் செய்த
கச்சு, வண்டியினேருருப்பு.
ஆரி - அருமையை யுடையது.
ஆரை - தொத்துளிப்பாய்.
ஆல் - கார்த்திகைமீன்; ஆரலென்
பதன் விகாரம்.
ஆல - ஆரவாரித்து அழைப்ப.
ஆலல் - ஆரவாரித்தல்.
ஆவணம் - கடைத்தெரு.
ஆவுதி - ஆகுதி, யாகம்.
ஆழி - கடற்கரை.
ஆளி - யாளி.
ஆற்ற - பொறுத்திருக்க.
ஆற்றல் - நடத்தல்.
ஆன்ற - அமைந்த, இல்லையான.
ஆன்றிசின் - அமைந்தேன்.
ஆன்று - அமைந்தேன், நிறைந்து.
ஆனு - அமையாத.
இகல் - போர், மாறுபாடு.
இகழுநர் - இகழ்ந்திருப்போர்.
இகுத்தல் - சொரிதல்.
இகுத்து - தாழ்த்து, வாசித்து.
இகுதரும் - தாழ்ந்துவிழும்.
இகுப்ப - ஒலியாநிற்க.
இகுப்பம் - திரட்சி.
இசின் : ஓரிடைச்சொல்.
இசை - ஓசை, புகழ்.
இசைப்ப - ஒலிப்ப.
இட்டிது - சிறியது.
இட்டிய - குறுகிய.
இடங்கர் - ஒருவகை முதலை.
இடன் - அகலம்.
இடா - இறைகூடை.
இடி - இடித்தல், பொடி, மா.
இடும்பை - மிடி.
இடை - இடம், நடுவாகிய இடம்,
நடுவு நிலை, பொழுது.
இடைகழி - ரேழி.
இணர் - காய்க்குலை, பூ, பூங்கொ
இதணம் - பரண். [த்து.
இதழ் - இமை, பூ.
இதை - கப்பற்பாய்.
இமிர - ஒலிப்ப.
இமில் - காளையின் முதுகின்மே
இமிழ் - ஒலி. [லுள்ள புடைப்பு.
இமிழ்தல் - முழங்குதல்.
இமைத்தல் - கண்களின் இதழ்
களிரண்டினையுங் குவித்தல்.
இமைப்பு - விளக்கம்.
இயக்கம் - வழி.
இயக்கி - ஒலிப்பித்து, தெறித்து.

இயக்கு - செலவு.
இயங்காவையம் - பூமி.
இயங்குநர் - வழிப்போவார்.
இயம் - யாழ், வாச்சியம்.
இயம்ப - ஒலிப்ப.
இயர் : வியங்கோள் விகுதிகளுள்
இயல்பு - ஒழுக்கம். [ஒன்று.
இயல - அசைய.
இயலி - உலாவி, நடந்து.
இயவர் - வாச்சியக்காரர்.
இயவு - வழி.
இயவுள் - கடவுள், தலைவன்.
இயன்ற - எழுதின.
இரட்ட - ஒலிப்ப, மாறியொலிப்ப.
இரலை - கலைமான்.
இரவலன் - இரத்தற்றொழிலில்
இரியல் - கெடுதல். [வல்லோன்.
இரீஇ - இருத்தி,இருந்து,வைத்து.
இருக்கை - இருப்பு, குடியிருப்பு.
இருபிறப்பாளர் - உபநயனத்திற்கு முன்பு ஒரு பிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினை உடையவர்.
இருமை - கருமை, பெருமை.
இருவி - தினையரிந்ததாள்.
இருள் - கருமை, மயக்கம்.
இருளிய - இருண்ட.
இலங்கை - நல்லியக் கோடனுடைய முன்னோர் இருந்த ஊர்.
இலஞ்சி - மடு.
இலம் - இல்லாமை.
இலிற்றும் - துளிக்கும்.
இவர்தல் - உலாவுதல், படர்தல்.
இழிபு - இழிந்து, குன்றுதல்.
இழுக்கு - வழுக்குநிலம்.
இழுது - நெய்விழுது.
இழை - அணிகலம், பேரணிகலம்.
இழைசூழ்வட்டம் - ஒருபண்ணியா
இழைபுனைநர் - தட்டார். [ரம்.
இளக்கும் - அசைக்கும்.
இளக - அசைந்துவிழும்படி.
இளி - இளியென்னும் யாழ்நரம்பு.
இளை - காவற்காடு.
இளையோர் - மகளிர், வீரர்.
இளையோன் - இளஞ்சேட்சென்னி யெனனும் சோழவரசன்.
இறடி - தினை.
இறவு - இருமீன்.
இறா - இறாமீன்.
இறால் - தேன்கூடு, தேனடை.
இறுவுதல் - வதக்கி மயிர்போகச் சீவுதல்.
இறுத்த - தங்கிய, முடித்த.
இறுப்ப - கிடப்ப.
இறும்பு-இளமரக்காடு, குறுங்காடு.
இறும்பூது - அதிசயம்.
இறை - இறப்பு, கையிறை, சந்து, தங்குதல்.
இறைகூடி - அரசாண்டு.
இறைஞ்சின - தாழ்ந்தன.
இறைப்பணைத்தோள் - சந்துகளையுடைய பருத்ததோள்.
இன்குளகு - அதிமதுரத்தழை.
இன்பம் - இனிமை.
இன்னீர்ப்பசுங்காய் - பச்சைப் பா
இனம் - திரட்சி. [க்கு.
இனி - இப்பொழுது.
ஈகை - கொடை, பொன்.
ஈகைமாரி - பொன்மழை.
ஈங்கை - இண்டங்கொடி.
ஈர் - ஈரம், பேன்முட்டை.
ஈர்ந்து - இழுக்கப்பட்டு.
ஈரம் - அருள்.
ஈரறை - புறவறைக்கு உள்ளாகிய
ஈரிய - ஈரத்தையுடைய. [அறை.
ஈரிலை - பெரிய இலை.
ஈழம் - சிங்களதேசம்.
உக்கம் - மருங்கு.
உகக்கும் - உயரச்செல்லும், உயர
உகந்து - உயர்ந்து. [ப்பறக்கும்.
உகளல் - துள்ளல்.
உகிர் - நகம்.
உகுத்தென - போகட்டதாக.
உகைத்து - தள்ளி.
உகைப்ப - எழுப்ப.
உட்க - அஞ்ச.
உட்கு - அச்சம்.
உடம்பிடி - வேல்.

உடன் - சேர.
உடன்று - கோபித்து.
உடீஇ - உடுத்தி.
உடு - அம்பில் நாணேக்கொள்ளுமிடம், நாண்மீன்.
உடுக்கை - உடை, ஒருவாத்தியம்.
உடையூஉ - உடைந்து.
உணங்குதல் - உலருதல்.
உத்தி - ஒருவகைத் தலைக்கோலம்.
உதள் - ஆட்டுக் கிடாய்.
உந்தல் - நரம்புகளைத்தெறித்தல்.
உந்தி - கொப்பூழ், தெறித்து, யாழகத்தோருறுப்பு, யாற்றிடைக்குறை.
உந்தூழ் - பெருமூங்கில்.
உப்பிலி - உப்பில்லாத உணவு.
உம்பல் - குலத்தில்வழிவந்தோன்.
உமட்டியர் - உப்புவாணிகத்தியர்.
உமணர் - உப்புவாணிகர்.
உய்த்தர - செலுத்துதலைச் செய்ய.
உய்ம்மார்-செலுத்துதற்கு.
உய்யாமை - உயிரைத் தாங்கியிராமை.
உயங்கும் - வருந்தும்.
உயர்நிலை - தெய்வத்தன்மை.
உயர்நிலையுலகம் - தேவருலகம்.
உயரி - எடுத்து.
உயரிய - உயர்ந்த.
உயவு - வருந்துதல்.
உயவை - உயவைக்கொடி.
உயிர் - ஓசை.
உயிர்த்தல் - இளைப்பாறல்.
உயிர்த்து - தள்ளி, போக்கி.
உரவு - உலாவுதல், பரவுதல், மிகுதி, வலிமை.
உரறுதல் - முழங்குதல்.
உரன் - அறிவு.
உராலின் - ஓடுதலின்.
உரிஞ்சி - தேய்த்து.
உரீஇ - தீற்றி, வழித்து, வாரி.
உரு - அச்சம், அழகு, சாயல், நிறம், வடிவம்.
உருக்கு - உருக்குதல்.
உருகெழு - அச்சம்பொருந்தின.
உருத்த - தோற்றின.
உருப்பு - வெப்பம்.
உரும் - உருமேறு.
உரும்பு - கொடுமை.
உருவம் - அழகு, சிவந்தநிறம்.
உருளி - உருளை.
உரை - புகழ், புனைந்துரை.
உரைஇ - உலாவி.
உரைத்தல் - தடவல், தேய்த்தல்.
உல்கு - சுங்கம்.
உலகம் - உயிர், உயிர்க்கிழவன், ஒழுக்கம், சீவான்மாக்கள், நன்மக்கள்.
உலறிய - உலறிக்கிடந்த, காய்ந்த, பொலிவிழந்த.
உவலை - தழை.
உழக்க - கொன்றுதிரிய.
உழக்கி - விளையாடி, வென்று.
உழந்த - வருந்திய.
உழவர் - உழவுத்தொழிலையுடையோர்.
உழி - இடம்.
உழிதருதல் - சுழலுதல்.
உளர்தல் - அசைத்தல், அசைதல்.
உளர்ப்பு - அலைத்தல்.
உளர - யாழ்நரம்பைத்தடவ, யாழ்வாசிக்க.
உளி : பகுதிப்பொருள் விகுதி.
உளியம் - கரடி.
உளை - கழுத்தின் மயிர், தலையாட்டம், துய்.
உளைப்பூ - விரிந்த பூ.
உறந்தை - உறையூர்.
உறந்தை போக்கி - உறையூரை விசாலமாகச் செய்து.
உறழ்குறித்தல் - வாதுசெய்யக்கருதுதல்.
உறழ்ச்சி - மாறுபாடு.
உறழ்தல் - மாறுபடல், வீணையில் ஒரு நரம்பைவிட்டு ஒரு நரம்பைத் தெறித்தல்.
உறுகண் - வருத்தம்.
உறுநர் - சேர்ந்தவர்.
உறூஉ - உறுவித்து.
உறை - உறுத்துவது, துளி.
உறைத்தல் - உதிர்த்தல்.
உறைப்ப - மிகவிழ.
ஊக்கலர் - முயற்சியையுடையார்.
ஊக்குதல் - தப்புதல்.
ஊகம் - ஊகம்புல், கரியகுரங்கு,

ஊசல் - அசைவு.
ஊட்டுறுபச்சை - நிறந்தோய்ந்த தோல். [குட்டி.
ஊமைக்குருளை - வாய்திறவாக்
ஊர்தல் - ஏறுதல், பரத்தல்.
ஊழ் - முறை.
ஊழ்த்து - செவ்வியழிந்து.
ஊழுற்று - முற்றுதலுற்று.
ஊறு - இடையூறு, உறுதல்.
ஊன் - இறைச்சி.
ஊன்றி - அமுக்கி.
ஊன்றிய - நட்டுவைத்த.
எஃகம் - வாள், வேல்.
எஃகு - கூர்மை, வேல்.
எக்கர் - இடுமணல்.
எகினம் - அன்னம், கவரிமா, நாய்.
எடுத்த - பகைவர்மேற் சென்ற.
எடுப்ப - எழுப்ப.
எடுப்பி - ஓட்டி.
எண் - எள்.
எண்கு - கரடி.
எதிர் - மறுமொழி.
எதிர்தல் - தோற்றுதல்.
எதிர்பு - ஏறட்டுக்கொண்டு.
எதிரி - ஏற்றுக்கொண்டு.
எந்திரம் - ஆலை.
எமியேம் - தமியேம்.
எய் - முள்ளம்பன்றி.
எய்த்த - இளைத்த.
எய்யா - அறியவொண்ணாத.
எயிற்பட்டினம் - நல்லியக்கோட னுடைய ஊர். [மகளிர்.
எயிற்றியர் - எயினக் குலத்தின்
எயிறு - பல், யானைக்கொம்பு.
எயினர் - எயினச்சாதியிலுள்ளார், வேடர்.
எருக்கி - அடித்து, வெட்டி.
எருத்தம் - புறக்கழுத்து.
எருத்து - கழுத்து.
எருந்து - கிளிஞ்சல்.
எருவை - கொறுக்காந்தட்டை, பஞ்சாய்க்கோரை.
எல் - இரவு, ஞாயிறு, பகல்.
எல்லரி - ஒரு வாத்தியம்.
எல்லை - பகற்பொழுது, வரம்பு.
எல்லைதருநன் - சூரியன்.
எவ்வம் - வருத்தம்.
எழால் - யாழ்.
எழினி - திரைச்சீலை.
எழு - யானையைத் தடுக்கும் மரம்.
எழூஉ (எழு) - கணையமரம்.
எறிதல் - அடித்தல், அழுத்துதல்.
எறுழ் - வலி.
எறுழம் - எறுழம்பூ.
ஏ - அம்பு.
ஏக்கறுதல் - இத்தன்மை பெற்றிலேமேயென்று விரும்புதல்.
ஏங்குவயிர் - ஊதுங்கொம்பு.
ஏங்குவனர் - ஏங்குவார்.
ஏடு - பூவிதழ், மேன்மை.
ஏணி - எல்லை.
ஏத்தம் - ஓசை.
ஏத்தல் - உயர்த்திக் கூறுதல்.
ஏந்துதல் - உயர்தல்.
ஏந்தும் - உயர்ந்துதோன்றும்.
ஏந்தெழில் - உயர்ந்து தோன்றுகின்ற அழகு.
ஏம் - இரட்சை, இன்பம், மயக்கம்.
ஏமம் - இரட்சை, இன்பம், ஐயம், பாதுகாவல், மயக்கம்.
ஏமாப்ப - கலக்கமுற, துணிய.
ஏமுறல் - மயக்கமுறல்.
ஏர் - அழகு, எருது, எழுச்சி, ஒப்பு,
ஏர்பு - எழுந்து. [பொருந்திய.
ஏரகம்-மலைநாட்டகத்துள்ள முருகக் கடவுளின் தலம்.
ஏரோர் - ஏரினையுடையகுடிகள்.
ஏழகத்தகர் - ஆட்டுக்கிடாய்.
ஏற்றெழுந்து - ஏறட்டுக் கொண்டெழுந்து, துயிலுணர்ந்தெழுந் [து.
ஏற்றை - ஆண்விலங்கு.
ஏறு - இடபம், இடி, உருமேறு, எருமைக்கடா, சிங்கவேறு.
ஏனம் - பன்றி.
ஐ - வியப்பு.
ஐஇய - வியப்பினையுடைய.
ஐது - மெல்லிது.
ஐயர் - இருடிகள், தேவர்.

ஐயவி - வெண்சிறுகடுகு.
ஐவனம் - ஒருவகை மலைநெல்.
ஒக்கல் - சுற்றம்.
ஒட்டாது - பொருந்தாது.
ஒடுக்கம்-ஒதுங்கியிருக்கின்ற இடம்.
ஒடுங்குதல் - தங்குதல்.
ஒடுங்கும் - கிடக்கும்.
ஒய்யென - கடுக.
ஒராஅல் - கைவிடுதல்.
ஒரீஇ - நீக்கி.
ஒருத்தல் - ஆண்யானை.
ஒல்க - சாய.
ஒல்குதல் - நுடங்குதல்.
ஒல்லென - ஒல்லென்னு மோசை [பட.
ஒலித்தல் - தழைத்தல்.
ஒலியல் - மேலாடை.
ஒழுகி - நடந்து.
ஒழுகிய - ஒழுங்குபட்ட, ஒழுங்குப டக்கிடந்த, ஒழுங்குபடவளர்ந்த.
ஒழுகின - வளர்ந்தன.
ஒழுகை - சகடவொழுங்கு.
ஒளி - விளக்கம்.
ஒளியர் - ஒளிநாட்டார்.
ஒளிறுதல் - விளங்குதல்.
ஒற்றி - வேய்த்து.
ஒன்னு - பொருந்தாத.
ஓ - ஒழிவு, சென்றுதங்குதல்.
ஓக்கம் - உயர்ச்சி.
ஓக்கிய - அறுதியிட்டுவைத்த.
ஓச்சி - எடுத்து, ஓட்டி, குத்தி.
ஓட்டி - கெடுத்து.
ஓடுதல் - கெடுதல், வருந்துதல்,
ஓடுவளை - கழலுகின்றவளையல்.
ஓடை-யானையின்நெற்றிப்பட்டம்.
ஓத்து - வேதம்.
ஓதி - கூந்தல், பாடி.
ஓப்புதல் - ஓட்டல்.
ஓம்ப - பாதுகாப்ப.
ஓம்புதல் - பரிகரித்தல்.
ஓர்க்கும் - நினையாநிற்கும்.
ஓர்த்து - கேட்டு.
ஓர்ப்பனள் - நினைபவளாய்.
ஓரன்ன - ஒருதன்மைத்தாகிய.
ஓரி - ஒருவள்ளல், ஓரியென்னும் வள்ளலின் குதிரை, குதிரைக் கழுத்தின்மயிர், நிறம், பிடரி [மயிர், மயிர்.
ஓவம் - சித்திரம்.
ஓவிறந்து - நீக்கமின்றி.
ஓவு - ஒழிவு, சித்திரம்.
கச்சம் - கச்சு.
கசடு - வடு.
கஞ்சகம் - கருவேம்பு.
கஞலிய - நெருங்கின.
கட்கொண்டி - கள்ளினுற் பெற்ற [விலை.
கட்சி - காடு.
கட்டளை - உரைகல், சாளரம்.
கட்டில்-அரசவுரிமை, சிங்காதனம்.
கட்பு - களைபறித்தல்.
கடக்கும் - வெல்லும்.
கடந்து - வென்று.
கடம் - காடு.
கடவது - செய்யக்கடவ தொழில்.
கடவல் - செலுத்தல்.
கடவிய - கடமைப்பட்ட.
கடவு - கடன்.
கடவுள் - முனிவர்.
கடறு - காடு.
கடன் - முறைமை.
கடாஅம் - மதம்.
கடாவ - செலுத்த.
கடி - அச்சம், காவல், சிறப்பு, பேய், மிகுதி, விளக்கம்.
கடிகைநூல் - காப்புநாண்.
கடிப்பகை - வெண்சிறுகடுகு.
கடிவாயில் - கோபுரவாயில்.
கடிவாலுவன் - பேய்மடையன்.
கடு - கடுமரம், நஞ்சு.
கடுக்கும் - ஒக்கும், கடுகவோடும்.
கடுங்கண் - தறுகண்மை.
கடுஞ்சூல் - முதற்கருப்பம்.
கடுப்புடைப்பறவைச்சாதி - குளவி.
கடும்பு - சுற்றம்.
கடுவன் - ஆண்குரங்கு.
கடை - காம்பு, பின், முடிந்தகாலம், வாசல்.
கடைஇ - செலுத்தி, செலுத்திக் கொடுத்து.
கடைக்கூட்டல் - முடிவுபோக்கல்.

கடைநர் - கடைவார்.
கண் - இடம், கணு, முழவின்கண், [வடிவு.
கண்கூடு - நெருக்கம்.
கண்டம் - பலநிறத்தாற் கூறுபட்ட மதிட்டிரை.
கண்ணி - ஒருவகைமாலை, போர்ப்பூ, மாலை. [கள்.
கண்ணுள்வினைஞர் - சித்திரகாரி
கண்ணுளர் - கூத்தர்.
கண்பு - சண்பங்கோரை.
கணம் - திரட்சி.
கணவீரம் - செவ்வலரி.
கணை - அம்பு, திரட்சி.
கதழ்ந்து - கடுகி.
கதழ்வு - கலக்கம், விரைவு.
கதழ்வுறுத்தல் - கலங்கிக்கூப்பிடு [தல்.
கதி - நடை.
கதிர் - ஒளி, கிரணம், சூரியன், தானியக்கதிர்.
கதுப்பு - கூந்தல், மயிர்.
கதுமென - கடுக.
கதுவுதல் - கைக்கொள்ளுதல்.
கதுவும் - அழிக்கும்.
கந்து - ஆதீண்டுகுற்றி, கம்பம், யானைகட்டுந்தறி.
கம்பலை - ஓசை.
கம்புள் - ஒருவகைக்கோழி.
கம்மியர் - செய்தற்றொழிலையுடை [யார்.
கம - நிறைவு.
கமழ்தல் - தோற்றுதல்.
கமுகு - பாக்குமரம்
கய - பெருமை, மென்மை.
கயந்தலை - மெல்லிய தலை.
கயம் - குளம், நீரறாத மடு.
கயமுனி - யானைக்கன்று.
கயவாய்-புகார்முகம், பெரியவாய்.
கரண்டை - குண்டிகை.
கரந்தை - நாறு கரந்தை.
கரம்பை - தரிசுநிலம்.
கராம் - ஒருவகை முதலை.
கரிகாலன் - ஒருசோழன்.
கருந்தொழில் - வலியதொழில்.
கருந்தொழில்வினைஞர் - தச்சர்.
கருப்பை - எலி.
கருமறி - வெள்ளாட்டுக்குட்டி.
கருமை - கொடுமை, வலிமை.
கருவி - ஆயுதம், தொகுதி.
கருவை - வரகுவைக்கோல்.
கருவொடுபெயரியஇல் - கருப்பக் [கிரகம்.
கருனை - பொரிக்கறி.
கரையும் - ஒலிக்கும்.
கல் - நங்குரக்கல், மலை.
கலப்பை - யாழ்முதலிய வாத்தியங்களை இட்ட பெட்டி.
கலப்பையிர் - வாச்சியமுட்டுக்களையுடைய பையையுடையீர்.
கலம் - அணிகலம், உண்கலம் நாவாய், படைக்கலம், குப்பி, பேரணிகலம், வாத்தியம்.
கலவம் - தோகை.
கலனை - சேணம்.
கலாபம் - தோகை.
கலாவ - கலக்க, கலக்கமெய்த.
கலாவல் - கூடுகை.
கலி - ஆரவாரம், பெருக்கு, மனச்செருக்கு, விழா.
கலிங்கம் - போர்வை.
கலித்த - செருக்கிவளர்ந்த, செருக்கின, மகிழ்ந்த, மிக்கெழுந்த.
கலிழ்ந்து - கலங்கி.
கலுழ்தல் - ஒழுகுதல், கலங்குதல்.
கலுழி - பெருக்கு.
கலை - முசுக்கலை.
கவ்வை - எள்ளின் இளங்காய்.
கவடு - பகுத்தல், மரக்கிளை.
கவயம் - கவசம்.
கவர்பு - கைக்கொண்டு.
கவர - தின்ன.
கவல்பு - கவற்சி. [பலவழி.
கவலை - கவர்த்தவழி, நாற்சந்தி,
கவவு - உள்ளீடு, தின்றல், முயக்கம். [உணவு.
கவளம் - யானைக்குக் கொடுக்கும்
கவாஅன் - குகை, மலைப்பக்கம்.
கவிகை - கொடுத்துக்கவிந்த கை.
கவிதல்-ஒன்றோடொன்றுசேர்தல்.
கவிய - இடிய.
கவின்று - அழகுபெற்று.

கவுள் - கன்னம்.
கவை - இரட்டை, கப்பு.
கவைஇ - அணைத்து, சூழ்ந்து.
கவைஇய - அகத்திட்ட, சூழ்ந்த.
கவைத்தாம்பு - தாமணியை உடை யநெடுந்தாம்பு.
கவைமுட்கருவி - யானையை அடக் கும் கருவிகளுள் ஒன்று.
கழங்கு - கழற்சிக்கொடி.
கழனி - வயல்.
கழால - கழற்ற.
கழிப்பி - போக்கி.
கழுது - பரண், பேயிலொருசாதி.
கழை - கோல், மூங்கில்.
களமர் - உழவர், வீரர்.
களரி - போர்க்களம்
களி - களிப்பு, வண்டல்.
களைஞர் - களைகளைப்பறிப்பார்.
கற்சிறை - கல்லணை.
கற்பொதும்பு - மலைமுழை.
கறங்க - ஒலிக்க.
கறி - மிளகு.
கறுப்ப - முற்ற.
கறுவுதல் - கோபித்தல்.
கறை - உரல், கருமை.
கன்னல் - கரகம். [காதணி.
கனங்குழை - பொன்னாற் செய்த
கனிந்து - முற்றுப்பெற்று.
கனை - செறிதல்.
கனைசெல்ல்-ஆரவாரிக்கும்செலவு.
கனைத்து - திரண்டு.
கா - சோலை.
காஅய் - சுமந்து.
காசு - மணி.
காஞ்சி - காஞ்சிமரம்.
காட்சி - அழகு, அறிவு, தோற்றம்.
காடி - ஊறுகறி, கஞ்சி, கழுத்து, புளிப்கறி, புளியங்காய் நெல்லி க்காய் முதலிய ஊறவைத்தது,
காண் - அழகு, காட்சி. [நெய்.
காண்டு - காட்சி.
காண்மார் - காணுதற்கு.
காமர் - விருப்பம்.
காமரம் - சீகாமரமென்னும் பண்.
காமரு - விருப்பம்மருவின்.
காய்த்துணர் - காய்க்கொத்து.
காய்தல் - எரிதல்.
காய்ந்து - கோபித்து.
காய - சுமந்து கொண்டுவந்த.
காயம் - உறைப்பு.
காயா - காசாமரம்.
கார் - பசுமை, மழை, மேகம்.
கார்க்கரும்பு - பசியகரும்பு.
கார்கோள் - கடல்.
காரி - ஒருவள்ளல், அவன் குதிரை, நஞ்சு. [டா.
காரேறு - எருமைக்கடா, கரியக
கால் - அரிதாள், இடம், காம்பு, காற்று, கிரணம், சட்டம், தண்டு, நீர்க்கால்.
கால்யாத்த - நெருங்கின.
கால்யாத்தல் - மறைத்தல்.
காலோர் - காலாட்கள்.
காவலர் - அரசர். [துகொண்ட.
காவிக்கொண்ட - தோளாற் சுமந்
காவிதிமாக்கள் - காவிதிப் பட்டங் கட்டின அமைச்சர்.
காழ் - அகில்முதலியன, இருப்புநா ராசம், கருமை, கழிகள், காம்பு, குத்துக்கோல், தண்டு, தறி, தூ ண், புடைவை, மணி, வடம், வ
காழ்ப்பு - உறைப்பு. [யிரம், விதை.
காழ்வை - அகில்.
காழகம்-உடை, ஒருதேயம்(பர்மா) கருமை, கலிங்கம, நீலஆடை.
காழோர் - குத்துக்கோலை யுடை
காளாம்பி - காளான். [யோர்.
கான் - காடு.
கானல் - கடற்கரை, கரை.
கானவர் - குறவர், முல்லைநிலத்து வாழ்வார்.
கிடங்கில் - நல்லியக்கோடனூர்.
கிடங்கு - அகழி.
கிடாய் - ஆட்டுக்கிடாய்.
கிடாரம் - ஒருவகைப்பாத்திரம்.
கிடுகு - கேடகம் சட்டம்.
கிடேச்சை - நெட்டி.
கிண்கிணி - சிறுசதங்கை.

கிணைமகள் - கிணைவனுடையமகள்.
கிம்புரி - மகரவாய்.
கிலுகிலி - கிலுகிலுப்பை.
கிழவ - உரிமையையுடையாய்.
கிழவிர் - உரிமையை யுடையீர்.
கிழவோன் - உரிமையை யுடையோன்.
கிழார் - நீரிறைக்கும் பூட்டைப் [பொறி.
கிள்ளுபு - கிள்ளி.
கிளக்குவல் - சொல்லுவேன்.
கிளர்தல் - எழுதல், தோன்றுதல், [மிகுதல்.
கிளை - சுற்றம்.
கிளைஇய - கிளைத்த.
கிளைமலர் - கொத்தில் எழுந்தபூ.
கிளையிதழ் - புறவிதழ்.
கின்னரம் - கின்னரப்பறவை.
குஞ்சி - தலைமயிர்.
குட்டம் - ஆழம், ஒருநாடு, குளம்.
குட்டுவன் - குட்டநாட்டை யுடையோன்.
குட - வளைவை யுணர்த்துவதோர் [உரிச்சொல்.
குடக்கு - மேற்கு.
குடசம் - வெட்பாலை.
குடந்தம்பட்டு - வழிபட்டு.
குடபுலங்காவலர் - சேரர்.
குடபுலம் - மேற்றிசை.
குடம்பை - கூடு.
குடவர் - குடநாட்டிலுள்ளார்.
குடா - வளைவு.
குடாவடி-குடமுழவுபோன்ற அடி.
குடி - குடிமக்கள்.
குடிஞை - பேராந்தை.
குடில் - குடிசை.
குடுமி - கதவைத்தாங்கிக்கீழே ஒரு பக்கத்தில் நிற்பதாயுள்ள ஒரு றுப்பு, பறவையின் சூட்டு.
குடைய - அலைத்துநீக்க.
குடைவுழி - குடைந்து விளையாடுகின்ற இடத்து.
குண்டிகை - கமண்டலம்.
குண்டு - ஆழம், தாழ்ச்சி.
குண்டுசுனை - ஆழமாகியசுனை.
குணபுலங்காவலர்மருமான் - சோ[ழன்.
குணஅது-கிழக்கிலுள்ளது.
குத்த - தின்ன.
குத்தி - ஊன்றி.
குத்துறுத்து - தைத்து.
குதட்டல் - மெல்லுதல்.
குந்தம் - எறிகோற்படை.
குப்பை - பொலி.
கும்பு - கூட்டம்.
குமரி - அழியாத்தன்மை.
குய் - தாளிப்பு.
குயம் - அரிவாள்.
குயின்ற - பண்ணின.
குயின்றன்ன - திறந்தாலொத்த.
குயினர் - துளையிடுவார்.
குரங்கள் - குளம்புகள்.
குரம்பை - குடில்.
குரல் - ஓசை, குரலென்னும்நரம்பு, கொத்து, பாட்டு, மிடறு.
குரவம் - குராமரம்.
குரவை - ஒருகூத்து.
குரால் - கூகையின்பேடு.
குரிசில் - தலைவன்.
குரீஇப்பூளை - சிறுபூளை.
குரு - நிறம்.
குருகிலை - முருக்கிலை.
குருகு-குருக்கத்தி, குருகென்னும் பறவை, முள்ளு முருங்கைமரம்.
குருசில் - உபகாரி, தலைவன்.
குருசிலர் - தலைவர்.
குரும்பி - புற்றாம் பழஞ்சோறு.
குருளை - குட்டி.
குரூஉ - நிறம்.
குரை - ஆரவாரம்.
குல்லை - கஞ்சா.
குலவுதல் - பிணைதல்.
குலை-காய்க்கொத்து, பூங்கொத்து.
குலைஇய - வளைத்த.
குவவு - குவிதல், திரட்சி.
குவளை - செங்கழுநீர், நீலமலர்.
குவைஇ - குவித்து, பரப்பி.
குவைஇய - திரட்டின.
குழல்-குழன்மீன், புல்லாங்குழல்.
குழவி - ஒருசார்விலங்கின் இளமைப்பெயர்.
குழற - கூப்பிட.
குழவித்தீநீர் - இளநீர்.

குழிசி - பானை.
குழிந்த - ஆழ்ந்த.
குழு - திரட்சி.
குழும்பு - குழி, திரள்.
குழும - முழங்க.
குழுமலை - கிளையையுடையமலை.
குழை - காதணி, தளிர்.
குளவி - காட்டுமல்லிகை, தாளி யென்னும்பூடு.
குளித்தல் - மறைதல்.
குளிர் - அரிவாள், கிளிகடிகருவி.
குளிரி - குளிர்.
குற்றி - கட்டை.
குற்று - குறைத்து.
குறள் - சிறுமை.
குறிஞ்சி - குறிஞ்சிப்பண்.
குறுதல் - தானியங்களை உரலிற் குத்துதல்.
குறுங்தொழுவர் - குற்றேவல்வினை
குறுநர் - பறிப்பார். [ஞர்.
குறுநறுங்கண்ணி - குன்றிப்பூ.
குறும்பு - அரண், வலி.
குறும்பொறி - உதரபந்தம்.
குறை - தசை.
குறைஇய - அறுத்த.
குறைய - துணிய.
குறைவில் - இந்திரவில்.
கூகை - கோட்டான்.
கூட்டு - கொள்ளை. [டுண்ணும்.
கூட்டுண்ணும் - கொள்ளைகொண்
கூடல் - சங்கமுகம், மதுரை.
கூடு - நெற்கூடு.
கூப்பிடு - கூப்பிடுதூரம்.
கூம்ப - மனவெழுச்சிகுறைய.
கூம்பு - குவிதல், பாய்மரம்.
கூம்புவிட - தளையவிழ.
கூர்ந்த - மிகுந்த.
கூர - குளிர்ச்சிமிக, குன்றுக்க.
கூரை - இறப்பு.
கூலம் - பண்டம்.
கூவல் - கிணறு.
கூவியர் - அப்பவாணிகர்.
கூவிரம் - கூவிரப்பூ.
கூவை - கூவைக்கிழங்கு, திரள்.

கூழ் - சோறு, நெல்முதலிய உண வுப்பொருள்கள், நெல்லுமரிசியு ம், பாற்சோறு.
கூளி - ஆண்பேய்.
கூளியர் - சேவித்துநிற்பார், நாடு காக்கும்வேடர், பூதங்கள், பேய் கள், வேட்டுவர்.
கெண்டி - அறுத்துத்தின்று.
கெழீஇ - உறவுகொண்டு, முற்றி.
கெழு : பொருந்துதலை உணர்த்து ம் ஒருசாரியை.
கெழுமி - பொருந்தி.
கெழுமுதல் - முற்றுதல்.
கேட்டிசின் - கேட்பாயாக.
கேணி - சிறியகுளம்.
கேழ் - நிறம்.
கேள் - உறவு.
கேள்வி - இசை, மந்திரம், யாழ்.
கேளிர் - நட்டார்.
கை - வண்டியின் ஒருறுப்பு, ஒழுக் கம், ஒழுங்கு, கைத்தொழில், செயல், வீட்டின் ஒருறுப்பு.
கைஇ - கோலஞ்செய்து.
கைகவிதேறல் - கையைக்கவித்தற் குக் காரணமான கள்.
கைசெய்தல் - புனைதல்.
கைதொழுதல் - கையைத் தலைமே
கைப்ப - செலுத்த. [லேவைத்தல்.
கையற்று - வினையொழிந்து.
கையெறிதல் - கையைத்தட்டல்.
கொலேறேர்=கொல்தேர்- காலசக்
கொக்கு - மாமரம். [கரம்.
கொகுடி - ஒருவகைமுல்லை.
கொங்கு - தாது, தேன்.
கொங்குகவர்சேவல் - வண்டு.
கொட்கும் - சுழன்றுதிரியும்.
கொட்டம் - கொட்டை, நூற்கின்ற
கொட்டி - அப்பி. [கொட்டை.
கொட்டை - திரளமுடிந்தமுடி, து
கொடி - ஒழுங்கு. [ம்பு.
கொடிறு - ஒருவகைக்குறடு.
கொடுங்காய் - வளைந்தகாய்.
கொடுஞ்சி - தாமரைப்பூவாகப் ப ண்ணித் தேர்த்தட்டின்முன்னே

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS

நடுவது.
கொடுத்தன்று - கொடுத்தது.
கொடுந்தாள் - வளைந்தகால்.
கொடுமார் - கொடுத்தற்கு.
கொடுவாள் - வளைந்த அரிவாள்.
கொண்டி - உணவு, கொள்ளை, வி
கொண்மர் - கொள்வார். [லை.
கொண்மார் - கொள்ளுதற்கு.
கொப்பூழ் - உந்தியென்னுமுறுப்பு.
கொம்மை - பெருமை.
கொல்பு - முறித்து. [கின்றவன்.
கொல்லன் - கொற்றொழில் செய்
கொலைஇய - கொல்லுதலைச்செய்த.
கொழித்தல் - தெள்ளுதல்.
கொழிப்ப - மேலேயாக.
கொழியா - தெள்ளி.
கொழு - உழுங்கருவி.
கொழுக்க - தழைப்ப.
கொழுதி - பறித்து.
கொழுநிழல் - குளிர்ந்தநிழல்.
கொழும்பதி - செல்வத்தையுடைய
கொழுமை - அழகு. [ஊர்.
கொள்கை - கற்பு, கோட்பாடு, வி
கொள்ளி - நெருப்பு. [ரதம்.
கொள்ளை - விலை.
கொளீஇ - ஏற்றி, கொளுத்தி.
கொளுத்தி - கொள்ளச்செய்து.
கொளை - பாட்டு. [ஒருபட்டினம்.
கொற்கை - பாண்டியனுக்குரிய
கொற்றவன் - வெற்றியை யுடைய
கொற்றவை - வனதுர்க்கை. [வன்.
கொன் - பெரிது.
கொன்று - வெட்டி.
கோங்கு - கோங்கமரம். [வளைவு.
கோட்டம் - ஒருவகைநீர்நிலை, கரை,
கோடல் - வெண்கோடற்பூ.
கோடியர் - கூத்தர்.
கோடு - ஊதுகொம்பு, கரை, சங்கு,
மரக்கொம்பு, மேட்டுநிலம், வளை
வு, விலங்கின்கொம்பு, வீணைத்
கோடை - காற்று. [தண்டு.
கோணம் - தோட்டி.
கோதை - சேரன், மாலை.
கோல் - திரட்சி.

கோலி - வளைத்து.
கோவம் - இந்திரகோபப்பூச்சி.
கோள் - குலை, கொண்டது, கொ
ள்ளுதல், செருகுதல், தழுவல்,
பாய்தல்.
கோளி - பூவாமற்காய்க்கும் மரம்.
கோன் - தலைவன்.
கௌவை - எள்ளிளங்காய்.
சதுக்கம் - நாற்சந்தி.
சந்து - பலவழிகளுங்கூடினசந்தி.
சமம் - முன்படை, நடுவுநிலைமை,
சலம் - மாறுபாடு. [போர்.
சவட்டி - மென்று.
சாஅய் - இளைத்து, நுணுகி.
சாடு - சகடம்.
சாணம் - தழும்பு.
சாத்து - திரள்.
சாதி - திரள்.
சாந்து - சந்தனக்குழம்பு, சுண்ணம்.
சாபம் - வில்.
சாம்பும் - வாடும்.
சாய் - ஒருவகைக் கோரை, பனஞ்
சாயல் - மென்மை. [செறும்பு.
சாரல் - பக்கமலை.
சால்பு - அமைதி.
சாலிநெல் - செந்நெல்.
சாவகர் - விரதங்கொண்டோர்.
சாவம் - வில்.
சாற்றி - நிறைத்து.
சாறு - விழா.
சான்ம் - அமையும்.
சான்ற - அமைந்த.
சான்றோர் - அறிவுடையோர்.
சிதர் - சிச்சிலிப்பறவை, சிந்துதல்,
துவலை, வண்டு.
சிதர்வை - சிதரினசீரை.
சிதரல் - சிதறுதல்.
சிதல் - கறையான்.
சிதறி - பலவாகக்கொடுத்து.
சிதறும் - எல்லாருக்குங் கொடுக்
சிதார் - சீலை, துணி. [கும்.
சிந்துவாரம் - கருநொச்சிமரம்.
சிமிலி - உறி.
சிமையம் (சிமயம்) - உச்சி, சிக

ரம், மலை, மலையுச்சி.
சிரல் - மீன்கொத்திக் குருவி.
சிரறியவன் - கோபித்தவன்.
சில்காற்று - தென்றற்காற்று.
சில்பதவுணவு - உப்பு.
சில்பலி - சிறுபலி.
சிலதர் - தொழில்செய்வார்.
சிலம்பி - சிலந்தி. [மலைப்பக்கம்.
சிலம்பு - ஓசை, மகளிர் காலணி,
சிலைக்கும் - ஆரவாரிக்கும்.
சிலைப்ப - முழங்க.
சிவணி - பொருந்தி.
சிற்றினம் - அறிவும் ஒழுக்கமுமில்லாத மாக்களின்திரள்.
சிறத்தல் - மிகுதல்.
சிறப்பு - தலைமை.
சிறுகுடி - சிறியவூர்.
சிறுகுழை - தாளுருவி. [டிப்பூ.
சிறுசெங்குரலி - கருந்தாமக் கொ
சிறுபசுமஞ்சள் - மஞ்சளில் ஒரு சாதி விசேடம்.
சிறுபுறம் - சிறியமுதுகு.
சிறுமாரோடம் - செங்கருங்காலி.
சிறுமை - நோய். [கம், வரவு
சிறை - அறை, கரை, சிறகு, பக்
சின் : ஓரிடைச்சொல்.
சினம் - கோபத்தின் பின்னுகச் சிறிது பொழுது நிற்பது.
சினை - கருவு, மரக்கொம்பு, சிறிய
சீக்கும் - துராலைவாரும். [கொம்பு.
சீப்ப - பெருக்கிப்போகட.
சீர் - அழகு, ஒருவகைத்தாளம், கனம், காவுமரம், தலைமை, தாள வறுதி, புகழ். [வுரி.
சீரை - கிழிந்த கந்தைத்துணி, மர
சூட்டல் - நன்றென்று மதித்தல்.
சுட்டிய - கருதிவைத்த.
சுட்டினும் - நினைப்பினும்.
சுடர் - ஒளி, கிரணம், ஞாயிறு, நெருப்பு, விளக்கின்கொழுந்து.
சுடுமண் - செங்கல். [விளக்கு,
சுண்ணம் - சுண்ணப்பொடி.
சுதை - சுண்ணச் சாந்து.
சும்மை - ஓசை.
சுமடு - சும்மாடு.
சுரக்கும் - மாறுமற்கொடுக்கும்.
சுரம் - அருநிலம், காடு.
சுரி - முறுக்கு.
சுரிகை-உடைவாள்.
சுரிமுகிழ் - முறுக்குண்ட அரும்பு.
சுரை - குழைச்சு.
சுவல் - கழுத்து, தோட்கட்டு,
சுள்ளி-மராமரப்பூ. [மேட்டுநிலம்.
சுற - சுறுமீன். [கோலம்.
சுறவுவாய் - மகரவாயாகிய தலைக்
சுனை - மலையிலுள்ள நீர்நிலை.
சூட்டு - வண்டிஉருளையின் விளிம்பில் வைத்த வளைந்தமரம், சூட்டிறைச்ச, மதிலுறுப்புக்களுள் ஒன்று. [சூடுதல், நெற்சூடு.
சூடு - சுடப்பட்டதசை, சுடுதல,
சூதர் - நின்றேத்துவார்.
சூர் - கொடுந்தெய்வம், கொடுமை, தெய்வம்.
சூர்த்த - கொடுமைசெய்த.
சூர்த்தம் - நடுக்கம்.
சூர்ப்பு - கொடுந்தொழில்.
சூர்முதல் - சூரபன்மாவாகிய தலைவன். [பிரம்பு.
சூரல்-சூரற்கொடி, சூரைக்கொடி,
சூல் - கருப்பம், முட்டை.
சூழ்கோடை - சூறுவளிக்காற்று.
சூழ்ச்சி - நினைவு.
சூழ்ந்து - ஆராய்ந்து, செய்து.
சூழி - முகபடாம்.
சேகில் - தோள்.
செகுத்தல் - போக்கிவிடுதல்.
செங்கொடுவேரி - செங்கொடுவே
செச்சை - வெட்சி. [ரிப்பூ.
செத்து - அறிந்து, ஒத்து, கருதி.
செதுக்கு - பூவாடல், வாடல்.
செப்பம் - செம்மை, செவ்வியவழி,
செப்பும் - பாடும். [வழி.
செம்மல் - சாதிக்கொடி, தலைமை, பூவாடல்.
செம்மை - தலைமை, நடுவுநிலைமை.
செய் - செய்கை.
செய்தி - தொழில்கள்.

செய்யார் - ஏவல் செய்யாதவர், பகைவர்.
செய்யோள் - சிவந்த நிறத்தை யுடையவள்.
செயலை - அசோகமரம்.
செயிர்த்தநோக்கம்- வருத்தத்தைச் செய்த பார்வை.
செயிர்த்து - குற்றத்தைச் செய்து.
செரீஇ - செருகி.
செருக்கி - கலித்து, மயங்கி.
செருக்கு - மகிழ்ச்சி.
செருந்தி - ஒருமரம், நெட்டிக் கோரை, வாட்கோரை.
செருவிளை - வெண்காக்கணம்பூ.
செல் - இடி.
செல்லா - கெடாத.
செல்லாநல்லிசை - பிறரிடத்து நில் லாமற்போகின்ற புகழ்.
செலல் - செல்லுதல்.
செலவு - ஓட்டம்.
செவ்வரக்கு - சாதிலிங்கம்.
செவ்வழி - ஒருபண்.
செவ்வி - காலம், பருவம்.
செழுமை - வளமை.
செற்றை - சிறுதூறு.
செறுது - தகையாமல்.
செறித்து - அடக்கி.
செறு-பாத்தி, வயல்.
செறுநர் - அழித்தற்குரியார், செறப்படுவார்.
சென்னியம் - பாணச்சாதியேம்.
சேஎய் - முருகன்.
சேக்கும்-கிடக்கும்.
சேக்கை - தங்குமிடம், படுக்கை, பறவைக்கூடு.
சேடல் - பவழக்கான்மல்லிகை.
சேண் - உச்சி, தூரியநிலம், பரண்.
சேண்புலம் - தூரியநிலம்.
சேணோன் - ஆகாயத்திருப்போன், இழிகுலத்தோன், மலைமிசை யுறையுங்குறவன்.
சேப்ப - தங்க.
சேப்பின் - தங்கின்.
சேமம் - காவல்.
சேய் - செய்யவனென்பதன் விகாரம்; முருகக்கடவுள்.
சேய்த்து- தூரியஇடத்திலுள்ளது.
சேய்நிலம் - தூரியநிலம்.
சேயளை - நெடிய குகை.
சேர்ந்து - திரண்டு.
சேர்பு - சேர்ந்து.
சேரி - தெரு.
சேவல்-ஆண்கோழி, ஆண்பறவை, ஆண்வண்டு.
சேறு - இனிமை, களி, சாறு, செறிந்த நீர், தேன், பாகு, மண்
சோலித்தல் - உரித்தல்.
சொறியும் - தினவாற்றேய்க்கும்.
சொன்றி - சோறு.
சோணாடு - சோழநாடு.
ஞமலி - நாய்
ஞரல - முழங்க.
ஞாங்கர் - மேல்.
ஞாண் - கயிறு.
ஞாயில் - மதிற்சூட்டு.
ஞாழல் - புலிநகக்கொன்றை.
ஞெகிழி - கடைக்கொள்ளி, தீக்கடைகோல், நெகிழ்ந்து.
ஞெமன்கோல் - துலாக்கோல்.
ஞெமிர்ந்து - பரந்து.
ஞெரேரென - கடுக.
ஞெலிகோல் - தீக்கடைகோல், படுத்தகோல்.
தக - தக்கிருக்கும்படி, பொருந்த.
தகடு - இதழ், புறவிதழ்.
தகர் - ஆட்டுக்கிடாய், கிடாய், மேட்டுநிலம்,வருடைமான் கிடாய்.
தகரம் - மயிர்ச்சந்தனம்.
தகை - அழகு, தகுதிப்பாடு,மாலை.
தகைதல் - உள்ளே அடக்குதல்.
தகைப்பு - கட்டிடம்.
தகையோன் - அழகையுடையவன்.
தட்கும் - தங்கும்.
தட்ட - தடுத்துக்கொண்ட.
தட்டம் - கச்சு.
தட்டை - கரடிகைப்பறை, கிளி முதலியவற்றையோட்டுங்கருவி.
தட - பெருமை, வளைவு.
தடவு - தூபமுட்டி.
தடாரி - உடுக்கை.
தடி - தசை, தண்டு.
தடைஇ - தடவி.
தடைஇய - திரண்ட.

தடையா - தடையில்லாத.
தண்டலை - பூந்தோட்டம், மரச்
தண்டா - அமையாத. [சோலை.
தண்டி - பலகால் அலைத்து.
தண்டு - தடி.
தண்ணுமை - மத்தளம்.
தண்பணியம் - இழிந்தபண்டம்.
தணக்கம் - தணக்கமரம்.
தணப்ப - போக.
தணிமார் - ஆற்றுதற்கு.
தத்தி - கடந்து.
தத்துற்று - குதித்து, தத்துதலை
யுற்று, மேலேகொண்டு.
ததர் - கொத்து, செறிவு.
ததைந்த - நெருங்கின.
தப்பல் - கொல்லுதல்.
தபுதல் - கெடுதல்.
தம் - தாரும்.
தம்மின் - கொணர்மின்.
தயக்கற - துளக்கமற.
தயங்குதல் - அசைதல்.
தரத்தர - மேன்மேலே தர.
தராய் - மேட்டுநிலம்.
தரீஇ - தந்து.
தருநர் - கொண்டுவந்திடுவார்.
தருநன் - தருபவன். [ல்.
தருமணல்-கொண்டுவந்திட்டமண
தலை - இடம். [பெய்த.
தலைஇய - சொரிந்த, தழைத்த,
தலைத்தந்து - முதலிற்கொடுத்து.
தலைநாள் - இளவேனிற்காலந்தொ
டங்குகின்றநாள், முதல்நாள்.
தலைப்பெயல் - கார்காலத்து முதற்
தலையும் - பெய்யும். [பெயல்.
தலைவாய் - வாய்த்தலை, வாய்க்கா
லின் தலைப்பு.
தவ்வென்று - தவ்வென்னுமோசை
தவ - மிக. [ப்பட்டு.
தவா - கெடாத.
தழல் - கையாற்சுற்றினகாலத்துத்
தன்னிடத்துப் பிறக்கும் ஓசை
யாற் கிளிமுதலியவற்றை ஓட்டு
தழால் - தழுவுதல். [ங் கருவி.
தழீஇ - உள்ளடக்கிக்கொண்டு.

தழீஇய - சூழ்ந்த.
தழூஉ - குரவைக்கூத்து, தழுவி.
தளர்க்கும் - ஓடப்பண்ணும், கெடு
தளராத - அசையாத. [க்கும்.
தளவம் (தளவு) - செம்முல்லை.
தளி - துளி.
தறி-முளைக்கோல், யானைத்தம்பம்.
தறுகண் - கடுகக்கொல்லுதல்.
தா - அழிவு, பரப்பு, வருத்தம்.
தாஅய் - பரந்து.
தாக்கல்-எதிரேசெல்லல், பாய்தல்.
தாஅய - பரந்த.
தாக்குறுதல் - எதிர்ப்படுதல்.
தாங்குநர் - பாதுகாப்பார்.
தாசினை - பரந்தகொம்பு.
தாடி - வீசை.
தாது - தேன், பூந்தாது, நீறு.
தாம்பு -நெடுங்கயிறு.
தாய - தாவின.
தாயம் - உரிமை, நாடு.
தார் - தூசிப்படை,மார்பின்மாலை.
தாரம் - அரும்பண்டம், பண்டம்,
தாவு - ஓட்டம். [பலபண்டம்.
தாழ்கா- இளமரச்சோலை.
தாழ்காது - வடிந்தசெவி.
தாழ்பு - தங்கி.
தாழ - தங்க.
தாழை - தெங்கு.
தாள் - முயற்சி.
தாளி - தகளி.
தாறு - குத்துக்கோல்.
தானை - மேலாடை, படை.
திகழ்தல் - உள்ளடக்கிக்கொள்ளு
திட்டை - மேடு. [தல்.
திணை - ஒழுக்கம், குலம், திண்ணை,
திதலை - தேமல். [நிலம்.
திமில் - மீன்படகு.
திரங்குதல் - உலர்தல்.
திரள்பு - திரண்டு.
திரி - முறுக்கு, விளக்கின்திரி.
திரிமரம் - திரிகை.
திரு - அமைதி. அழகு, செல்வம்,
திருகிய - முறுகிய. [திருமகள்.
திருத்தி - கட்டி, நிலைபெறுத்தி.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

திருந்தடி - பிறக்கிடாத அடி.
திருந்து தொடை - தப்பாத தொடை.
தில்லை - ஒரு மரம்.
திலகம் - மஞ்சாடிமரம்.
திவவு - யாழின்வலிக்கட்டு, வார்க்கட்டு.
திளைப்ப - அசைய.
திளையாமை - நெருங்காமை.
திற்றி - தின்னப்படுவது.
திறம் - கூறுபாடு.
திறல் - வலி.
திறன் - வழி.
திறை - கப்பம்.
தின்ற - கிடந்துதழும்பிருந்த.
தீது - குற்றம்.
தீம்புழல் - இருப்பைப்பூ, இனியபண்ணியாரம்.
தீர்வை - கீரிப்பிள்ளை.
தீற்றி - தின்னப்பண்ணி.
துகள் - குற்றம், தூளி.
துகிர் - பவளம்.
துகில் - வெள்ளிய ஆடை, தலைப்பாகை.
துகின்முடித்து - மயிர்க்கட்டுக்கட்டி.
துச்சில் - குடியிருப்பு.
துஞ்சுதல் - கிடத்தல், தங்குதல், துயில்கொள்ளுதல்.
துடவை - தோட்டம்.
துடி - உடுக்கை.
துடுப்பு - காந்தட்பூவின்மடல்.
துணங்கை - ஒருவகைக்கூத்து.
துணர் - கொத்து.
துணரிய - குலைகொண்ட.
துணி - தெளிவு.
துணிந்த - தெளிந்த.
துணிநீர் - தெளிந்தநீர்.
துணிமழை - தெளிந்தமேகம்.
துணியல் - துண்டம்.
துணை - இரண்டு, இனம், உதவி, ஒப்பு, கணவன், பேடு, மனைவி.
துணைப்ப - மாலைகட்ட.
துணையற அறுத்து - இணையொக்க நறுக்கி.
துணையோர் - ஆயத்தோர்.
துத்தி - தேமல், பாம்பின் படப்பொறி.
துப்பு - வலி.
துமித்து - திறந்து, வெட்டி.
துமிபு - அறுத்து.

துய் - ஆர்க்கு, பஞ்சுநுனைபோன்றிருக்கும் பொருள்.
துய்ம்மயிர் - மெல்லியதலைமயிர்.
துயல்கழை - அசைகின்ற மூங்கில்.
துயல்வரல் - அசைதல், பெயர்தல்.
துயலல் - ஆடுதல்.
துயில்மடிந்தன்ன - உறக்கத்தே கிடந்தாலொத்த.
துரப்ப - அடிப்ப.
துரப்பு - முடுக்குதல்.
துராய் - அறுகம்புல்லாற்றிரித்த பழுதை.
துரு - செம்மறியாடு.
துருத்தி - ஆற்றிடைக்குறை.
துரும்பு - கூளம்.
துருவை - செம்மறிக்கிடாய்.
துவர் - செம்மைநிறம்.
துவர - மிக, முற்ற.
துவரி - ஈரத்தைப்புலர்த்தி.
துவற்றல் - தூவுதல்.
துவன்றி குவிந்து, நிறைந்திருந்து.
துவைக்கும் - ஒலிக்கும்.
துவைத்தல் - ஆரவாரித்தல்.
துவைப்பு - ஆரவாரம்.
துழவை - துழாவியட்டகூழ்.
துழைஇ - துழாவி.
துளங்குதல் - அசைதல்.
துளர் களைக்கொட்டு, மண்வெட்டி.
துளிநசைப்புள் - வானம்பாடி.
துற்றிய - தின்ற.
துறப்ப - பயன்படாமற்கிடப்ப.
துறுதல் - நெருங்குதல்.
துறை - கூறுபாடு.
துன்னல் - தைத்தல்.
துனி - துயரம், வெறுப்பு.
துனைஇய - விரைந்த.
துனைசெலல் - விரைந்தசெலவு.
தூ - தசை, தூய்மை, வலி.
தூக்கி - சீர்தூக்கிப்பார்த்து.
தூங்க - ஆட.
தூங்கநாற்றி - அசையத்தூக்கி.
தூங்கல் - துயில்மயக்கம்.
தூங்கியவர் - ஆடியமகளிர்.
தூது - பருக்கைக்கல்.
தூதுணம்புறவு - கல்லைத்தின்னும் அழகிய புறவு.

தூம்பு - உள்ளுப்பொய்யானது, துளை, நெடுவங்கியம், பெருவங்
தூய் - சிதறி. [கியம்.
தூவல் - துவலை, மழை. [மயிர்.
தூவி - அன்னப்பறவையின் சூட்டு,
தேய்வவுத்தி - சீதேவியென்னுந்த
தெரியல் - மாலை. [லைக்கோலம்.
தெருமரல் - மனக்கவற்சி.
தெவ்வும் - முகக்கும்.
தெவிட்ட - குதட்ட.
தெவிள - திரள.
தெழிப்ப - ஒலிப்ப.
தெள்விளி - தெளிந்த ஓசை, தெளி
தெற்றென - கடுக. [ந்த சொற்கள்.
தெறல் - அழித்தல், கோபித்தல்.
தெறூஅ - சுடாத.
தெறுதல் - கொல்லுதல்.
தெறுவின் - சுடுகையினாலே.
தெறூஉம் - சுடும்.
தென்வளி - தென்றல்.
தென்னவன் - இராவணன், பாண்
தேஎம் - திசை, நாடு. [டியன்.
தேம் - இனிமை, திசை, தேயம்,
தேம்ப - புலர. [நெய்.
தேம்பி - உலர்ந்து.
தேம்பும் - மெலியும்.
தேமா - பழத்தையுடைய மாமரம்.
தேய்த்த - அழித்த.
தேய்வை - சந்தனக்குழம்பு.
தேற்று - ஒருமரம்.
தேறல் - கட்டெளிவு. [ல், நெய்.
தேன் - ஒருவகைவண்டு, தேனிறு
தைஇய - இட்ட, இழைத்த, ஊன்
தொகைஇ - கூட்டி. [றிய, செய்த.
தொட்ட - துளையிட்ட.
தொட்டு - கல்வி, தோண்டி, தோ
தொடர் - சங்கிலி. [ண்டுதல்.
தொடர்தல் - ஒழுகுதல்.
தொடலை - தூக்கு.
தொடி - பூண், வீரவளை.
தொடுதோல் - செருப்பு.
தொடுப்பு - விதைப்பு. [பு, படி.
தொடை - ஏணிப்படி, கட்டு, நரம்
தொடையல் - தொடர்ச்சி.

தொண்டகம் - குறிஞ்சிநிலத்திற்கு
தொண்டு - ஒன்பது. [ரிய சிறுபறை.
தொண்டையோர் - ஆதொண்டைக் கொடியைச் சூடினோர்.
தொத்து - கொத்து.
தொய்படாமல் - நனையாமல்.
தொய்யா - கெடாத.
தொய்யாது - உழாது.
தொய்யில் - எழுதுங்குழம்பு, தொ
தொலைஇ - அழித்து. [ய்யிற்கொடி.
தொலைச்சி - போக்கி.
தொலைச்சிய - கொன்ற.
தொலைபு - கெடுதல்.
தொழில் - ஏவல்.
தொழுதி - இனம், திரள்.
தொழுவர் - தொழில் செய்வார்.
தொளி - சேறு.
தொன்று - பழமை.
தோட்ட - துளையிட்ட.
தோட்டி - கதவு. [தழ்.
தோடு - இலை, ஓலை, திரட்சி, பூவி
தோண்டி - முகந்துகொண்டு.
தோப்பி - நெல்லாற்செய்த கள்.
தோய் - உவமவுருபு.
தோல் - பக்கரை, யானை.
தோலியற்கருவி - மத்தளம்.
தோன்றல் - உயர்ச்சி, தோற்றம்.
தோன்றல - தோற்றத்தையுடைய ன. [யவர்.
தோன்றலர் - தோற்றத்தை யுடை
தோன்றி - செங்காந்தள்.
நகர் - ஊர், கோயில், வீடு.
நகரம் - கோயில்.
நகாஅர் - பல்.
நகுதல் - மலர்தல்.
நகுவனர் - மகிழ்ந்தனர்.
நகை - ஒளி, மகிழ்ச்சி, விளக்கம்.
நசைஇ - விரும்பி.
நசையுநர் - நச்சிவந்தார்.
நசையேருழவர் - பரிசிலர்.
நடவை - வழி.
நடு - இடை, நடுவுநிலை.
நடுக்கு - வருத்தம்.
நடுநாள் - நடுயாமம்.

நடை - அடி, ஒழுக்கம், தொழில்.
நடைப்பரிகாரம் - வாழ்க்கைக்கு வேண்டிய பண்டங்கள்.
நண்ணார் - பகைவர்.
நணியது - அருகிலுள்ளது.
நந்த - பெருக.
நந்தி - நந்தியாவட்டம், மிக்கு.
நந்திய - தழைத்த.
நந்துதல்-அவிதல்.
நந்துதொறும்மாட்ட - அவியுந்தோறும்கொளுத்த.
நயந்தனிர் - விரும்பினிர்.
நயந்திசினோர் - விரும்பினவர்.
நயம் - இனிமை, விருப்பம்.
நயவர் - விரும்பிவந்தவர்.
நயன் - ஈரம்.
நரந்தம் - ஒருவகைப்புல், கத்தூரி, நாரத்தைமரம்.
நரல - கூப்பிட, முழங்க.
நரை - பெருமை, மயிரின் நரை, வெண்மை.
நல்கு - சொல்லுதல்.
நல்ல - உறுதிபயப்பன.
நல்லிது - நன்று.
நல்லேறு - எருமை.
நலம் - அழகு, அன்பு, செம்மைநிறம், நல்வினை.
நவிரம் - ஒருமலை.
நவிலுதல் - எப்பொழுதுங் கூறுதல், கூறியடிப்படுதல், பயிலுதல்.
நவிற்றல் - பயிற்றல்.
நள்ளி - ஒருவள்ளல்.
நள்ளிருணாறி - இருவாட்சிப்பூ (இருள்வாசி.)
நள்ளிருள் - செறிந்த இருள்.
நளி - செறிவு, பெருமை.
நற்கு - நன்கு.
நற்போர் - அறத்தாற்பொருகின்றபோர்.
நறவம் - நறைக்கொடி.
நறவு (நறா) - கள், தேன்.
நறவுநொடை - கள்விலை.
நறுங்காழ் - அகில்சந்தனம்முதலியன.
நறுங்குறடு - சந்தனம்.
நறை - தூபம், நறுநாற்றம், நறைக்கொடி.
நறைக்காய் - சாதிக்காய்.
நன்கு - நன்மை.
நன்பகல் - அடியொத்தகாலம், எப்பொருளையும் நுகர்தற்கு நன்றாகிய பகற்காலம்.
நன்பல - நன்றாகிய பலபொருள்கள்.
நன்மொழி - தேவபாணி, நல்லவார்த்தை.
நன்னர் - நன்மை.
நன்னன் - ஒருபகாரி.
நன - அகலம்.
நனை - அரும்பு, தோன்றிய.
நாகம் - ஒருமரம், சுரபுன்னை, நாகப்பாம்பு, யானை.
நாகு - இளமை.
நாஞ்சில் - கலப்பை.
நாட்காலம் - காலை.
நாட்டம் - கண்.
நாண் - கயிறு, நாணம்.
நாணு - நாண்.
நாம் - அச்சம்.
நால்கு - நான்கு.
நாழி - ஒருவகை முகத்தலளவைக்கருவி.
நாள் - காலை, விடியற்காலம்.
நாற்றி - தொங்கக்கட்டி.
நிமிர்தல் - நடத்தல், நுடங்குதல், பெருகுதல், மேனோக்குதல்.
நியமம் - கடைத்தெரு.
நிரல் - ஒத்தல்.
நிரவிய - ஒக்கமிதித்த.
நிரை - ஆட்டின்தொகுதி, ஒழுங்கு, கோபுரம், பசுத்திரள்.
நிலவு - நிலைபெறுதல்.
நிலை - இடம், கதவின்நிலை, தன்மை, நிற்றல்.
நிலைஇ - நிலைபெற்று.
நிலைஇயர் - நிலைபெறுவதாக.
நிலைமை - புகழ்.
நிவந்த - மேலான, வளர்ந்த.
நிழத்த - இல்லையாக்க, ஒய்ந்த.
நிழத்தலின் - நொக்கிவிடுகையினாலே.
நிழல் - அருள், ஒளி, நிறம்.
நிழன்ற - நிழல்செய்த.
நிற்றர - நிற்றலைச்செய்ய.
நிறம் - உயிர்நிலை.
நிறீஇ - நிறுத்தி.
நிறை - நிறுக்கப்பட்டது, பெருக்கு.
நின்றன்று - நின்றது.
நினைஇ - நினைந்து.
நினைவனள் - நினைந்தவளாகி.
நீடி - வளர்ந்து.

நீண்மொழி - வஞ்சினம்.
நீத்தம்(நீத்து) - பெருக்கு.
நீர் - ஒளி, நீர்மை.
நீரகம் - உலகு.
நீல் - நீலநிறம்.
நீலம் - குவளை, தருப்பை, நீலமணி.
நீவி - கடந்து, தடவி, துடைத்து.
நீவிய - வார்த்த.
நீறு - துகள், புழுதி.
நுகம் - கணையமரம், பாரம், வலி.
நுகர்கு - நுகர்வேன்.
நுடக்கிய - கழுவின.
நுடங்கிய - அசைந்த.
நுண்சேறு - சாதிலிங்கம்.
நுண்மை - மென்மை.
நுணங்கு - நுண்மை.
நுணவம் - நுணுமரம்.
நுதி - முனை.
நுரை - நீர்நுரை, வெண்ணெய்.
நுவணை - தினைமா.
நுவறிய - அராவின.
நுழை - சிறியவழி.
நுழைபு - நுழைதல். [மகள்.
நுளைமகள் - நுளைச்சாதியிற்பிறந்த
நுனை - முனை. [எணி.
நூலேணி - நூலாற் செய்யப்பட்ட
நூழில் - ஒருகொடி, கொடிப்பிண
க்கு, கொன்று குவித்தல்.
நூழிலாட்டு - கொன்றுகுவித்தல்.
நூற்றுவர் - துரியோதனனாதியர்.
நூறி - வெட்டி.
நூறு - சுண்ணம்பு, நீறு.
நூறை - நூற்றைக்கிழங்குக்கொடி,
நேகிழ - மெலிய. [மலங்கு,
நெடியோன் - திருமால், வடிம்பல
ம்பநின்றபாண்டியன்.
நெய் - தேன்.
நெய்தல் - இரங்கல், கருங்குவளை,
நெய்தற்பூ, நெய்தற்றிணை.
நெரிய - நெளிய.
நெல்லினூர் - சாலியூர்.
நெறி - அறல், நெறித்தல், வழி.
நேமி - உருளை.
நேர் - செவ்வை.
நேர்தல் - தீண்டுதல், பொருந்துத
நேர்ந்த - ஒத்த. [ல்.
நேர்பு - பொருந்தி.
நைப்ப - சுட, நையச்செய்ய.
நைவளம் - நட்டபாடையென்னும்
நொடிதல் - சொல்லுதல். [பண்.
நொடை - விலை.
நொய்ம்மை - கனமில்லாமை.
நோக்கம் - அறிவு, பார்வை.
நோக்கு - அழகு, அறிவு, பார்வை.
நோய் - பசியும்பிணியும், வருத்தம்.
நோன்மார் - நோற்கைக்கு.
நோன்மை - வலி.
நோனு - பொறுத.
நௌவி - நௌவிமான்.
பஃறி - ஓடம், படகு.
பகடு - எருது, எருமைக்கடா, பெ
பகர்தல் விற்றல். [ருமை.
பகர்நர் - விற்பவர்.
பகல் - உச்சிக்காலம், சூரியன், நு
கத்தடியிலுள்ள பகலாணி, பகு
பகன்றை - சிவதைக்கொடி.[த்தல்.
பச்சூன் - செவ்வியான இறைச்சி.
பச்சை - தோல்.
பசலை - வருத்தம்.
பசுங்கூட்டு - பசுமையானகலவை.
பசும்பதம் - விளைந்தநெல்முதலிய
பசும்பிடி - பச்சிலைக்கொடி. [ன.
பசும்பொன்-கிளிச்சிறையென்னும்
பசுமை-இளமை, செவ்வி. [பொன்.
பசை - பற்று.
பஞ்சி - பஞ்சு.
பட்டம் - இரும்புப்பட்டங்கள்.
பட்டினம் - கடற்கரையூர், காவிரி
ப்பூம்பட்டினம்.
பட - உண்டாக, ஒலிப்ப, படிய.
படப்பை - பக்கம், பூந்தோட்டம்.
படம் - சட்டை.
படர் - செலவு, நினைவு.
படர்குவிர் - நினைப்பீர்.
படர்ந்திகும் - நினைத்துச்செல்கின்
படலை - தழைமாலை. [றோம்.
படலைக்கண்ணி - கலம்பகமாகிய
மாலை, தழைவிரவினமாலை.

படாஅர் - சிறுதூறு.
படிக்கால் - ஏணி.
படியோர் - வணங்காதார்.
படிவம்-வழிபடுந்தெய்வம், விரதம்.
படின் - செல்லின்.
படு - மடு.
படுகண் - முழங்குங்கண்.
படுகர் - வழி. [தல்.
படுத்தல் - உண்டாக்குதல், வீழ்த்
படுதல் - உண்டாதல், ஒலித்தல்,
செல்லுதல், தாழ்தல், வீழ்தல்.
படுபு - விழுந்து.
படை - கற்படை, சேணம், சேனை.
பண்டம் - சரக்கு.
பண்ணி - சமைத்து. [ள்,பண்டம்.
பண்ணியம் - சோறு, நுகர்பொரு
பணவை - கிளை, பரண்.
பணித்து - ஏவல்கேட்கும்படிதாழ
பணிபு - பணிந்து. [ப் பண்ணி.
பணியம் (பண்ணியம்) - பண்டம்.
பணிலம் - சங்கு.
பணை - குதிரைப்பந்தி, பெருமை,
மருதநிலம், முரசு, மூங்கில், வய
பணைத்து - இடங்கொண்டு. [ல்.
பத்தர் (பத்தல்)-யாழின் ஒருறுப்பு.
பத்திரம் - ஒருவகைவாள்.
பதம் - உணவு, செவ்வி.
பதன் - காலம். [னும் வாத்தியம்.
பதலை - ஒரு கண்மாக்கிணை யென்
பதாகை - பெருங்கொடி.
பதி - ஊர், சேக்கை.
பயம் - பயன்.
பயம்பு - குழி, மட்டுக்குழி.
பயிர்தல் - அழைத்தல், ஒலித்தல்.
பயிற்ற - பலகாலும் எழுப்ப.
பயிற்றி - பலகாற்சொல்லி.
பயின்று - நெருங்கி.
பயினி - பயினிப்பூ.
பரதர் - செட்டிகள்.
பரதவர் - தென்றிசைக்கணுள்ள
குறுநிலமன்னர், நெய்தனில மா
பரம் - பாரம். [க்கள்.
பரல் - கப்பணமென்னும் ஆயுதம்,
சுக்கான்கல், பருக்கைக்கல்.

பரவி - வாழ்த்தி. [றுடை.
பராரை - பரிய அடி, பரியமேற்
பரி - குதிரை, செலவு, தரித்தல்.
பரிகாரம் - பொருள்கள்.
பரிசிலர் - பிறருடைய கையிலிருந்
தேற்ற பொருளால் வாழ்வோர்.
பரிதி - சூரியமண்டலம்.
பரிந்த - அறுத்த.
பரியரைபரியஅரை - பருத்ததாள்.
பருக்கை - சிறுகல்.
பருமம் - அரைப்பட்டிகை, ஒருவ
கைமேகலை, சேணம்,பதினெண்
கோவையாகிய மேகலை.
பரூஉக்குறை - பருத்ததசை.
பரூஉக்கை - வண்டியின் ஒருறுப்பு.
பரேரம்புழகு - செம்பூ, புனமுருங்
கை, மலையெருக்கு.
பரேரெறுழ் - பருத்த அழகியவலி.
பல்கதிர்மண்டிலம் - சூரியன்.
பல்காழ் - மேகலை.
பல்காற்பறவை - வண்டு. [யன்.
பல்சாலைமுதுகுடுமி - ஒரு பாண்டி
பலகை - கேடகம்.
பலாசம் (பலாசு) - புரசமரம்.
பலி - தேவருணவு.
பழனம் - மருதநிலம்.
பழிச்சுதல் - துதித்தல்.
பழு - பிசாசு.
பழுது - வறுமை.
பழுதுளி - பழுது.
பழுநிய - முற்றுப்பெற்ற.
பழுமரம் - ஆலமரம், பழுத்தமரம்.
பழுமிளகு - பழுத்தமிளகு.
பழையர் - கள்விற்பார்.
பழையோள் - துர்க்கை.
பள்ளி - இடம், இடைச்சேரி, துயி
பற்று - பசை. [ல், படுக்கை.
பறக்கல்லா - பறத்தலாற்றாத.
பறம்பு - பாரியென்னும் வள்ளலி
பறழ் - குட்டி. [ன்மலை.
பறி - மீனைவாரியெடுப்பதொரு
பறியா-வாங்கிப்போகட்டு. [கருவி.
பறை - ஒரு தோற் கருவி, சிறகு,
பறைதல் - தேய்தல். [பறத்தல்.

பனி - குளிர்ச்சி, நீர்.
பனிக்கும் - நடுங்கும்.
பனுவல் - எஃகுறு பஞ்சு.
பா - விரிந்த.
பாஅயன்ன - பரப்பினுலொத்த.
பாக்கம்- அரசனிருப்பு, கடற்கரை
யூர், பக்கத்திலுள்ள ஊர்.
பாகல் - பலா மரம், பாகற்கொடி.
பாகு - சர்க்கரைப் பாகு, பாக்கு
பாங்கர் - ஓமைமரம். [வெற்றிலை.
பாசடை - பசிய இலை.
பாட்டியர் - பாணிச்சியர்.
பாடி - உச்சரித்து, பாசறை.
பாடினி - பாணிச்சி.
பாடு - இடம், ஓசை, பெருமை.
பாண்டில் - நாரையெருது, வட்டக்
கட்டில், வட்டம், வண்டி, வெண்
கலத்தாளம்.
பாணி - காலம், தாளம், பாட்டு.
பாதிரி - ஒரு மரம்.
பாய்தல் - குதித்தல், பரத்தல்.
பாயம் - புணர்ச்சி, விருப்பம்.
பாயல் கொள்ளும் - துயில் கொள்
ளும்.
பார் - பாறை, வண்டியின் உறுப்பு.
பார்வல் - பகைவர்வருதலைப்பார்த்
தற்குரிய உயர்ச்சியையுடைய அ
ரண், பார்வை.
பாரம் - பருத்திச்செடி.
பாரி - ஒருவள்ளல்.
பாரித்தல் - பரப்புதல்.
பாரை - கடப்பாரை. [பால்.
பால் - பகுதி, பசு முதலியவற்றின்
பாலை - பாலைத்தன்மை, பாலைநில
ம், பாலைப்பண், பாலையாழ், பிரி
பிடகை - பூந்தட்டு. [வு, வெப்பம்.
பிடி - ஆசு, குசை, சொட்டையெ
ன்னும் ஆயுதம், பெண்யானை.
பிடித்த - சேர்க்கப்பட்ட. [மா.
பிண்டி - அசோகு, தானியங்களின்
பிண - நாய், பன்றி, புல்வாயென்
பவற்றின்பெண்.
பிணர் - சருச்சரை.
பிணவு - பெண், பெண்விலங்கு.

பிணி - கட்டு, காவல், சுருள், தளை.
பிணிமார் - சேர்த்தற்கு.
பிணிமுகம் - மயில், முருகவேளு
பிணை - பெண்மான். [டையயானை.
பிணைதல் - செறிதல்.
பிணையல் - பிணைத்தல்.
பித்திகம் - பிச்சி.
பித்தை - மயிர்.
பிதிர்ந்து - பிதிர்பட்டு.
பிதிர்வு - பிதிர்ச்சி. [தேனிறால்.
பிரசம் - ஒருவகைவண்டு, தேன்,
பிழா - தட்டுப்பிழாவென்னுங் கரு
பிழி - கள், தேன். [வி.
பிழைப்பு - கெடுதல்.
பிள்ளை - பறவைக்குஞ்சு.
பிளவை - பிளக்கப்பட்டது.
பிளிறி - முழக்கத்தையுண்டாக்கி.
பிறக்கி - அடுக்கி.
பிறக்கிடாத - பின்னிடாத.
பிறக்கு - கொண்டை, பின்.
பிறங்கடை - பின்னிடத்தோன்.
பிறங்குதல் - மிகுதல்.
பிறங்குமலை - பெரியமலை.
பிறழிய - முரிந்த.
பின் - குத்துதல், பின்னுதல்.
பின்றை - பின்பு.
பின்னு - பின்னினமயிர்.
பீரம் - பீர்க்கு.
புகர் - குற்றம், நிறம், புள்ளி.
புகல் - விருப்பம்.
புகல்வி - ஒருசார்விலங்கின் ஆண்.
புகல்வு - மனச்செருக்கு.
புகன்று - விரும்பி. [கமுகம்.
புகார் - காவிரிப்பூம்பட்டினம், சங்
புட்டில் - ஒருவகைப்பெட்டி, தக்
கோலத்தின் காய்.
புடை - பக்கம், புடைப்பு, முதுகு.
புடையூஉ - கொட்டி.
புண் அரிந்து - புண்ணும்படி வெடி
புணர்த்தல் - முடித்தல். [த்து.
புணர்ப்பு - கூட்டம்.
புணர்மார்- கூட்டுதற்கு, கூடுதற்கு.
புணரி - அலை, கடல்.
புணை - தெப்பம்.

புதல் - தூறு.
புதவம் - அறுகம்புல்.
புதவு - அறுகு, வாசல்.
புதை - அம்புக்கட்டு.
புதைத்த - மறைத்த.
புயல் - மழை.
புரட்டும் - உருட்டும்.
புரி - கயிறு, முறுக்கு, வடம், விரு
புரிசை - மதில். [ம்பிய.
புரிதல் - முறுக்குதல், விரும்புதல்.
புரை - உயர்ச்சி, வெளி.
புல்லுண - புல்லரிசியாலாகியஉண
புல்லென் - பொலிவழிந்த. [வு.
புலந்து - வருந்தி, வெறுத்து.
புலம் - அறிவு, இடம், திசை, நாடு,
விளைநிலம்.
புலம்ப - தனிப்ப, வருந்த.
புலம்பு - தனிமை, வருத்தம்.
புலமை - மெய்ஞ்ஞானம்.
புலர்தல் - உலர்தல்.
புலர்ந்து - முற்றி
புலரி - இரவு, விடியற்காலம்.
புலவர் - அறிவுடையோர். [கூறல்.
புலவு - புலால்நாற்றம், வெறுத்துக்
புலித்தொடர் - புலிச்சங்கிலி.
புழகு - மலையெருக்கு.
புழல் - உட்பொய்யா யிருத்தல், ப
ண்ணியாரம்.
புழல்வல்சி - உட்டுளையை யுடைய
சிற்றுண்டி (தேங்குழல்.)
புழற்காளாம்பி - உட்பொய்யாகிய
காளான்.
புழற்கோடு - உள்ளுப் பொய்யான
புழுக்கல் - சோறு. [கொம்பு.
புழுக்கு - கும்மாயம், பருப்புச்சோ
று, புழுங்கவெந்தது. [யில்.
புழை - சாளரம், சில்வழி, சிறுவா
புள் - கைவளை, நன்னிமித்தம், பற
புளி - தித்திப்பு, புளிங்கறி. [வை.
புளிங்கூழ் - புளிகலந்த உணவு.
புறக்கொடாது - முதுகிடாது.
புறங்காத்தல் - பாதுகாத்தல்.
புறந்தரும் - பாதுகாக்கும்.
புறம் - இடம், முதுகு.
புறவு - ஒருபறவை, காடு, புறம்பு.
புன்கண் - துயர்.
புன்கு - ஒருமரம்.
புன்புறம் - புற்கென்றமுதுகு.
புன்மை - வருத்தம்.
புன்றலை - சிவந்ததலை.
புனலிப்பூ - மோசி மல்லிகைப்பூ.
புனிறு - ஈன்றணிமை.
புனைதல் - கைசெய்தல்.
புனைந்து - சித்திரம் எழுதி.
பூ - புகர், பூத்தொழில், பொலிவு,
பூசல் - ஆரவாரம். [மலர்.
பூட்கை - மேற்கோள், வலி.
பூப்ப - பொலிவுபெற.
பூரிமம் - சாந்திட்டதொட்டி, வீட்
பூழி - புழுதி, பொடி. [டுவரிசை.
பெட்டவை - விரும்பியவை.
பெட்டா - பேணாத, பேணி.
பெட்டாங்கு - விரும்பினாற்போல.
பெண்ணைப்பிழி - பனங்கள்.
பெய்ம்மார் - அணிய.
பெயர் - பொருள், வஞ்சினம்.
பெயர்த்தல் - மாறிவாசித்தல், வா
ங்கிக்கோடல்.
பெயர்தல் - கைவிட்டுப்போதல்.
பெயர்பு - உலாவி. [ன.
பெயரிய - பெயர்பெற்ற, போக்கி
பெயல் - நீர், பெய்தல், மழை.
பெருக்கு - வெள்ளம். [டையவன்.
பெருந்தகை - பெரிய தகுதிப்பாடு
பெரும்பெயர் - பெரும்பொருள்.
பெருமகன் - தலைவன்.
பேஎம் - அச்சம்.
பேகன் - ஒருவள்ளல்.
பேணார் - அஞ்சார், பகைவர்.
பேணி - வழிபட்டு.
பேழ் - பெருமை.
பை - பசுமை, படம்.
பைக்கலம் - பச்சைக்குப்பிகள்.
பைங்கொடி - பச்சிலைக்கொடி.
பைஞ்சேறு - ஆப்பி.
பைஞ்ஞிலம் - மக்கட்டொகுதி.
பைத்த - சோபித்த, படம்விரித்த.
பைதீர் - பசுமையற்ற.

பைது - ஈரம், பசுமை.
பையய - மெல்ல.
பைம்புதல் - பசியதூறு.
போகுட்டு - கொட்டை.
பொங்கர் - மரக்கொம்பு.
பொத்திய - பொதிந்த.
பொதி - குலை, நெல், முளை, பொதிதல்.
பொதியில் - அம்பலம், பொதியமலை.
பொதுத்தல் - துளைத்தல்
பொதும்பர் - இளமரச்சோலை.
பொதும்பு - குகை.
பொதுவர் - இடையர்.
பொதுளிய - தழைத்த.
பொய்கை - மானிடராக்காத நீர்நிலை.
பொய்தல் - விளையாடுதல்.
பொரீஇ - ஒப்பித்துப்பார்த்து.
பொருத்துறு - இசைத்தலுற்ற.
பொருத - சேர்த்த, வெட்டின.
பொருந-ஒப்பற்றவனே, கூத்தனே.
பொருநர் - தடாரிப்பறை வாசிப்போர், வீரர்.
பொருப்பு - பொதியில்மலை
பொல்லம்பொத்திய - இரண்டுதலையுங் கூட்டித்தைத்த.
பொலந்தார் - பொன்னுற் செய்த மார்பின்மாலை.
பொலி - தானியக்குவியல்.
பொறி - அடையாளம், ஐம்பொறிகள், ஒளி, சீதேவி, திரட்சி, பீலி.
பொறித்த - எழுதிய, வைத்த.
பொறை - சுமை, மலை.
பொறையன் - சேரன்.
பொன் - தங்கம், திருமகள்.
பொன்காண்கட்டளை - பொன்னுரைகல்.
பொன்ற-முழுதுங் கெட்டுப்போக
போக்கி - விரிவுறச்செய்து.
போக்கு - குற்றம், போதல்.
போகா - முற்றுப்பெற்று.
போகிய - மிகுந்த, முற்றிய.
போங்கம் - மஞ்சாடிமரம்.
போது - அலரும் பருவத்தரும்பு, பொழுது.
போந்தை - பனங்குருத்து, பனை.
போர்க்கதவு - இரட்டைக்கதவு.
போர்வாய்க்கதவம் - இரட்டைக்கதவு.
போரமைபுணர்ப்பு - இரட்டைக்கதவு.
போழ் - பிளப்பு.
போற்றுபு - பேணி.
பௌவம் - கடல்.
மசடூஉ - பெண்.
மகரப்பகுவாய் - சுறுவினது அங்காந்தவாயாகப் பண்ணின தலைக்கோலம்.
மகள் - மனைவி.
மகார் - பிள்ளைகள்.
மகிழ் - கள், மகிழ்ச்சி.
மகிழ்ப்பதம் - கள்.
மகுளி - எள்ளின்காயிலுள்ள அரக்கு.
மங்குல் - திசை.
மஞ்சிகை - ஒருவகைப்பெட்டி.
மஞ்சு - மேகத்தின்வெள்ளியபாகம்.
மடங்கல் - கூற்றுவன்.
மடம் - அஞ்ஞானம், மடப்பம்.
மடவரல் - மடப்பம் தோற்றுதல்.
மடவோர் - அறிவிலார், மங்கையர்.
மடி - மடிப்புடைவை.
மடிதல் - கிடத்தல், தவிர்தல், தொழிலற்றிருத்தல்.
மடிந்த - மறந்த.
மடிந்து - சோம்பி.
மடியா - திரையாத.
மடியின் - தங்கினால்.
மடிவாய் - வளைந்தவாய்.
மடுப்ப-ஊட்ட, எடுத்துக்கொடுப்ப.
மடை - சோறு, பலி, மூட்டுவாய்.
மண்டுதல் - தைத்தல், மிக்குச்செல்லுதல்.
மண்ணி - கழுவி, பண்ணி, பூசி.
மண்ணுறுத்து - பண்ணி.
மணக்கும் - கலக்கும்.
மணி - ஒலிக்கும் மணி, நீலமணி, பளிங்கு, மாணிக்கம்.
மணிக்குலை - நீலமணி போலும் கொத்து.
மணிச்சிகை - செம்மணிப்பூ.
மத்தம் - மத்து.
மத்திகை - குதிரைச்சம்மட்டி.
மத - மிகுதி, வலி.
மதர் - செருக்கு.

மதலை -கொடுங்கை, பற்றுக்கோடு.
மதன் - அழகு, அறியாமை, செருக்கு, வலிமை.
மந்தி - பெண்குரங்கு.
மயிர்குறைகருவி - கத்தரிகை.
மரபு - முறைமை. [வெண்கடம்பு.
மராம் - மராமரம், செங்கடம்பு,
மருகன் - குடியிலுள்ளான்.
மருங்கு - இடம், குலம், கூறு, நூ
மருங்குல் - இடை, உடம்பு. [ல்.
மருதம் - ஊடல், மருதநிலம், மருதப்பண். [வாசித்தல்.
மருதம்பண்ணல் - மருதப்பண்ணை
மருதிணர் - மருதம்பூ.
மருப்பு - கொம்பு, தண்டு, யாழின்
மருமான் - வழிவந்தோன்.[கோடு.
மரையான் - ஒருவகைவிலங்கு.
மலர்தலை - அகன்ற இடம். [மாய்.
மலிவனம் - மனவேட்கை மிக்கே
மலைக்கவான் - மலையின்குகை.
மலைச்சிலம்பு - மலைப்பக்கம்.
மலைத்தாரம் - மலைப்பண்டம்.
மலைமார் - சூடுதற்கு.
மழவர் - ஒருவகைவீரர்
மழு - கோடாரி.
மழை - குளிர்ச்சி, மேகம். [வீரன்.
மள்ளன் - இளமைப்பருவத்தோன்,
மறி - ஆட்டுக்குட்டி
மறு - குற்றம், தழும்பு.
மறுக - அரைக்க, உலாவ, கொண்டுபோக, சுழல.
மறுகி - பலகாலும் திரிந்து.
மறுகு - குறுந்தெரு.
மறை - மந்திரம், வேதம்.
மனவு - அக்குமணி.
மனையோள் - மனைவி.
மா - ஒரு நிலஅளவு, கருமை, குதிரை, பெருமை, மாமரம், மாமைநிறம், வண்டு, விலங்கு.
மாக்கள் - ஐயறிவேயுள்ள மனிதர்,
மாகம்-ஆகாயம், திக்கு.[மிலேச்சர்.
மாசுணம் - பெரும்பாம்பு.
மாட்ட - கொளுத்த.
மாட்டி - அழித்து, எரித்து.
மாண்ட - மாட்சிமைப்பட்ட.
மாத்திரை - அளவு, பருவம்.
மாதர் - காதல்.
மாதிரம் - ஆகாயம், திசை, மலை.
மாமை - கருமை.
மாய்க்கும் - மறைக்கும்.
மாயோய் - கரியநிறத்தையுடையவ
மார் : வினையெச்சவிகுதி. [னே.
மார்பு - வடிவு. [மை, மயக்கம்.
மால் - கருமை, திருமால், பெரு
மால்பு - கண்ணேணி.
மாலை - இயல்பு, பூமாலை, மாலைக்
மாழாந்து - மயங்கி. [காலம்.
மாறன் - ஒரு குறுநில மன்னன்.
மாறி - விற்று.
மாறியோர் - விற்றவர்.
மாறு - பகை.
மிசை - உச்சி, மேடு.
மிடைந்த - நெருங்கின.
மிண்டி - குத்தி.
மிதவை - குழைந்தகூழ், பாற்சோ
மிரியல் - மிளகு. [று.
மிலைச்சி - சூடி.
மிழற்றல் - சிலசொல்லுதல், மெல்
மிளிர - மேலாக. [லக்கூறுதல்.
மிளை - காவற்காடு, நிரை.
மீ - மேல்.
மீக்கூற்றம் - மேலாகியசொல்.
மீளி - கூற்றுவன்.
மீனெய் - மீனினதுநெய்.
முகடு - உச்சி.
முகம் - பக்குவம்.
முகிழ் - அரும்பு, தயிர்மேல் உள்ள
முகிழ்த்த - குவித்த. [புடைப்பு.
முச்சி - கொண்டை, மயிர்முடி.
முசுக்கலை - ஒருவகைக் குரங்கின்
முட்டா - குறைவுபடாத. [ஆண்.
முடலை - முறுக்கு.
முடிநர் - முடிவார்.
முடிமார் - முடிப்பவர்.
முடுக்கர் - நீர்குத்தின இடம்.
முடுக்கி - இறுகத்தைத்து.
முடுக்கிய - ஓடிக்கடித்த.
முடுவல் - பெண்நாய்.

முண்டகம் - கழிமுள்ளி.
முதல் - அடி, இடம், தறி.
முது - அறிவு.
முதுச்சுவர் - பழையசுவர்.
முதுபொழில் - நாவலந்தீவு.
முதுவெள்ளிலை - ஓரூர்.
முந்து - முற்பட.
முந்நீர் - படைத்தல் காத்தல் அழித்தலாகிய மூன்று நீர்மையையுடையகடல்.
முயங்கல் - தழுவுதல்.
முயங்குதல் - பிணைதல்.
முரஞ்சிய - முற்றிய.
முரண் - மாறுபாடு.
முரணிய - மாறுபட்ட.
முரம்பு - மேட்டுநிலம்.
முரல - கதற.
முரலும் - பாடும்.
முரவை - வரி.
முரற்கை - தாளம்.
முரற்சி - இசைப்பாட்டு.
முரியா - முறியாத.
முருக்கி - அழித்து.
முருக்கு - முண்முருங்கை.
முருகியம் - துடி, தொண்டகப்பறை.
முருகு - திருமுருகாற்றுப்படை, தெய்வத்தன்மை, மணம், முருகன், வேள்வி.
முல்லை-இருத்தல், ஒருகொடி, ஒருநிலம், முல்லைப்பாட்டு.
முழுக்குழவி - முற்பட்ட கன்று.
முழை - வளை.
முள்ளி - ஒருசெடி.
முளரி - ஒருமுட்செடி, தாமரை.
முளை - மூங்கின்முளை.
முற்றி - தங்கி.
முற்றிய - சூழ்ந்த, முடித்த.
முறி - இலை, தளிர்.
முறுவல் - பல்.
முன்னி - மேற்கொண்டு.
முனியல் - வெறுத்தல்.
முனிவு - வருத்தம்.
முனை - இடம், பகைப்புலம்.
முனைஇ - வெறுத்து.
மூடை - குதிர், பொதி, மூட்டை.
மூரல் - சோறு.
மூழ்கல் - அழுந்துதல்.
மெய்ப்பை - சட்டை.
மெல்குபு - மென்று.
மெழுக்கம் (மெழுக்கு)-மெழுகுதல்.
மே - பெருமை, பொருந்துதல், மேல்.
மேஎந்தோன்றிய - மேலாய் விளங்கிய.
மேஎய - மேவிய.
மேக்கு - மேல்.
மேதகு - பெருமைதகுகின்ற.
மேதி - எருமை.
மேந்தோல் - மேவினதோல்.
மேவர - பொருந்துதல் வர.
மேவல் - பொருந்துதல்.
மேனி - நிறம்.
மை - அஞ்சனம், ஆடு, கருமை, குற்றம், பிறப்பு.
மைந்தர் - வீரர்.
மைந்து - வலி.
மையலை - மயக்கத்தையுடையாய்.
மொக்குள் - கொப்புளம்.
மொய்த்தல் - செறிதல்.
மொய்ம்பு - வலி.
மோ : முன்னிலையசை.
மோகூர் - பழையனென்னுங் குறுநிலமன்னனது ஊர்.
மோடு - உடல், வயிறு.
மோதகம் - அப்பம்.
யவனர் - சோனகர்.
யா - ஒருமரம்.
யாணர் - செல்வவருவாய், புதுமை, புதுவருவாய்.
யாத்த - கட்டின.
யாப்பு - யாழ்ப்பத்தரிற் குறுக்கே வலிபெற ஓட்டுவது.
யாமை - ஆமை.
யாய் - தாய்.
யாவதும் - சிறிதும்.
யூகம் - கருங்குரங்கு.
யூபம் - குறைத்தலை, யாகத்தம்பம்.
வகுந்து - வழி.
வகுளம் - மகிழ்.
வட்டம் - ஆலவட்டம், சந்தனக்கல், பரிசை.
வட்டி - கடகப்பெட்டி.

வட்டில் - தட்டு. [ற்று.
வடந்தைத்தண்வளி - வாடைக் கா
வடபெருங்கல் - இமயம், மேரு.
வடமலை - மேரு.
வடவர் - வடநாட்டிலுள்ளார்.
வடி - வடு. [ளை உருவுதல்.
வடித்தல் - பிழிதல், யாழ் நரம்புக
வடு - அறல், உருக்கள், குற்றம்.
வண்டல் - மகளிர்விளையாட்டு.
வண்ணம் - குணம், நிறம்.
வண்மை - பெருமை.
வணக்கு - முடக்கு.
வணங்க - வளைய.
வணர்ந்து - வளைந்து.
வத்தம் - நெல். [மணமாலை.
வதுவை - கலியாணம்செய்தமகள்,
வந்தன்று - வந்தது.
வந்திகை - தோள்வளை.
வம் - வாரும்.
வம்பலர் - புதியோர்.
வம்பு - கச்சு.
வய (வயவு) - வலி.
வயக்கு - விளக்கம்.
வயங்கியோர் - விளங்கியவர்.
வயமான் - சிங்கம்.
வயவர் - படைத்தலைவர், வீரர்.
வயாஅம் - விரும்பும்.
வயிர் - ஊதுகொம்பு.
வயிரியர் - கூத்தர்.
வயின் - இடம், பக்கம்.
வரம் - வேண்டும்பொருள்.
வரல் - வரவு.
வரி - அறல், நிறம், பாட்டு, புகர்.
வரிசை - தரம்.
வருடை - ஒருவகைவிலங்கு.
வருதியர் - வருவீராக.
வரை - பக்கமலை, மலை, மூங்கில், மூங்கிற்கணு.
வரைக்கவான் - மலைக்குகை.
வரைந்தநாள் - எல்லையிட்டுவைத்த
வரைப்பகம் - குளம். [நாள்.
வரைப்பு - உலகு, ஊர், எல்லை, மதில்.
வல்சி - உணவு, சோறு, நெல்.

வல்லார் - வல்லமையில்லாதார்.
வல்லி - கொடி.
வல்வாயெல்லரி - ஒருபறை.
வலத்தல் - கட்டுதல்.
வலந்த - தெற்றிய.
வலந்தன - சூழப்பட்டன.
வலம் - வெற்றி.
வலம்புரி - ஒருதலைக்கோலம், ஒருவகைச்சங்கு, நந்தியாவட்டம்
வலவயின் - வெற்றிக்களம்.
வலவன் - பாகன்.
வலவா - கட்டாத.
வலன் - வெற்றி.
வழங்குநர் - கொடுப்போர்.
வழங்கும் - உலாவும்.
வழாஅல் - வழுக்குதல்.
வழி - இடம், ஏவல், கிளை, சுற்ற
வழித்த - பூசின. [ம், பின்.
வழிநடப்ப - ஏவல்கேட்ப.
வழீஇய - வழுவிய.
வழும்பு - குற்றம்.
வழூஉம் - வழுக்கும்.
வழை - சுரபுன்னை.
வழைச்சு - இளமை.
வள் - பெருமை.
வள்ளி - ஒருகூத்து, ஒருகொடி, வள்ளிநாய்ச்சியார், வளை.
வள்ளுயிர் - பெரிய ஓசை.
வள்ளை - உலக்கைப்பாட்டு.
வளம் - செல்வம், நுகர்பொருள்.
வளவன் - சோழன்.
வளன் - பயிர்கள்.
வளைஇ - வளைத்து, வளைந்து.
வளைஇய - சூழ்ந்த.
வளைகுபு - வளைத்துக்கொண்ட.
வளையோர் - வளையினையுடையமக
வறம் - பஞ்சகாலம். [ளிர்.
வறல் - உலர்தல்.
வறள் - நீரற்றஇடம், மணல்.
வறன் - பஞ்சகாலம்.
வறிது - சிறிது.
வறுங்கை - பூணணியாத கை.
வறை - பொரியல்.
வன்கண் - தறுகண்மை.

வன்புலம் - முல்லைநிலம்.
வன்றி - பன்றி.
வனப்பு - அழகு, இளமை, நிறம்.
வனம் - அழகு.
வாக்கிய - வடித்தொழுக்கிய,வார்த்த.
வாகை - அகத்தி, உழிஞ்சில் .
வாங்கி - வலித்து.
வாட்டு - பொரியல்.
வாடாமாலை - பொன்னரிமாலை.
வாடேன் - உப்புக்கண்டம்.
வாதி - தருக்கங்கூறுவோன்.
வாம் - தாவும்.
வாய் - இடம், வாய்மை.
வாய்த்தல் - தப்பாமை.
வாய்ப்புள் - நற்சொல்.
வாய்வது - உண்மை.
வாய்வாள் - தப்பாதவாள்.
வாயமைத்து - பொருந்தப்பண்ணி.
வாயில் - வழி.
வாயுறை - தாளுருவியென்னும்காதணி.
வார்தல் - அரிதல், ஒழுகுதல், தழுவுதல்.
வார்ந்த-நீண்ட,நேரிதாகிய.
வார்ந்தன்ன - ஒழுகின தன்மைத்தாகநெருங்கின.
வார்பு - ஒழுகி, கட்டி.
வாரணம் - கோழி.
வ[illegible]து - அரியாது.
வாரி - [illegible]ழுவி, யானையை அகப்படுத்தும் [illegible]டம், வருவாய்ப் பொருள், வழித்து.
வாருற்று - கோதி.
வால் - நன்மை, வெண்மை.
வாலவிழ் - வெண்சோறு.
வாலிணர் - வெள்ளியபூங்கொத்து.
வாலுவன் - உணவுசமைப்போன்.
வாழ்க்கை - தொழில்.
வாழ்தல் - வீற்றிருத்தல்.
வாழ்வேலி - உயிர்வேலி.
வாள் - இருசுடர், ஒளி, வலி, வாட்படை.
வான் - தேவருலகு, நன்மை, மேகம்.
வான்கண் - ஞாயிறு.
வான்கேழ் - நன்ருகியநிறம்.
வான்கோடு - வெள்ளியகொம்பு.
வானம் - ஆகாயம், தேவருலகு, மழை, மேகம், விசும்பு.

விசயம் - கருப்புக்கட்டி, வெற்றி.
விசி - பிணித்தல்.
விசும்பு -ஆகாயம், தேவருலகு, மேகம்.
விசை - வேகம்.
விசைத்து - உரங்கொண்டு.
விசையம் - பாகு.
விட்டு - தங்கி.
விடக்கு - இறைச்சி.
விடர் - குகை, வெடிப்பு.
விடுதல் - தோற்றுதல்.
விடை - ஆட்டுக்கிடாய், ஏறு, ஆண்யானை.
விண்ட - உடைந்த.
விண்டு - மலை.
விதிர்ப்ப - உதற.
விதுப்பு - நடுக்கம், விரைவு.
வியப்பு - அதிசயம், மேம்பாடு.
வியம் - ஏவல்.
வியல் - அகலம்.
விரகு - உபாயம், பண்ணியாரம்.
விராய - கலந்த.
விரிச்சி - நற்சொல்.
விரீஇ=வ்ரீகி ௨ நெல்.
விரை - சந்தனமுதலியன.
விரைஇ - கலந்து.
விரைஇய - தொடுத்த, பிசைந்த.
விரைமரம் - அகில், சந்தனம்.
விலங்கு - குறுக்கு, மான், மிருகம்.
விலோதம் - கொடி.
விழுமம் - வருத்தம்.
விழைதக - விரும்புதல் தகும்படி.
விளக்கம் - ஒளி, மோதிரம், விளக்கு.
விளக்கி - அறிவித்து.
விளக்குறுப்ப - விளக்க முறுத்தும்படி.
விளி - ஓசை.
விளிப்பது - இசைக்கும்பாட்டு.
விளிவு - கேடு.
விளைதயிர் - முற்றினதயிர்.
விளையுட்டு - விளைவையுடையது.
விளையுள் - விளைதல்.
விற்படை - வில்வீரர்படை.
விறல் - சத்துவம், வெற்றி.
விறலியர் - விறல்பட ஆடும்மகளிர்.
விறைய் - கேட்டு.
வினை - தொழில்,போர்த்தொழில்.

வினைஞர் - தொழில்செய்வார்.
வீ - பூ.
வீங்குதல் - இறுகுதல், மிகுதல்.
வீசுதல் - சிதறுதல்.
வீசும் - கொடுக்கும்.
வீட - போம்படி.
வீயாது - மாறாது.
வீவு- கேடு.
வீழ் - தாலி, விழுது.
வீழ்தல் -விரும்புதல்.
வீழ்ந்தன - கீழேவளர்ந்தன.
வீளையர்-சீழ்க்கையடிப்பவர்.
வீற்றிருத்தல் - வருத்தமின்றி யிருத்தல்.
வீற்றுவளம்-வேறொன்றற்கில்லாத செல்வம்.
வீறு - பொலிவு, வெற்றி, வேறொன்றற்கில்லாத அழகு.
வேடி - ஓசை, கேடு. [கிய மா.
வெண்காழ்மா - பலா விதையாலா
வெண்கூதாளம் - வெண்டாளிச் [செடி.
வெண்ணி - ஓரூர்.
வெண்புடைக்கொண்ட துய்த்தலைப்பழன் - புளியம்பழம்.
வெண்போழ் - தாழைமடல்.
வெண்மீன் - சுக்கிரன்.
வெதிர் - மூங்கில்.
வெம்மை - விருப்பம், வெப்பம்.
வெய்து - வெப்பம்.
வெரிந் - முதுகு.
வெரீஇ - அஞ்சி.
வெரு (வெரூஉ) - அச்சம்.
வெலீஇய - வெல்ல.
வெள்ளி - சுக்கிரன்.
வெள்ளில் - விளாமரம்.
வெள்ளிவள்ளி - வெள்ளியாலாகிய
வெள்ளை-வெள்ளாடு. [தோள்வளை.
வெளில் - யானையைக் கட்டுங் கம்
வெளிறு - உள்ளீடின்மை. [பம்.
வெற்றம் - வெற்றி.
வெறி - ஒழுங்கு.
வெறுக்கை - செல்வம்.
வெறுத்து - செறிந்து.
வென்வேல் - வெல்கின்றவேல்.
வேங்கை - ஒருமரம், புலி.
வேட்டம் - வேட்டை.
வேடு - வேட்டுவச்சாதி.
வேண்டு - விரும்புவாயாக.
வேண்டுப -வேண்டியபொருள்கள்.
வேத்தவை - அரசவை.
வேய் - மூங்கில், மூங்கிற்குழாய்.
வேய்த்து - பிறர் அறிந்துகொள்ளாதபடி அறிந்து.
வேய்வை - குற்றம்.
வேர் - வேர்வை.
வேரல் - சிறுமூங்கில்.
வேலன் - வெறியாட்டம்ஆடுபவன்.
வேலாழி - கரையையுடைய கடல்.
வேலி - எல்லை, ஒருநில அளவை, பயிர்களைச் சுற்றியிடும்காப்பு.
வேலூர் - உப்புவேலூர்.
வேவை - வெந்த பொரியல்.
வேழம் - கொறுக்காந்தட்டை, பேய்க்கரும்பு, யானை.
வேள் - முருகக்கடவுள்.
வேளாண் வாயில் - உபசரித்தற்கு
வேளிர் - குறுநிலமன்னர். [ரியவழி.
வேளை - ஒருசெடி.
வை - கூர்மை, வைக்கோல்.
வைகிய - தங்கிய.
வைகினிர் - தங்கினீர்.
வைப்பு - ஊர்.
வையம் - உலகம், சகடம்.
வௌவும் - வாங்கிக்கொள்ளும்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41